# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 32 | சுடர் 31 | கதிர் 244 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 12, புதன்கிழமை 27.07.2016





NATIONAL LOTTERIES BOARD


# பொருளாதார வலயம் இரண்டு இடங்களில் அமையும்

## சர்ச்சைக்கு முடிவுகட்ட பிரதமர் யோசனை

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்குக்கான பொருளாதார வலயத்தை இரண்டு இடங்களில் அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பணித்தார். அமைச்சரவைப் பத்திரத்தை இதற்குரிய வகையில் தயார் செய்யுமாறும் பிரதமர் அறிவுறுத்தியுள்ளதாக, நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

நடுவண் அரசின் அமைச்சரவைக் கூட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தின் போது, வடக்குப் பொருளாதார வலயத்துக்கான இடத் தெரிவில் நீடித்து வரும் சர்ச்சை குறித்து ஆராயப்பட்டது.

"வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் பொருளாதார வலயம் எங்கே அமைய வேண்டும் என்பது தொடர்பில் தெரிவித்துள்ள கருத்துக்களைப் புறக்கணிக்க முடியாது. அவற்றையும் கவனத்தில் கொள்ளவேண்டும். வடக்கு மாகாண முதலமைச்சர் எங்கே பொருளாதார வலயம் அமைய வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றாரோ அங்கே ஒரு பொருளாதார வலயத்தை நிறுவவும்.

பக். 06

# மிருகபலியைத் தடுக்க வருகிறது புதிய சட்டம்

## அமைச்சர் சுவாமிநாதன் தகவல்

கொழும்பு, ஜூலை 27

கோயில்களில் மிருகங்கள் பலியிடப்படுவதை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்துவதற்கான சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. மிகவிரைவில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் தெரிவித்ததாவது:

கோயில்களில் வேள்விகளின் போது ஆட்டுக்கடாக்கள் பலியிடப்படுவது இப்போது நீதிமன்றங்களினால் இடைக்காலத் தடை உத்தரவுகளின் அடிப்படையில் நிறுத்தி

பக். 06

# யாழ். பல்கலை. மாணவர்கள் எண்மருக்கு அழைப்பாணை

## அடிதடி வழக்கில் நீதிவான் மன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் ஏற்பட்ட மோதல் தொடர்பில் தமிழ் மற்றும் சிங்கள மாணவர்கள் 8 பேரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு யாழ்ப்பாண நீதிவான் மன்றம் நேற்று உத்தரவிட்டது.

4 தமிழ்மாணவர்களை எதிர்வரும் 25ஆம் திகதியும், 4 சிங்கள மாணவர்களை எதிர்வரும் முதலாம் திகதியும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நீதிமன்று கட்டளையிட்டது.

கடந்த 16ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட புகுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் கண்டிய நடனக் கலைஞர்களை சிங்கள மாணவர்கள் அழைத்து வந்தனர். இதனால் தமிழ் – சிங்கள மாணவர்களிடையே முறுகல் நிலை ஏற்பட்டதுடன் தாக்குதல் சம்பவங்களும் இடம்பெற்றன. இதில் 4 சிங்கள மாணவர்கள் காயமடைந்து யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பக். 04

# அரசுக்குள் இழுபறியே கோத்தா கைதில் தாமதம்



கொழும்பு, ஜூலை 27

அரசுக்குள் காணப்படும் இழுபறிநிலை காரணமாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவைக் கைது செய்வது தாமதமாகி வருகின்றது என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்

பக்.27

# பிரான்ஸ் தாக்குதலில் புங்குடுதீவைச் சேர்ந்த ஒருவரும் உயிரிழப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 27

பிரான்ஸ்நீஸ்நகரில் இடம்பெற்ற கொலைவெறித் தாக்குதலில் யாழ்ப்பாணம் - புங்குடுதீவைச் சேர்ந்த ஒருவரும் உயிரிழந்ததாக அவரின் குடும்ப உறவினர்களுக்கு நேற்று அறிவிக்கப்பட்டது.

பக். 06

## முச்சந்தி முரளி



ஒரு கல்லில் இரண்டு மாங்காய்

# கொழும்புக்கு இன்று வருகிறார் கனேடிய அயலுறவு அமைச்சர்

## வடக்குக்கும் வருவார்

யாழ்ப்பாணம், ஜூலை 27

13 ஆண்டுகளுக்குப் பின்னர் கனேடிய அயலுறவுத்துறை அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு வருகை தருகிறார். மூன்று நாள் பயணமாக இன்று மாலை கொழும்பு வந்தடையும், கனேடிய அயலுறவுத்துறை அமைச்சர் ஸ்ரீபன் டயோன், வடக்கு மாகாணத்துக்கும் பயணம் மேற்கொள்வார்.

கனேடிய அயலுறவுத்துறை அமைச்சர் இன்று மாலை கொழும்பு வந்தடைவார். நாளை வியாழக்கிழமை காலையில், இலங்கையின் அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்திப்பார். சந்திப்பின் முடிவில், இரு அயலுறவுத்துறை அமைச்சர்களும் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்துவர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரையும் கனேடிய அமைச்சர் சந்திப்பார்.

பக்.27

# சைக்கிளில் சென்ற முதியவரை காவு கொண்டது சொகுசுக் கார்

## பரந்தனில் நேற்று அதிகாலை துயரம்





பரந்தன், ஜூலை 27

கட்டுப்பாட்டையிழந்த சொகுசுக் கார் வீதியோரம் சைக்கிளில் பயணித்த முதியவரை மோதித்தள்ளியது. விபத்தில் படுகாயமடைந்த முதியவர் வைத்தியசாலையில் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பரந்தனில் நேற்று அதிகாலை 5.35 மணியளவில் விபத்து இடம்பெற்றது. அதில் அதே இடத்தைச் சேர்ந்த சண்முகன் (வயது - 64) என்பவரே உயிரிழந்தார். புத்தளத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த காரின் சாரதி நித்திரையாகியதால் கார் கட்டுப்பாட்டை இழந்து முன்னால் சைக்கிளில் சென்றவருடன் மோதியதாலேயே விபத்து இடம்பெற்றதாக

பக். 06

# தமிழரின் பிரச்சினையை சிங்கள மக்கள் அறிந்தால்தான் நல்லிணக்கம் ஏற்படும்

## செயலணியிடம் எடுத்துரைத்தனர் முல்லை. பெண்கள் அமைப்பினர்

முல்லைத்தீவு, ஜூலை 27

தமிழ் மக்களின் உண்மைப் பிரச்சினைசிங்களமக்களுக்குத் தெரிவதில்லை. அரசியல் வாதிகள் தங்கள் சுயநல இலாபத்துக்காக அவற்றை மறைக்கிறார்கள். தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் சிங்கள மக்களுக்கு அறிய வைப்பதன் ஊடாகவே ஆரோக்கியமான நல்லிணக்கத்தை எட்டமுடியும்.

இவ்வாறு நல்லிணக்கச் செயலணியிடம் எடுத்துரைத்தனர் முல்லைத்தீவு பெண்கள் அமைப்பான சங்கமே அமைப்பினர்.

சட்டத்தரணி மனோரி முத்தெட்டுவேகம தலைமையிலான 11 பேர் அடங்கிய செயலணியினரால் நல்லிணக்கப் பொறிமுறை அமைப்பது தொடர்பான மக்களுடைய கருத்தறியும் அமர்வு நேற்று முல்லைத்தீவு கரை

பக். 04


1717 FOLLOW US www.mobitel.lk

அரச சேவைக்காக

அரச சேவையாளர்களின் பணியை கௌரவிக்கும் உபஹார மீண்டும்!

அரச பணியிலுள்ள உங்கள் அனைவருக்கும் விசேட சேவையை வழங்குவதற்காக மீண்டும் மொபிடெல் உபஹார. இலவச நவீன ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசியுடன் பெறுமதியான பிற்கொடுப்பனவு பெக்கேஜ்.





நவீன ஸ்மார்ட் ஃபோன் இலவசம்
மாதாந்தம் M2M நிமிடங்கள் 500
2GB தரவுப் பொதி*
இவையனைத்திற்கும்
மாதாந்த வாடகை ரூ.749/-

Sri Lanka Telecom Mobitel

TRC/CT/01/04/20/STP/16-01 *நிபந்தனைகள் உண்டு. அரச வரிகள் மற்றும் கட்டணங்களுக்குட்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டுமொரு அழிவை சந்திப்பதற்கு தமிழர் ஒருபோதும் விரும்பவில்லை

## நல்லிணக்க செயலணியிடம் தெரிவித்தார் முல்லை. கடற்றொழிலாளர் சமாச தலைவர்



தமிழ் மக்கள் அழிக்கப்பட்டவர்கள் – அழிந்தவர்கள். எனவே மீண்டும் ஒரு அழிவை சந்திக்க நாம் விரும்பவில்லை.

இவ்வாறு நல்லிணக்க செயலணியிடம் தெரிவித்தார் முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அன்ரனி மரியராசா.

சட்டத்தரணி மனோரி முத்தெட்டுவேகம தலைமையிலான 11 பேர் அடங்கிய செயலணியினரால் நல்லிணக்கப் பொறிமுறை அமைப்பது தொடர்பான மக்களுடைய கருத்தறியும் அமர்வு நேற்று முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்டது. இதில் முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அன்ரனி மரியராசா கலந்து கொண்டு கருத்துக்களை முன் வைத்தார்.

முல்லைத்தீவு மீனவர்கள் கடந்த காலங்களில் எதிர் நோக்கி வந்த பிரச்சினைகளுக்கு தற்போது நல்ல தீர்வுகள் எட்டும் நிலை உருவாகியுள்ளன. நாங்கள் எடுக்கும் முயற்சி எல்லாச் சமூகத்தினர் மத்தியிலும் அமைதியானதொரு தீர்வாகவே அமைகின்றது. நாங்கள் இங்கு அமைதியாக தொழில் செய்யவேண்டும். ஏனைய சமூகத்தைச் சேர்ந்த மக்களும் தொழில் செய்யவேண்டும் என்பதுதான் எங்களது எண்ணம். ஆனால் சில சக்திகள் கடந்த காலத்தில் எப்படி நாங்கள் பெரும் வடுக்களைச் சந்தித்தோமோ, அந்த வடுக்களை திரும்பவும் கொண்டுவருவதற்கு முயற்சி எடுப்பதாகவே நாங்கள் கருதுகிறோம்.

மீனவர்களுடைய பிரச்சினை தொடர்பாக நேர்மையான – நியாயமான தீர்வுவேண் டும். எங்கள் மாவட்டத்தினுடைய மீன்பிடி சார்ந்த முடிவுகளை எடுக்கும் அனைத்து கூட்டங்களிலும் முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் நிச்சயமாகக் கலந்துகொள்ள வேண்டும் என வலியுறுத்துகின்றோம் – என்றார் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர். (வ-ரி7)

# ஹெரோயின் வைத்திருந்தவருக்கு ஆயுட்கால சிறைத் தண்டனை

## குற்றமற்றவர் என விடுவிக்கப்பட்டவர் தீர்ப்புக்கு முன்தினமே உயிரிழப்பு

வவுனியா, ஜூலை 27

ஹெரோயினை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரில் ஒருவருக்கு 6 வருடங்களின் பின்னர் ஆயுட்கால சிறைத் தண்டனை வழங்கினார் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர்.

இரண்டாவது சந்தேக நபர் குற்றம் அற்றவர் எனத் தெரிவித்த நீதிமன்று, அவரை விடுலை செய்தது. ஆனால் அவர் தீர்ப்பு வழங்கப்படும் திகதிக்கு முதல் நாளே வவுனியா சிறைச்சாலையில் இறந்துள்ளதாக பொலிஸாரால் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2010ஆம் ஆண்டு ஹெரோயின் போதைப் பொருளை வியாபாரம் செய்ததாகவும், உடமையில் மறைத்து வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டு வவுனியா பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கடந்த ஆறு வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை தீர்ப்புக்காக எடுத்துகொள்ளப்பட்டது.

முதலாவது சந்தேக நபருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ஹெரோயின் போதைப் பொருள் 40.02 கிராமினை வியாபாரம் செய்தார், என்ற முதலாவது குற்றச்சாட்டுக்கு அவர் குற்றம் அற்றவர் என்று மன்றினால் கருதப்பட்டது. அவர் இந்தக் குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். எனினும் அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த இரண்டாவது குற்றச்சாட்டான 40.02 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை தனது உடமையில் மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் அவர் மன்றினால் குற்றவாளியாக கருதப்படுகிறார். இதனால் குறித்த சந்தேக நபருக்கு ஆயுட்கால சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர்.

இரண்டாவது சந்தேகநபர், எந்த குற்றங்களிலும் தொடர்புபடாதவர் என்று கூறப் பட்டு அவர் விடுதலை செய்யப்பட்டார். எனினும் தீர்ப்பு வழங்குவற்கு முதல் நாளான கடந்த வியாழக்கிழமை இரவு இரண்டாவது சந்தேக நபர் அனுராதபுரம் சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்ததாக பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். (வ-21)

# தேனீ கொட்டியதில் குடும்பத்தலைவர் சாவு

## தவசிகுளம் காட்டுக்குள் தேன் எடுக்கச் சென்றபோது பரிதாபம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

மிருசுவில் தவசிக்குளம் காட்டுப் பகுதிக்குள் தேன் எடுக்கச் சென்ற குடும்பத் தலைவர் தேனீயின் கொட்டுக்கு இலக்காகி சாவடைந்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வீட்டில் இருந்து தேன் எடுக்கவென காட்டுப் பகுதிக்குள் சென்ற அவர், மாலை வரை வீடு திரும்பவில்லை. இதனால் உறவினர்கள் காட்டுக்குள் சென்று பார்த்தபோது, தேனீயின் கொட்டுக்கு இலக்காகிய அவர் உயிரிழந்து கிடப்பதைக் கண்டார்கள்.

மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த சின்னப்பா அழகேந்திரன் (வயது – 48) என்பவரே இவ்வாறு தேனீயின் கொட்டுக்கு இலக்காகி சாவடைந்தவராவார். அவரது சடலம் உடற்கூற்றுப்பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பிரதே அறையில் வைக்கப்பட்டுள்ளது. (வ-ரி, 9)

# வெடிக்காத குண்டு மீட்பு

தென்மராட்சி, ஜூலை 27

தோட்டக் காணியை துப்பரவு செய்தபோது வெடிக்காத நிலையில் குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று மட்டுவிலில் நடந்தது.

அது குறித்து சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் அவ்விடத்துக்கு பாதுகாப்பு ஏற்படுத்திய பின்னர் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் அதிரடிப் பொலிஸார் மூலம் குண்டை செயலிழக்கச் செய்யுமாறு உத்தரவிட்டார். (ற-9)

# கொக்கிளாய் விகாரை விவகாரம் நீதிமன்றம் செல்லத் தீர்மானம்

முல்லைத்தீவு, கொக்கிளாய் பகுதியில் தனியார் காணியில் அத்துமீறி அமைக்கப்படும் விகாரை தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. காணி உரிமையாளரும் பொது அமைப்புக்களும் இணைந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தமது காணியில் அடாத்தாக விகாரை அமைக்கப்படுவதாக வடக்கு மாகாண சபை மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைத்து தரப்பினரிடமும் காணி உரிமையாளர் முறையிட்டிருந்தார். எனினும் விகாரை அமைக்கும் பணிகள் தொடர்கிறது.

இந்த நிலையில் விகாரை அமைக்கும் விகாராதிபதிக்கும், அவருக்கு குறித்த காணியினை வழங்கியதாக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளருக்கும் எதிராக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (வ-101)



போருக்குப் பின்னர் முதன் முறையாக கிளிநொச்சியில் இருந்து பூநகரி ஊடாக முழங்காவிலுக்கு நேற்றுமுன்தினம் தனியார் பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

முழங்காவில் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள், பொதுமக்கள் நலன் கருதியே இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டதாக கிளிநொச்சி மாவட்ட தனியார் பஸ் சேவை சங்கத்தினர் தெரிவித்தனர். முழங்காவில் பஸ் நிலையத்தில் இருந்து காலை 7.15 மணி மற்றும் [illegible] மணிக்கு கிளிநொச்சி நோக்கியும், கிளிநொச்சியில் இருந்து மாலை 2.15 மணி மற்றும் 4.15 மணிக்கு முழங்காவில் நோக்கியும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (வ-21)

# இன ஒற்றுமையைக் கட்டியெழுப்பாது முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வீண்

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில் இன ஒற்றுமையைக் கட்டி எழுப்பாது அபிவிருத்தியை முன்னெடுத்தால், ஒரு காலத்தில் அது உடைந்து விழுந்துவிடும். எனவே முதலில் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை கட்டியெழுப்பவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன்.

வவுனியா சுற்றுவட்ட வீதியிலுள்ள கிராம அபிவிருத்தித்திணைக்களத்தில் உதவிப்பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் அமைச்சர் டெனீஸ்வரன் கலந்துகொண்டார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

“இன வேறுபாடின்றி எங்களுடைய மாகாணத்தைக் கட்டியெழுப்பவேண்டுமென்பதே எங்களுடைய நோக்கமாக இருக்கின்றது. பசி பட்டினி எல்லோருக்கும் ஒன்றுதான். அடுத்தவர்களுக்கு தீங்கு இழைக்காமல் நாங்கள் வாழவேண்டும். அதைத்தான் எங்களுடைய சமயங்கள் போதிக்கின்றன. எந்தவொரு சமயமும் வன்முறையை கையில் எடுக்கும் படி எமக்கு போதிக்கவில்லை. இங்கிருக்கின்ற சமயத்தலைவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து சமய ஒற்றுமையையும் இன ஒற்றுமையையும் வளர்த்துக் கொள்ளுங்கள். பிரதேச வாதம், சமயவேறுபாடுகள் இன்றி ஒன்றிணைந்து எங்களுடைய பிரதேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். பல வருடங்களாக இடம்பெற்ற போரிலிருந்து மீண்டு வந்திருக்கின்றோம். எங்களுடைய பிள்ளைகளாவது ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழவேண்டும். எல்லோரும் சுதந்திரமாகவும் அடிப்படை உரிமைகளுடனும் வாழ வேண்டும். பிரச்சினைகள் வரும் போது இனரீதியில் எடுக்காது, அதனை அப்படியே விட்டு விடவேண்டும். ஏன் இதை சொல்கிறேன் என்றால், ஒரு தமிழ் இளைஞனும் சிங்கள இளைஞனும் சண்டைபோட்டால் தமிழ் சிங்கள பிரச்சினையாக மாறி விடுகின்றது. அதே போல இஸ்லாமிய இளைஞனும் தமிழ் இளைஞனும் சண்டையில் ஈடுபட்டால், அது இரு இனங்களிடையேயும் பிரச்சினையை ஏற்படுத்திவிடுகின்றது– என்றார். (வ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொறகஹாகந்த தண்ணீர்ப் பங்கீட்டில் வடக்கு அரசின் பங்களிப்பு அவசியம்

## மாகாண சபை உறுப்பினர்கள் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 27

வட மத்திய மாகாணத்துக்கும், வடமாகாணத்துக்கும் இடையில் தண்ணீர்ப் பங்கீடு செய்யும் வகையில் மகாவலித் திட்டத்தை விரிவுபடுத்தும் மொறகஹாகந்த திட்டத்தில் வடக்குஅரசின் பங்களிப்பு இடம்பெற்றிருக்கவேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் சபை உறுப்பினர்கள்.

மொறகஹாகந்த தண்ணீர்ப் பங்கீட்டுத் திட்டம் தொடர்பிலான முக்கிய சந்திப்பு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சின் செயலாளர், இந்தத் திட்டத்துக்கு நிதியுதவி வழங்கியுள்ள ஜெய்க்கா என்ற ஜப்பானிய நிறுவனத்தின் அதிகாரிகள், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நீர்வழங்கல், வடிகால் அமைப்பு சபை ஆகியவற்றின் உயரதிகாரிகளும் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், மாகாண அமைச்சர்கள். உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இலங்கையின் முக்கிய ஆறாகிய மகாவலி கங்கை 1979ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மகாவலி அதிகார சபையின் ஊடாக வடக்கு நோக்கி திசை திருப்பப்பட்டு, கிழக்கு மாகாணத்தின் பல தமிழ்ப் பிரதே சங்களில் சிங்கள மக்கள் புதிதாகக் குடியேற்றப்பட்டிருக்கின்றார்கள். இதனால் கிழக்கு மாகாணத்தின் தமிழ் மக்களின் குடிப்பரம்பல் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, மொறகஹா கந்த திட்டத்தின் கீழ், வடக்கு மாகாணத்தில் அவ்வாறான சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறக் கூடும் என்ற அச்சம் இருக்கின்றது என வடக்கு மாகாணசபையினர் தெரிவித்த னர்.

இந்த நிலையில் காணி விடயங்கள் உள்ளிட்ட பல முக்கிய விடயங்களுக்குப் பொறுப்பாக இருந்து செயற்பட்டு வருகின்ற வடக்கு மாகாண சபையின் ஆலோசனைகள் உள்ளடக்கப்படுவதுடன், வடமாகாண சபையின் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப அதிகாரிகளும் இந்தத் திட்டத்தில் செயற்படுவதற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மொறகஹாகந்த திட்டத்தில் இருந்து வவுனியா மாவட்டத்துக்குக் கொண்டு வரப்படும் தண்ணீர் இந்த மாவட்டத்தில் உள்ள கனராயன்குளம் ஆற்றின் ஊடாக பல விவசாயக் குளங்களுக்கும் ஒரு வலையமைப்பு ரீதியில் பங்கீடு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது.

வட மாகண சபையினரின் கருத்துக்களைச் செவி மடுத்த அதிகாரிகள், இது தொடர்பாக நடுவண் அரசின் உயர் மட்டத்தின் கவனத்துக்குக் கொண்டு வருவதாக உறுதியளித்தாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார். (வ-5)

---

### ஆடி அமாவாசைக்கு கடைகள் பூட்டு

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக் குட்பட்ட அனைத்து வணிக நிலையங்களும் ஆடி அமாவாசையை முன்னிட்டு எதிர்வரும் இரண்டாம் திகதி வியாபார நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு மூடப்படும் என்று மன்றத் தலைவர் ந.சிவபாலன் தெரிவித்தார். (ற-9)

---

### கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம். பருத்தித்துறை வீதி. சிறுப்பிட்டியில் கடை. கட்டடம் வாடகைக்குண்டு. கடை. மருத்துவ நிலையம். மற்றும் அரச/அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது. முற்பணம் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

kowsalasakthi@gmail.com
076 554 8598

### மணமகள் தேவை

யாழ் இந்து 1983 உத்தரம் நட்சத்திரம் கிரகபாவம் 3½ யாழ்ப்பாணத்தில் தனியார் தொழில் புரியும் மண மகனுக்கு மண மகளை எதிர்பார்க்கின்றோம்.

077 4493615

### பணியாளர்கள் தேவை

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் அமைந்துள்ள சிவகுரு காட்வெயர் நிறுவனத்திற்கு ஐந்து வருட அனுபவமுள்ள கீழ் குறிப்பிடும் பணியாளர்கள் தேவை. உரிய தகைமை உள்ளோர் உடனடியாகவும் நேரடியாகவும் தொலைபேசி மூலமும் தொடர்பு கொள்ளவும்.

1. முகாமையாளர்
2. கணக்காய்வு உத்தியோகத்தர்
3. சிமெந்து விற்பனை வெளிக்கள உத்தியோகத்தர்
4. கணக்காளர்
5. எழுதுனர்
6. மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள் விற்பனையாளர்
7. லொறிச் சாரதி


சிவகுரு காட்வெயர்
A9 வீதி, கரடிப் போக்குச் சந்தி,
கிளிநொச்சி.
தொலைபேசி: 077 3207739

### பெயர்மாற்றம்

**ஜெயகோபால் கோபிகா** ஆகிய நான் புனித இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக் கொண்டு **பாத்திமா ஹசீனா ஜெயகோபால்** என்று எனது பெயரை மாற்றிக் கொண்டு இனி வரும் காலங்களில் எல்லா ஆவணங்களிலும் இப் பெயரையே பாவிப்பேன் என்று இலங்கை ஜனநாயகக் குடியரசின் நாட்டு மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

பாத்திமா ஹசீனா

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



**கனகரத்தினம் வசந்தரூபன்**

**B.A.(Hons)P.G.D.E, M.A (Hons) S.L.P.S III**

எமது பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர் கனகரத்தினம் வசந்தரூபன் இலங்கை அதிபர் சேவை தரம் **III** இல் சித்தி பெற்று இலங்கை அதிபர் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
கிளி/முக்கொம்பன் அ.த.க. பாடசாலை, பூநகரி.

### காணவில்லை



யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த (86) வயதுடைய **பொன்னு இரத்தினம்** என்ற வயோதிபரை கடந்த 24.07.2016 ஞாயிற்றுக்கிழமை அன்று காணாமல் போயுள்ளார். இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**வெள்ளை நிற வேட்டி, றோஸ் கலர் சேட் அணிந்திருந்தார்.**

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
கோகுலன் - 077 1377506

கோடிபதி ஷனிதா
031
2016-07-26
அடுத்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ.88,666,880/-
ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
R 04 07 11 18
தொ.பே. 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது நுரித அழைப்பு: 011 4 824 824

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 26.07.2016
வெற்றி வாரம் 2009
நீலம்
வெற்றி இலக்கங்கள்
13 14 29 31
வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 3,270,040/-
2016-07-29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்.
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919

நியத்த ஜய
வெற்றி வாரம் 482
திகதி 26-07-2016
மஞ்சள்
11 17 48 50 B
எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ.10,237,600/-
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919

### UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

**WALK-IN-INTERVIEW**

Faculty of Arts

Attention is drawn to the advertisement inviting candidates for a Walk in interview on 28th and 29th July 2016 for the post of **Temporary Lecturers / Temporary Tutors / Temporary Instructors** for the Faculty of Arts. It is hereby notified that above scheduled Walk in interview has been postponed due to unavoidable circumstances. The new dates will be notified later.

**Registrar,**
University of Jaffna. 26.07.2016

### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் : 11**
**ஆதன இல: 48/24A, 48/25, 48/26 (புதிய பதிவு)**
**வீதி: கொத்துக்கட்டி வீதி,**
**கிராமசேவையாளர் பிரிவு - J/136 நாவலி தெற்கு**

வட்டாரம் 11 கொத்துக்கட்டி வீதி, ஆதன இல. 48/24A., 48/25, 48/26 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்கு பகுதி மானிப்பாய், கோவிற்பற்று, நவாலி இறை அந்திரான் என்னும் பெயருள்ள நெற்பரப்பு மொத்தமாக 7 பரப்பு குளி 02.83 கொண்ட இவ்வாதனத்தில் நெற்பரப்பு 02 குளி 4.56 கொண்ட ஆதனம் யாழ்ப்பாணம், நவாலி தெற்கைச்சேர்ந்த சுந்தரலிங்கம் தனராஜ் பெண் மஞ்சுளா ஆகிய இவர்களால் அதே இடத்தைச் சேர்ந்த நாகமுத்து பரமசிவம் பெண் ஜெயமலர்தேவி ஆகியோருக்குப் பிரசித்த நொத்தாரிஸ் திரு.மா.தியாகராசா அவர்கள் முகதாவில் நிறைவேறிய 7567 ஆம் இலக்க 17.11.2004ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் வழங்கப்பட்டு பின்னர் நாகமுத்து பரமசிவம் பெண் ஜெயமலர்தேவி அவர்களால் அதே இடத்தைச் சேர்ந்த இரத்தினம் கைம்பெண் புஸ்பராணி அவர்களுக்குப் பிரசித்த நொத்தாரிஸ் திரு.நா.அரியபுத்திரன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 958 இலக்க 2011.05.07 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் வழங்கப்பட்டுள்ளது.

நெற்பரப்பு 02 குளி 02.04 கொண்ட ஆதனம் யாழ்ப்பாணம் நவாலி தெற்கைச் சேர்ந்த சுந்தரலிங்கம் தனராஜ் பெண் மஞ்சுளா ஆகிய இவர்களால் அதே இடத்தைச் சேர்ந்த சின்னையா தேவராஜா பெண் தவமணி ஆகியோருக்கு பிரசித்த நொத்தாரிஸ் திரு.மா.தியாகராசா அவர்கள் முகதாவில் நிறைவேறிய 7569ஆம் இலக்க 17.11.2004ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் வழங்கப்பட்டுப் பின்னர் சின்னையா தேவராசா பெண் தவமணி அவர்களால் தமது மகன் திரு.தேவராஜா தர்மேந்திரன் பிரசித்த நொத்தாரிஸ் திரு.மா.தியாகராசா அவர்கள் முகதாவில் நிறைவேறிய 11721ஆம் இலக்க 17.02.2010ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் வழங்கப்பட்டுள்ளது.

நெற்பரப்பு 02 குளி 02.83கொண்ட ஆதனம் யாழ்ப்பாணம், நவாலி தெற்கைச் சேர்ந்த சுந்தரலிங்கம் தனராஜ் பெண் மஞ்சுளா ஆகிய இவர்களால் அதேஇடத்தைச் சேர்ந்த கந்தையா துரைசிங்கம் பெண் பஞ்சவர்ணம் ஆகியோருக்கு பிரசித்த நொத்தாரிஸ் திரு.மா.தியாகராசா அவர்கள் முகதாவில் நிறைவேறிய 7568ஆம் இலக்க 17.11.2004ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் வழங்கப்பட்டுப் பின்னர் துரைசிங்கம் பெண் பஞ்சவர்ணம் அவர்களால் தமது மகளான இராஜசிங்கம் செல்வகுமார் பெண் கவிதா அவர்களுக்குப் பிரசித்த நொத்தாரிஸ் திரு.மா.திருவாதவூரன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 1086ஆம் இலக்க 04.09.2005ஆம் திகதிய சீதன உறுதி மூலம் வழங்கப் பட்டுள்ளது.

நில அளவையாளர் திரு.கே.செல்வரட்ணம் அவர்களால் வரையப்பட்ட 904ஆம் இலக்க 2004.11.15ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது அந்திரான் நெற்பரப்பு 01 துண்டு பரப்பு 02 குளி 04.56, 02ஆம் துண்டு பரப்பு 02 குளி 02.04, 3ஆம் துண்டு பரப்பு 02 குளி 02.83 கொண்டகுறித்த ஆதனங்களின் பெயர்மாற்றம் தொடர்பாக எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) பதிவேட்டில் உட்புகுத்துவது தொடர்பாக விண்ணப்பம் செய்துள்ளனர். குறித்த பெயர் மாற்றங்கள் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது ஆதன இலக்கங்கள் முறையே இரத்தினம் கைம்பெண் புஸ்பராணி தேவராஜா தர்மேந்திரன், செல்வகுமார் மனைவி கவிதா என்பவர்கள் பெயருக்குப் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

யோகாஸ் ஆடையகத்துக்கு காசாளர்.
விற்பனை உதவியாளர்கள் தேவை.
வார நாள்களில் நேரில் வரவும்.

**யோகாஸ் ஆடையகம்**
**இல.15,16, பெரிய கடை,**
**யாழ்ப்பாணம்.**

## வேலையாள் தேவை

செல்லப்பிராணிகள் விற்பனை செய்யும் கடை ஒன்றுக்கு 25 வயதுக்குட்பட்ட ஆண் வேலையாள் தேவை. மதிய உணவும், 20,000/= சம்பளமும் வழங்கப்படும்.

**021 791 2997**

## காணியும் வீடும் விற்பனைக்குண்டு

பலாலி வீதி, திருநெல்வேலி (சந்திக்கு அருகில்) எனும் இடத்தில் (பெற்றோல் செற் அருகில்) அமைந்துள்ள நில.பர. 5குளி 16.5 விஸ்தீரணம் கொண்ட ஆதனம் விற்பனைக்குண்டு. (J 3242) (14,17,18)

**076 607 1850 / 077 844 5075**

## தையலாளர் தேவை

நெல்லியடியில் இயங்கும் மகளிர் தையல் நிலையத்திற்கு பெண் தையலாளர் தேவை.
வேலைக்கேற்ப வேதனம் வழங்கப்படும்.

**077 171 0201**

## தவறிவிட்டன

உரும்பிராய் மேற்கு, உரும்பிராயைச் சேர்ந்த S. ஸ்ரீரகுநாதன் என்பவரது மோட்டார் சைக்கிள் பதிவுப் புத்தகம், வரிப்பத்திரம், வாகன மாற்றுப் பதிவுப் புத்தகம் என்பன கடந்த 23.07.2016 அன்று நெல்லியடிக்கும் குஞ்சர் கடைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொ.பே. 077 654 4507, 077 972 1487

## Ms Material Suppliers

கிரவல், மணல், 6x9, 4x4, 2x2,1", சல்லி, சிப்ஸ், டஸ்ட் போன்றவற்றையும் மற்றும் ஒப்பந்தத் தரகர்களுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் எங்களால் தங்களுக்கு விநியோகிக்க முடியும். (K/111) (11,18)

**விநியோகம் : கிளிநொச்சி, யாழ்ப்பாணம்.**

தொடர்புகளுக்கு: **076 967 2408**

## விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## கணக்குப்பிள்ளை (முகாமையாளர்)

**பதவி வெற்றிடம்**

அருள் மிகு ஸ்ரீ ஆதிவிநாயகர் தேவஸ்தானத்திற்கு முகாமையாளர் பதவி வெற்றிடம் உள்ளது. இதற்குத் தகுதியானவர்கள் 20.08.2016 இற்கு முன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தலைவர் - **அருள் மிகு ஸ்ரீ ஆதிவிநாயகர் தேவஸ்தானம்.** (வி.74) (13.18)

**வைரவப் புளியங்குளம், வவுனியா.**

**தொ.பே. 024 222 5073, 077 764 9592**

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## பகிரங்க கேள்வி அறிவித்தல்

**இடம்: தலைமை அலுவலகம்,சுன்னாகம்**
**காலம்: 29.07.2016**
**நேரம்: முற்பகல் 10.00 மணி**
**விடயம்:** மருதனார்மடம் பொதுச் சந்தைப் பகுதியில் அமைந்துள்ள பயன்பாடற்ற அரங்கினை இடித்து அகற்றுதல்.
ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் வைப்புப் பணம் ரூ.1000.00 இனை அலுவலகத்தில் செலுத்தி பதிவு செய்து கொள்ளவும். மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்**
**வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**

## பகுதிநேர வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு, காப்புறுதி ஆலோசகராக, யாழ். மண்ணில் 50 வருடங்களாகச் சேவையாற்றி வரும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்ற வாய்ப்பு.

* 2 வாரப் பயிற்சிக் காலத்தையுடையது.
* பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
* பணி நிலையங்கள்:
  யாழ்ப்பாணம், நெல்லியடி, சங்கானை

### அடிப்படைத் தகைமைகள்

* G.C.E.(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
* 18- 55 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக்கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை **10.08.2016** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**விளம்பர இல: 5110**
**C/O உதயன்,**
**361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.**

## வேலைவாய்ப்பு

கட்டட நிர்மாணம், குடிசார் பொறியியல் நிர்மாணப் பணியில் வளர்ந்துவரும் நிறுவனத்துடன் சேர்ந்து இயங்குவதற்குத் துடிப்பும் ஆர்வமும் உள்ளவர்களுக்குப் பின்வரும் பதவி வெற்றிடங்கள் காத்திருக்கின்றன.

1. Technical Officers (NDES, HND(Civil), NCT (Civil) with or without Experience) Willing to work anywhere in Northern Province
2. Quantity Surveyor (HND (QS),NCT(QS) or Equivalent with experience)
3. Electrician (NCT(Elect), or Equivalent)
4. Office Assistant (A/L Any subject, Age below 30yrs with driving License & Computer Knowledge)
5. Store Keeper (A/L Any Subject, Age below 30yrs with driving license & Computer Knowledge)

திறமை, அனுபவம், வேலை செய்யும் ஆற்றல் என்பவற்றுக்கு ஏற்ப வேதனம் வழங்கப்படும். வேலை செய்யும் போது Technical Officer, Quantity Surveyor இற்கு அவர்களின் தகுதியை வளர்த்துக்கொள்ளும் விதத்தில் கம்பனியில் பயிற்சிகள் வழங்கப்படும்.

தகுதியானவர்கள், ஆர்வமுள்ளவர்கள் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு நேரில் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

தொடர்புகளுக்கு: 077 712 0945, 021 221 3663

**No.207, Navalar Road, Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரின்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைப் பற்றுப் பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்டது. போரில் கொல்லப்பட்ட அப்பாவி மக்கள், விடுதலைப் புலிகள் அமைப்பில் போராளிகளாகவிருந்து சாவடைந்தவர்கள் ஆகியோரின் நினைவேந்தலை சுதந்திரமாக நினைவு கூருவதற்கு நல்லாட்சி அரசு அனுமதிக்கவேண்டும், இராணுவத்தினரின் வேலை நாட்டை பாதுகாப்பதே. அதனை விடுத்து சிவில் அமைப்புக்களில் தங்கள் அதிகாரங்களை செலுத்தக்கூடாது. அதனை இராணுவம் நிறுத்தவேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் படித்த இளைஞர்கள் இருக்கும்போது பெரும்பான்மை இனத்தவர்களின் நியமனங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என சங்கமே அமைப்பினர் நல்லிணக்க செயலணியினரிடம் தங்களது கருத்துக்களை முன்வைத்தனர்.

நேற்று நடைபெற்ற அமர்வில் காலை 9.00 மணியில் இருந்து மாலை நான்கு மணிவரைக்கும் மாவட்டத்தைச் சேர்ந்த 23 அமைப்புக்கள் அமைப்பு ரீதியாக தங்களுடைய கருத்துக்களை முன்வைத்தன மற்றும் தனிநபர்களும் கலந்து கொண்டு தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தனர்.

நல்லிணக்கச் செயலணியின் மக்கள் கருத்தறியும் அமர்வு இன்று புதன்கிழமை மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திலும், நாளை வியாழக்கிழமை துணுக்காய் பிரதேச செயலகத்திலும், சனிக்கிழமை ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திலும் எதிர்வரும் 2ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திலும் 4ஆம் திகதி வெலிஓய பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (வ-21,ரி7)

## யாழ். பல்கலை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அவரால் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. மாணவனின் முறைப்பாட்டின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸார் யாழ். நீதிவான் மன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்ய முற்பட்டனர். எனினும் அவர் சட்டத்தரணிகள் சுமந்திரன் மற்றும் சயந்தன் ஆகியோரின் அனுசரணையில் நீதிமன்றில் முன்னிலையாகி பிணை அனுமதியைப் பெற்றுக்கொண்டார்.

இதன்போது சட்டத்தரணிகளின் வேண்டுகோளின் அடிப்படையில் மாணவர் தலைவரின் முறைப்பாட்டையும் பதியுமாறு கோப்பாய் பொலிஸாருக்கு நீதிமன்றம் கட்டளையிட்டது. அவரின் முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸாரால் வேறொரு வழக்கும் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

நேற்றைய தினம் இரண்டு வழக்குகளையும் விசாரணைக்கு எடுக்குமாறு கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி யாழ். நீதிவான் மன்றில் நகர்த்தல் பத்திரத்தை முன்வைத்தார். இதனடிப்படையில் நேற்று நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில்வழக்குவிசாரணைக்கு வந்தது.

மேலதிக விசாரணைகளின் போது 4 தமிழ்மாணவர்களும் 4 சிங்கள மாணவர்களும் சந்தேக நபர்களாக இனம் காணப்பட்டனர். அவர்களுக்கு நீதிமன்றின் ஊடாக அழைப்பாணை அனுப்புமாறும் பொலிஸார் கேட்டுக் கொண்டனர். அதனை ஏற்றுக் கொண்ட மன்று, சந்தேகநபர்களாக பெயர் குறிப்பிடப்பட்ட மாணவர்களை மறு தவணை நீதிமன்றில் முன்னிலையாகுமாறுஅழைப்பாணைஅனுப்புமாறு உத்தரவிட்டது. (வ-103)

## பெயர்மாற்றம்

பருத்தித்துறை, தும்பளை எல்லை வீதியைச் சேர்ந்த யேசுதாசன் உதயேந்திரன் (அடையாள அட்டை இல 792425062 V) ஆகிய நான் எனது பெயரை யேசுதாசன் றோச் என மாற்றிக் கொண்டுள்ளேன் எனவும் இனி சகல ஆவணங்களிலும் யேசுதாசன் றோச் எனவே கையொப்பம் இடுவேன் எனவும் இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

யேசுதாசன் றோச்

## வேலையாள்கள் தேவை

விநியோக நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு தகுதி உடையவர்கள் எதிர்பார்க்கப் படுகிறார்கள்.

01. வாகன சாரதி AD அனுமதிப் பத்திரம்- 5 வருட அனுபவம்
02. களஞ்சியப் பொறுப்பாளர்
03. உதவியாளர்.

தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

**077 748 4820**

## வேலைவாய்ப்பு

கட்டட நிர்மாணத்தில் பின்வரும் வேலை வாய்ப்புக்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களில் உள்ளது.

01. மேசன்
02. காப்பென்ரர்
03. வெல்டர்
04. கூலியாள்கள்

தகுதியாளர்களுக்கு தொடர்ச்சியாக வேலை வழங்கப்படும். உப ஒப்பந்தகாரர்களும் தொடர்பு கொள்ளலாம். திறமை, அனுபவம், வேலை செய்யும் ஆற்றல் என்பவற்றிற்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும்.

**077 712 0945**

# பாதுகாப்பு வழங்கும் நிலை யாழ். பல்கலையில் இல்லை

## தெற்கில் சிலர் பிரச்சினையை பெரிதாக்குகின்றனர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 27

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இராணுவப் பாதுகாப்பு வழங்க வேண்டிய அவசியமில்லை.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

சிங்கள மொழி ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

யாழ். பல்கலைக் கழகத்தில் இரண்டு மாணவ குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட அடிதடி சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்துகின்றனர். சம்பவத்துக்காக பல்கலைக் கழகத்தில் இராணுவப் பாதுகாப்பு வழங்க வேண்டிய அவசியமில்லை.

பிரதமரின் ஆலோசனைக்கு அமைய சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க, யாழ்ப்பாண பிரதேசத்துக்கு பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரிகள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

தெற்கின் சில தரப்பினர் இந்தப் பிரச்சினையை இனவாதப் பிரச்சினையாக வெளிக்காட்ட முயற்சிக்கின்றனர்.

அவ்வாறான நிலமை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலோ அல்லது அதன் வெளியிலோ இடம்பெறவில்லை. - என்றார்.

(ற-5)

# சு.கவை நேசிக்கும் எவரும் நடைபவனிக்குச் செல்லார்

## கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 27

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை நேசிக்கும் எவரும் மகிந்த ராஜபக்சவின் நடைபவனியில் இணைந்துகொள்ளமாட்டார்கள்.

இவ்வாறு கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

சிங்கள மொழி ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை நேசிக்கும் எந்தவொரு உறுப்பினரும் மகிந்த ராஜபக்சவின் நடைபவனியில் இணைந்து கொள்ளக்கூடிய சாத்தியமில்லை.

கண்டியில் ஆரம்பமாகும் நடைபவனிக்கு சுதந்திரக் கட்சியின் அனுமதியோ அல்லது ஆதரவோ கிடையாது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை நேசிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், மாநகர சபை, நகரசபை மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் இந்த நடைபவனியில் இணைய மாட்டார்கள்.

அரசுக்கு எதிராக நடைபவனி மேற்கொள்ள வேண்டுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவோ அல்லது தீர்மானம் எடுக்கும் வேறு எந்தவொரு கூட்டத்திலுமோ தீர்மானிக்கப்படவில்லை - என்றார்.

(ற-5)

### வைத்தீஸ்வரன் ஆலய அம்பாள் திருவிழா கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 27

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தின் அம்பாளுக்கான பெருந்திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

11 தினங்கள் நடை பெறவுள்ள திருவிழாக்களில் எதிர்வரும் ஓகஸ்ட் 4ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

விசேட திருவிழாக்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் தினமும் வசந்த மண்டபப் பூசை மு.ப. 9 மணிக்கும், பி.ப.6 மணிக்கும் நடைபெறும்.

இந்தத் தகவலை வண்ணை வைத்தீஸ்வர ஆலய பரம்பரை தர்மகர்த்தாவும், உரிமையாளரும், முகாமையாளருமான க.வைத்திலிங்கச் செட்டியார் தெரிவித்தார்.

இந்த ஆலயத்துக்கென பரிபாலன சபை எதுவும் இயங்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# ஆயுள்வேத மருத்துவர், மாணவர் கொழும்பில் நேற்றுப் போராட்டம்

கொழும்பு, ஜூலை 27

ஆயுள்வேத வைத்தியர்களும், ஆயுள்வேத மருத்துவபீட மாணவர்களும் ஒன்றிணைந்து பெரும் போராட்டத்தை கொழும்பில் நேற்று நடத்தினர்.

அவர்கள் நடத்திய பேரணி இராஜகிரியவில் உள்ள ஆயுள் வேத வைத்தியசாலைக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு சுகாதார அமைச்சு வரை சென்று ஜனாதிபதி செயலகத்தைச் சென்றடைந் தது.

ஆயுள்வேத வைத்திய பீடத்தில் 900 வெற்றிடங்கள் உள்ளன. அதற்கான நியமனங்கள் வழங்கப்படவில்லை. நியமனங்கள் வழங்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்திருந்தாலும் அதை நிறைவேற்றவில்லை என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் குற்றம் சுமத்தினர்.

ஆயுள்வேத மாணவர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்படுவது இல்லை. அரசு ஆயுள்வேத மருத்துவ பீடத்தை மூடிவிடுவதற்கு தீர்மானித்துள்ளது என்றும் ஆர்ப்பாட்டம் செய்தோர் கூறினர்.

போராட்டம் காரணமாக தலைநகர் கொழும்பில் பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது.

(ற-5)

# கிராம, மாதர் அபிவிருத்தி சங்கங்களுக்கு உதவிகள்



வவுனியா, ஜூலை 27

வவுனியா மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பவற்றுக்கான உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா சுற்றுவட்ட வீதியிலுள்ள கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் இடம்பெற்றது.

2016ஆம் ஆண்டுக்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தில் இவை வழங்கப்பட்டன. 22 கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு சமையலறைப் பாத்திர உபகரணங்கள், தளபாட உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன. தையல் பயிற்சி பெற்ற 17 மாணவர்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் ப. டெனீஸ்வரன் உதவித் திட்டங்களை வழங்கினார்.

நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் திரு ஜெயதிலக, அமைச்சின் செயலாளர் திரு. சத்தியசீலன், சமயத் தலைவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

(ற-402)

# நெல்சிப் திட்டங்களைப் பார்க்க உலக வங்கிக் குழு வருகின்றது

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்கு மாகாணத்தில் உலக வங்கியின் நெல்சிப் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் திட்டங்களைப் பார்வையிடுவதற்கு உலக வங்கியின் உயர் அதிகாரிகள் குழு எதிர்வரும் முதலாம் திகதி வருகின்றது.

இந்த வருடத்தில் 3 ஆவது தடவையாக இந்தக் குழு வடக்கு மாகாணத்துக்கு வருகின்றது.

5 நாள்கள் கொண்ட பயணத் தில் எதிர்வரும் முதலாம் திகதி வலி. வடக்கு பிரதேசபை, 2 ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் பூநகரி பிரதேச சபை, 3 ஆம் திகதி மன்னார் பிரதேச சபை, மன்னார் நகரசபை, 4 ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேசசபை, 5 ஆம் திகதி வவு னியா தெற்கு தமிழ் பிரதேசசபை ஆகிய இடங்களில் மேற் கொள்ளப்படும் திட்டங்களை இந்தக் குழு பார்வையிடவுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

(ற-ரி,9)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 27

பொதுநலவாய உள்ளூராட்சி மன்றங்களின் இணையத்தால் யாழ். மாவட்ட உள்ளூராட்சி பிரதான தொழிற்பாடுகள் சம்பந்தமாக வட மாகாணத்துக்கான ஆலோசனைக் கையேடுகள் வெளியீடு மற்றும் பிரஜைகள் பிரகடனம் தொடர்பான கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது.

இன்று மு.ப. 9 மணி தொடக்கம் யாழ் ரில்கோ சிற்றி விடுதியில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது என யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிவித்தார்.

(ற-9)

# ஐக்கிய அரபு இராச்சியத்தில் இலங்கையர்களும் நிர்க்கதி

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ள சுமார் 100 தொழிலாளர்களில் இலங்கையர்களும் அடங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பணிக்கான அனுமதிக் காலம் காலாவதியானமை, சம்பளம் வழங்கப்படாமை, போதிய உணவு, நீர் மற்றும் சுகாதார வசதிகள் இன்மையால் அங்கு தொழிலாளர்கள் நிர்க்கதி நிலையில் உள்ளனர்.

நாடுதிரும்புவதற்கு பணமோ உரிய ஆவணங்களோ இன்றி தாம் உள்ளோம் என்று நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ள புலம்பெயர் தொழிலாளர் ஒருவர் காணொலி ஊடாக கூறியுள்ளார்.

அபுதாபியின், கயந்தி என்ற பகுதியிலுள்ள முகாமில் தாம் உள்ளோம் என்றும் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் பிரசைகளே இவ்வாறு நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதமும் இறுதியாக அவர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(ற-5)

பாராட்டி வாழ்த்துகின்றோம்





திரு.செ.டெனேசன் புஸ்பகரன்
SLPS III
Sp.trd in water Resource, HNDA, PGDE

திரு.பா.பாலசுப்பிரமணியம்
SLPS III
B.A.(Languages),PGDE.

எமது பாடசாலையில் ஆசிரியர்களாகக் கடமையாற்றி இலங்கை அதிபர் சேவை தரம் III இற்குப் பதவி உயர்வு பெற்றுள்ள எமது ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்,
யா/மாதகல் சென் யோசப் மகா வித்தியாலயம்
(J/2307) (11,17-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவலைகளில்....

அமரர்
## கந்தையா அம்பலவாணர்

(Rtd. Staff Sergeant-Sri Lankan Army Ordnance Corp.
Late Chairman - Mercantile Security Services Pvt Ltd)



தோற்றம்
14.11.1932

மறைவு
14.08.2013

நிறுவனத்தின் முதலானவரே! மூன்று ஆண்டுகள் சென்றுவிட்டன - ஆனால்
அன்று போல் இன்றும் எம்மருகில் நீங்கள் இருக்கின்றீர்கள்!
உங்கள் ஆசீர்வாதத்துடன் எங்கள் சேவைகள் தொடர்கின்றன
நீங்கள் சொல்லித் தந்த பாடங்கள் கற்றுத்தந்த விடயங்கள்
சேற்றில் மலர்ந்த செந்தாமரை போல் மலர்ந்து கொண்டே தொடர்கின்றன.....
ஓயவில்லை உங்கள் குரல் எம்மைச் சுற்றி ஒலித்துக்கொண்டே இருக்கின்றது!
அன்றும் இன்றும் என்றும்......

திரு.திருமதி
சுகுமாரன் நிதர்சினி
குடும்பத்தினர்.
651/13, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(J.3250) (13.18.17)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
## அன்னலிங்கம் குமாரசாமி

(ஓய்வுபெற்ற, புகையிரத நிலைய அதிபர்)



தோற்றம்
24.02.1933

மறைவு
07.08.2015

திதி: தேய்பிறை அட்டமி
(27.07.2016)

ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லையே எம் துயரம் நேரம்
தவறாமல் உம் நினைவு வந்து வந்து
வாட்டுவதை யார் அறிவார்? யாவரையும்
மனம் கவர்ந்த உத்தமரே எங்கு சென்றீர் ஐயா?
உத்துங்க விநாயகரின் பாதார விந்தங்களை
நிச்சயம் அடைந்திருப்பீரென மன
ஆறுதல் அடைகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்...

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
021 221 3263

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவு

ஆண்டவன் அழைப்பு அன்று நடந்தது - ஆண்டு ஒன்று இன்று கடந்தது

அமரர்
## பிள்ளையான் தர்மராசா

(ஓய்வுபெற்ற ஊழியர் யாழ் மாநகரசபை)



அன்னையின் கரங்களில்
தவழ்ந்தது
02.12.1949

ஆண்டவன் பாதங்களில்
சேர்ந்தது
27.07.2015

தந்தை என்ற சொல்லின் தனி நிறைாய் விளங்கி
ஊர்போற்ற என்றும் உண்மையுடன் வாழ்ந்து
கனிவான உங்கள் வார்த்தைகளால் இனிதாகப் பணியாற்றி
மண்ணகம் விட்டுச் சென்று ஆண்டொன்று ஆனதுவோ எம்மை
விட்டுப் போனது உங்கள் உடல் மட்டும் தானப்பா
எம் வெற்றியின் சுவடுகளில் உங்கள் உயிர் நின்று வாழ்த்துதப்பா
இன்றென்ன ஓராயிரம் ஆண்டு கடந்தாலும் - அப்பா
என் நினைவுகளில் என்றும் நீங்காது வாழ்வீர்கள் அப்பா

அப்பா உங்கள் ஞாபகார்த்தமாக பலாலிறோட், வாமஸ் சந்தியில் அமைக்கப்பட்ட பயணிகளுக்கான பஸ்தரிப்பிடத்தை இன்று (27.07.2016) புதன்கிழமை தர்மராசா கங்கேஸ்வரன் ஆகிய நான் திறந்து வைக்கின்றேன்.

" தந்தை காலடி எமது கோயில்"
அன்பின் திருவுருவமாய்
எமக்கு வழிகாட்டியாய் இருந்து
எம்மை வளர்த்தெடுத்து வாழ்வித்த
எங்கள் அன்புத் தெய்வமே அப்பா !
பாசம் நிறைந்த உங்கள் நினைவுகள்
ஓராண்டு கடந்திட்டபோதிலும்
எம் மனங்களை விட்டு அகலாது தந்தையே"

நாராயணன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
T.P: 077 482 3624

மீளாத்துயருடன் என்றும் உங்கள்
நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்.

## பொருளாதார

நடுவண் அரசின் அமைச்சர் ரிசாத் பதியுதீன், பொருளாதார வலயம் எங்கே அமைய வேண்டும் என்று விரும்புகின்றாரோ அங்கே இன்னொரு பொருளாதார வலயத்தை நிறுவவும். அதற்கு ஏற்றவாறு அமைச்சரவைப் பத்திரத்தை தயார் செய்யவும்- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக் கூட்டத் தில் நேற்றுத் தெரிவித்ததாக, நம்பகரமாக அறிய முடிகின்றது.

முதலமைச்சரின் பரிந்துரையின் அடிப்படையில் ஓமந்தையில் அமைக்குமாறு தெரிவித்ததாக அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டார். மாங்குளத்தில் அமைக்க வேண்டும் என்றே முதலமைச்சர் தெரிவித்திருந்ததாக, அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொண்ட மற்றொரு அமைச்சர் குறிப்பிட்டார். இருப்பினும், முதலமைச்சரின் தெரிவின் அடிப்படையில் ஓர் இடத்திலும், அமைச்சர் ரிசாத் பதியுதீனின் தெரிவின் அடிப்படையில் இன்னொரு இடத்திலும் பொருளாதார வலயம் அமைய பிரதமர் நேற்று இறுதித் தீர்மானம் எடுத்துள்ளார். (வ-5)

## மிருகபலியைத்

வைக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை உத்தரவுகளை மீளப் பெறச் செய்வதற்கான முயற்சிகளும் இடம்பெற்று வருகின்றன. அவ்வாறு ஒரு நிலை ஏற்படுமானால் கோயில்களில் பலியிடுவதற்கு ஏராளமான ஆட்டுக் கடாக்கள் தயாராகவுள்ளன.

கோயில்களில் தெய்வத்தின் பெயரைச் சொல்லி மிருகங்கள் பலியிடப்படுவதை நிரந்தரமாகத் தடை செய்வதற்கு சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. முதலில் இந்த சட்டவரைவு இணையத் தளங்களில் வெளியிடப்பட்டு பொதுமக்கள் கருத்தறியப்படும். கோயில்களில் மிருகப்பலியிடல் இந்து சமய நூல்கள் எதிலும் பரிந்துரைக்கப்படவில்லை - என்றார். (வ-5)

## பிரான்ஸ்

ஞானசேகரம் (வயது - 46) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது , பிரான்ஸில் கடந்த 14ஆம் திகதி லொறி ஒன்றினால் மோதி பலரின் உயிரைப் பறித்த தாக்குதலில் அகப்பட்ட யாழ்ப்பாணம் புங்குடுதீவைச் சேர்ந்தவர் தலையில் பலமாக தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தார். நேற்று அதிகாலையில் உயிரிழந்ததாக உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டது. உள்நாட்டுப் போர் காரணமாக 25 ஆண்டுகளுக்கு முன்பு அவர் பிரான்ஸில் அகதிகுடியுரிமை பெற்று வாழ்ந்துவந்தார். அவரின் மனைவி மற்றும் பிள்ளை ஆகியோர் முன்பு இடம்பெற்ற ஓர் இடரில் உயிரிழந்தனர். இதனால் அவர் தனிமையில் வாழ்ந்து வந்தார் என உறவினர்கள் தெரிவித்தனர். உயிரிழந்தவரின் தாயார் மற்றும் உடன் பிறந்த உறவுகள் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் வசிக்கின்றனர். (வ-10)

## சைக்கிளில்

ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டதாக கிளிநொச்சிப் பொலிஸார் கூறினர். விபத்துக்குள்ளான முதியவர் படு காயங்களுடன் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும், சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். காரின் சாரதியை கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகக் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி அனுமதி பத்திரம் வழங்கும் நிகழ்வு நாளை

தென்மராட்சி, ஜூலை 27
தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கைதடி மற்றும் எழுதுமட்டுவாழ் பகுதிகளில் உள்ள அரச காணிகளில் குடியிருப்போருக்கான காணி அனுமதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு நாளை பிரதேச செயலகத்தில் இடம்பெறும்.
காணிகளில் குடியிருப்பவர்களுக்கான காணிக் கச்சேரியும் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஈ-9)

## படை வாகனம் மோதியதில் பெண் படுகாயம்

தென்மராட்சி, ஜூலை 27
படையினரின் வாகனத்துடன் மோதுண்டு பெண் ஒருவர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை மீசாலை புத்தூர்ச் சந்தியில் நடந்தது.
வீதியில் நடந்து சென்ற குடும்பப் பெண் வீதியின் மறுபக்கம் பயணிகள் வாகனத்தில் ஏறுவதற்காக வீதியைக் கடக்க முற்பட்டார். அதன்போது விபத்து ஏற்பட்டது.
காயமடைந்த பெண் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (ஈ-9)



யாழ்ப்பாணத்திலிருந்து நல்லூரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த கிளிநொச்சி கல்வித் திணைக்கள பிக்கப் வாகனமும், நாவலர் வீதியில் இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணித்த தனியார் பிக்கப் வாகனமும் ஆனைப்பந்திச் சந்தியில் விபத்துக்குள்ளாகின. இரு வாகனங்களும் மோசமாகச் சேதமடைந்தன. வாகனங்களில் பயணித்தோர் காயமின்றித் தப்பினர். (ஈ-ரி,20)

# நடைமுறைக்கு வந்தது முன்பள்ளி நியதிச் சட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 27
வடக்கு மாகாண சபையில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் நிறைவேற்றப்பட்ட வடக்கு மாகாண முன்பள்ளிநியதிச்சட்டம் 13மாதங்களின் பின்னர் நடைமுறைக்கு வந்தது.
வடக்கு மாகாணத்திலுள்ள முன்பள்ளிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் அதன் கல்வித் தரத்தை உயர்த்துதல் உள்ளிட்ட பல்வேறு நோக்கங்களைக் கொண்டதாக முன்பள்ளி நியதிச் சட்டம் உருவாக்கப்பட்டது.
நியதிச் சட்டம், முன்பள்ளியில் கல்வி கற்கும் சிறார்களின் வயதெல்லை தொடர்பிலும் நிர்ணயம் செய்துள்ளது. ஆகக் குறைந்தது இரண்டரை வயதிலிருந்து பாடசாலை செல்லும் பருவம் வரையானவர்களை உள்ளடக்கியதே முன்பள்ளிப் பருவம் என்று நியதிச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது.
முன்பள்ளியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு முன்பள்ளி நிர்வாகங்கள் ஆகக் குறைந்தது 6 ஆயிரம் ரூபா வழங்க வேண்டும். 6 ஆயிரம் ரூபா வழங்க முடியாத நிர்வாகங்கள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சருடன் தொடர்பு கொண்டு அந்தத் தொகையைக் குறைத்துக் கொள்ள முடியும் என்று நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
முன்பள்ளி நியதிச் சட்டம் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவால் 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9ஆம் திகதி வடக்கு மாகாண சபையில் சமர்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.
நியதிச் சட்டத்துக்குரிய இணைப்புக்கள் வழங்கப்படாமையால் ஆளுநர்அங்கீகாரம்வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டு வந்தது.
வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தற்போது முன்பள்ளி நியதிச் சட்டத்துக்கு தனது அங்கீகாரத்தை வழங்கினார். (ஈ-5)

## தங்கத்துரை, குட்டிமணி நினைவு தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 27
வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் தங்கத்துரை தளபதி குட்டிமணி மற்றும் போராளிகள் பொதுமக்கள் உட்பட 53 பேரினதும் 33 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவுனியா நகர சபை உள்ளக மண்டபத்தில் இடம்பெறும்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நடக்கும் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் உட்படப் பலரும் நினைவுரைகளை ஆற்றுவர். (ஈ-5-108)

## பாலமோட்டை மூன்று முறிப்பு வீதியை சீராக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

வவுனியா, ஜூலை 27
வவுனியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாலமோட்டை மூன்று முறிப்பு வீதி 6.7 மில்லியன் ரூபா செலவில் திருத்தப்படவுள்ளது.
வடக்கு மாகாண, மாகாண அபிவிருத்தி நன்கொடையின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வீதி திருத்தப்படவுள் ளது.
கடந்த திங்கள் வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் சீராக்கல் பணிகளை ஆரம்பித்தார்.
நிகழ்வில் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வீதி அபிவிருத்தி திணைக்கள மாகாணப் பணிப்பாளர் டி.சிவராசலிங்கம், வவுனியா மாவட்ட உதவி மாவட்டச் செயலர் திரேஸ்குமார், சுகாதார அமைச்சரின் இணைப்புச் செயலாளர் சீலன், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் வவுனியா மன்னார் மாவட்டப் பிரதம பொறியியலாளர் எஸ்.ரகுநாதன் ஆகியோரும் கிராம அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ஈ-5)




## அத்துமீறி முத்தம் கொடுக்க எத்தனித்த இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 27
வீட்டுக்குள் நுழைந்து பெண் ஒருவரை முத்தமிட முயன்றார் என்று இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை தெல்லிப்பழையில் நடந்தது.
பாதிக்கப்பட்ட பெண் கொடுத்த முறைப்பாட்டின்படி 22 வயது இளைஞர் கைது செய்யப்பட்டார். அவர் மல்லாகம் பதில் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டார். 50ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் அவர் விடுவிக்கப்பட்டார். சனிக்கிழமைகளில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. இளைஞன் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (ஈ-4,101)

### மரண அறிவித்தல்

**கதிர்காமு வேலாயுதம்**
(ஓய்வு பெற்ற பொலிஸ் நிலைய பணியாளர்)



அங்குடுவனையைப் பிறப்பிடமாகவும் பன்னாலையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு வேலாயுதம் கடந்த 25.07.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சபாபதி - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் திருமகள், மனோகரி, கலைமகள், திருக்கேதீஸ்வரி, பரமசிவன்(S.V.M) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சின்னத்தங்கம் மற்றும் பொன்னு ஆகியோரின் அன்புச் சகோதரனும் உதயபாலன், ஜேந்திரகுமார்(தபால் ஊழியர்), ஞானேந்திரன்(பிரான்ஸ்), புவிச்சக்கரவர்த்தி, கோபிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் திவாகினி, வர்ஜினி, ஐதுசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.00 மணியளவில் கீரிமலை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible],
[illegible]ப்பா வீதி,
பன்னாலை, தெல்லிப்பழை.

தகவல்
குடும்பத்தினர்.
(வே.பரமசிவன் - S.V.M. யாழ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பளைப் பொலிஸ் திடீர் சோதனை எட்டுப் போத்தல் கசிப்பு சிக்கியது

பளை, ஜூலை 27
சுண்டிக்குளம் எல்லைக்காடு பகுதியில் பளைப் பொலிஸார் நடத்திய திடீர்ச் சோதனையில் 8 போத்தல் கசிப்பும் 37.5 லீற்றர் கோடாவும், கசிப்பு உற்பத்தி உப கரணங்களும் கைப்பற்றப் பட்டன.

பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ. ராஜபக்ச தெரிவித்ததாவது:

நேற்று முன்தினம் கிடைத்த தகவலின் அடிப்படையில் சுண்டிக்குளம் - எல்லைக்காடு - கட்டைக்காடு பிரதேசத்தில் மேற்கொண்ட நடவடிக்கையில் இவை மீட்கப்பட்டன. அவற்றை உற்பத்தி செய்தனர் என்ற குற்றச்சாட்டில் 2 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்- என்றார்.

அவர்கள் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். கைப்பற்றப்பட்ட பொருள்கள் நீதிமன்றில் பாரப்படுத் தப்பட்டன.

5 போத்தல் கசிப்பு வைத்திருந்தவருக்கு 90 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

3 போத்தல் கசிப்பையும் 37.5 போத்தல் கோடாவையும் வைத்திருந்தவருக்கு 45 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி நீதிமன்று. (ற-4,ரி3)

# மாணவர் கௌரவிப்பு

கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் அருணலு சேமிப்புக் கணக்குத் திட்டத்தில் இணைந்து கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று பி.ப. 4 மணிக்கு வங்கிக் கிளைக் கட்டடத்தில் இடம்பெறும்.

கிளை முகாமையாளர் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினராக வங்கியின் யாழ் பிராந்திய முகாமையாளரும் கலந்து கொள்வர். (ற-9)

# முல்லைத்தீவில் காணிகளை விடுவிப்பது குறித்து கவனம்

## மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ்ப்பாண மாவட்டத்தின் மீள் குடியமர்வுகளைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் காணிகள் விடுவிப்புத் தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது.

இவ்வாறு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாபிலவு மக்கள் தமது காணிகளை விடுவிக்குமாறு போராட்டம் நடத்தத் தீர்மானித்தனர். அரசியல் தலைமைகளின் வாக்குறுதிகளால் அவர்கள் தமது தீர்மானத்தைக் கைவிட்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட காணிகள் விடுவிப்புக் குறித்து மீள் குடியேற்ற அமைச்சர் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் பாதுகாப்புத் தரப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்கள் பலவற்றை விடுவிக்குமாறு கோரப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் அடுத்த கட்டமாக விடுவிக்கப்படக் கூடிய காணியை இனம்கண்டு மீள் குடியேற்ற அமைச்சு பரிந்துரை செய்தது. பாதுகாப்பு அமைச்சின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டது. கடந்த சனிக்கிழமை சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் இணைந்து விடுவிக்கப் படக் கூடிய பிரதேசங்கள் குறித்து ஆய்வு செய்தனர்.

பாதுகாப்பு அமைச்சு தனது பரிந்துரையை வழங்கிய பிரதேசங்கள், அமைச்சரவையின் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டு அந்தப் பிரதேசங்கள் உரியவர்களிடம் கையளிக்கப்படும்.

யாழ். மாவட்டத்தைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டம் தொடர்பிலும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அங்கும் சில பிரதேசங்களை விடுவிப்பதற்காக எமது அமைச்சின் பரிந்துரைகளை வழங்கியுள்ளோம். அவை தற்போது பாதுகாப்பு அமைச்சின் பரிசீலனையில் உள்ளன. அவர்களின் பரிந்துரை கிடைக்குமிடத்து அந்த நிலங்களையும் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எவ்வளவு நிலத்தை விடுவிப்பதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சு வழங்கும் என்பதை உடனடியாகத் தெரிவிக்க முடியாது.- என்றார். (ற-5,10)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் 56ஆவது பிறந்தநாள் நினைவலைகளும்

திருமதி சாந்தி மகேந்திரராஜா

தோற்றம்
16.07.1960



மறைவு
27.06.2016

அம்மா என்றழைத்த உங்கள் பிள்ளைகள் ஏங்கித் தவிக்க
ஆறுதல் கூறத் துணை இல்லாமல் உங்கள் துணைவன் கலங்கி நிற்க
உங்கள் பாசமான தாய், சகோதரங்கள், உறவினர்கள் தவித்து நிற்க
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்ததேனோ? என்றும் ஆறாது உங்கள் பிரிவு

பண்புடனே எமை வளர்த்து பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் அம்மாவே!
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நிஜமாக நீங்கள் மறைந்து போனீர்களோ?
நீங்கள் இல்லாத மனை பொலிவிழந்து போனதம்மா
எங்களைவிட்டுப் போனது உங்கள் உடல் மட்டும் தானம்மா

ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அம்மா உங்களுக்கு இணையாகுமா?
எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் நீங்களே எமக்கு அம்மாவாக வேண்டும்
எப்போதும் உங்களை எங்கள் மனதில் வைத்துப் பூசிப்போம்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

கடந்த 27.06.2016 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், பதாகைகள் மூலம் தங்களின் துயரத்தைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பல உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
077 404 8725

குடும்பத்தினர்.
மகேந்திரராஜா (உதயன் பத்திரிகை விநியோகஸ்தர்)


# வவு. நகர சுத்திகரிப்பு சேவையை தனியாரிடம் கையளிக்க எதிர்ப்பு

## அகில இலங்கை அரச ஊழியர் சங்கம் வடக்கு முதலமைச்சரிடம் மனு

வவுனியா, ஜூலை 27
வவுனியா நகர சுத்திகரிப்புச் சேவையைத் தனியாரிடம் ஒப்படைக்க நகர சபையால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

அகில இலங்கை அரச ஊழியர் சங்கம் இந்த நடவடிக்கையை எதிர்த்துள்ளது. வடக்கு மாகாண முதலமைச்சருக்கு குறித்த சங்கம் மனு ஒன்றை அனுப்பியுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

வவுனியா நகர சபை செயலாளரால், வவுனியா நகர சுத்திகரிப்புச் சேவை தொடர்பாகப் பத்திரிகை விளம்பரம் மூலம் விடுக்கப்பட்டுள்ள பெறுகைகள் (2016) அறிவித்தல் மற்றும் அவற்றுடன் தொடர்பிலான நடவடிக்கைகள் பொருத்தமற்றவை. அவை உடன் இடை நிறுத்தப்பட வேண்டும்.

நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும், அதற்கு முன்னரும் நாடு சுதந்திரம் பெற்ற பின்னரும் ஓர் பிரதேச எல்லைக்குள் திண்மக் கழிவுகளை அகற்றும் பணியை உள்ளூராட்சி மன்றங்களே செய்தன.

உள்ளூராட்சி மன்றங்கள் அதன் நிர்வாகத்தின் கீழுள்ள ஊழியர்களக் கொண்டு இப்போதும் அவ்வாறே செயற்படுகின்றன. தற்போது உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகளது பதவிக்காலம் முடிவடைந்து பல சபைகள் கலைக்கப்பட்டன.

வவுனியா நகர சபையின் கீழான நகர சுத்திகரிப்பு சேவை என்ற போர்வையில் (01.08.2016 தொடக்கம் 31.08.2016 வரையான காலப்பகுதிக்கு) வழங்கல் சேவைக்காக, நகர சுத்திகரிப்பு சேவை தொடர்பில் ஒப்பந்தகாரர்களிடம் விண்ணப்பம் கோரி பெறுகைள் அறிவித்தல் சபை செயலாளரால் விடுக்கப்பட்டது.

வவுனியா நகர சபை நிர்வாகத்தின் கீழ் நகர சுத்திகரிப்பு சேவைப் பணியைச் செய்வதற்குப் பல ஊழியர்கள் நாள் சம்பள மற்றும் நிரந்தர சேவையின் கீழுள்ளனர். இவர்களைக் கொண்டே பல வருட காலமாக நகர சுத்திகரிப்புச் சேவையினைத் திறனுடன் நடைபெறுகின்றது.

இடையிடையே குறித்த ஊழியர்களின் தேவைகள், உரிமைகள், சலுகைகள் மறுக்கப்படும்போது, அவர்கள் கோரிக்கைகளை முன்வைத்து சாத்வீகப் போராட்டங்களில் ஈடுபடுவதும், அதிகாரிகள் கவனம் செலுத்தி உதவி சுமுக நிலை ஏற்படுத்துவதும் இடம்பெறுகின்றன.

வவுனியா நகர சபை செயலாளரது நகர சுத்திகரிப்பு சேவை தொடர்பான பத்திரிகை விளம்பர அறிவித்தல் அதிர்ச்சியையும், கவலையையும் அளிக்கின்றது. இது வடமாகாண ஆளுநரின் அனுமதியுடன் வெளியிடப்பட்ட உள்ளூராட்சி மன்ற ஊழியர்களது சேவைப்பிரமாணம், பணிகள் மற்றும் விடயங்களுக்கும் முற்றிலும் முரணாகவே உள்ளது.

அப்பாவி ஊழியர்களின் குரல்வளையை நசுக்குகின்ற பல செயற்பாடுகள் வவுனியா நகர சபையில் நடந்துள்ளன. தற்சமயம் மேற்படி நடவடிக்கை மூலம் அதன் உச்சக் கட்டம் அரங்கேற்றப்பட்டுள்ளது. ஊழியர்கள் பேசா மடந்தைகளாக, மௌனம் காத்து இருக்கப்போவதுமில்லை.

ஒரு சிலரது நலன் மற்றும் தேவைகள் நிறைவேற்றப்படுவதற்காகவும், சுயலாபத்துக்காகவும் அரச ஊழியர்களான தொழிலாளர்களைப் படுகுழியில் தள்ளுவதற்கு இடமளிக்கக்கூடாது.

வவுனியா நகர சுத்திகரிப்பு சேவை தனியாரிடம் ஒப்படைக்கப்படுவதை எமது தொழிற்சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இந்த நடவடிக்கை உடன் இடை நிறுத்தப்பட ஆவன செய்யுமாறு கோருகின்றோம்- என்றுள்ளது.

வவுனியா மாவட்டத்திலுள்ள ஒரு அரசியல்வாதியின் மறைமுகத் தூண்டுதல் இதன் பின்னணியில் இருக்கின்றது என்று அறிகின்றோம். பாதிக்கப்படும் ஏழைத் தொழிலாளர்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் இந்த விடயத்தில் முதலமைச்சர் உரிய நடவடிக்கை மேற்கொள்வார் என்று நம்புகின்றோம். தீர்வு வழங்கப்படாவிட்டால் வடமாகாணசபை அமர்வொன்றின்போது அங்கு சென்று தொழிலாளர்கள் சாத்வீகப் போராட்டம் நடத்தத் தயாராகவுள்ளனர் - என்று அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் லோகநாதன் தெரிவித்தார். (ற-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லண்டனில் வசிக்கும் யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர்களால் நடத்தப்படும் "ஏணி" தன்னார்வத் தொண்டு நிறுவனம், யாழ். இந்துக் கல்லூரியில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு நிதி உதவி செய்கின்றது. ஏணி நிறுவனத்தின் உறுப்பினர்களான ஏ.எவ்.மரியதாசன், க.குமணன் ஆகியோரைப் பாராட்டி, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பட்டயம் வழங்கிக் கௌரவித்தார்.

# பிடித்து வைத்துள்ள காணியை விடுவிக்க ராணுவம் நிபந்தனை

## மாற்றுக் காணி கொடுக்கவேண்டுமாம்

வவுனியா, ஜூலை 27

வவுனியா, ஓமந்தையில் உள்ள இராணுவத் தடை முகாமை அகற்ற வேண்டுமானால் பிறிதொரு இடத்தில் தமக்குக் காணி வழங்க வேண்டும் என்று இராணுவத்தினர் தெரிவித்தனர். அதனால் மாவட்ட செயலகத்தினர் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

தடைமுகாம் அமைந்துள்ள 5 ஏக்கர் காணி தனியாருக்குச் சொந்தமானது. போர் இடம்பெற்றபோது காணியைக் கையகப்படுத்திய இராணுவத்தினர் பின்னர் அதனை விடுவிக்கவில்லை.

தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று காணி உரிமையாளர்கள் தொடர்ச்சியாக வற்புறுத்தி வருகின்றனர். காணியை விடுவிக்க வேண்டுமானால் தமக்கு வேறொரு காணி வேண்டும் என்று இராணுவத்தினர் கூறுகின்றனர். ஏ-9 வீதியில் நொச்சிமோட்டைக்கும், இறம்பைக்குளத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் 5 ஏக்கர் காணி வேண்டும் என்று இராணுவத்தினர் வவுனியா மாவட்ட செயலகத்துக்கு அறிவித்துள்ளனர்.

இராணுவத்தினர் கோரியுள்ள பகுதியில் 5 ஏக்கர் காணி இல்லை. அதனால் மாவட்ட செயலகத்தினர் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். (ஙு-101)

# புங்குடுதீவு மாணவி வழக்கு 9ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

வன்புணரப்பட்டுக் கொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவி தொடர்பாக வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றால் எதிர்வரும் 9ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

வழக்கு விசாரணைக்காக நீதிவான் எம்.எம்.றியால் முன்னிலையில் நேற்று வந்தது. சந்தேகநபர்கள் 12 பேரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரியும் நீதிமன்றில் முன்னிலையானார். வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கு விரைவில் யாழ் . மேல் நீதிமன்றில் பாரப்படுத்தப்படும் என்று நீதிமன்று ஏற்கனவே தெரிவித்திருந்தது.

கடந்த வருடம் மே மாதம் பாடசாலைசெல்லும்வழியில்மாணவி கடத்தப்பட்டு வன்புணரப் பட்டுப் பின்னர் கொலை செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து வெவ்வேறு நாள்களில் 9 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். பின்னர் ஒருவரும் அதன் பின்னர் 2 பேருமாக இதுவரை 12 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். வழக்குத் தொடர்பான விசாரணை அறிக்கைகள் சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று குற்றப் புலனாய்வுப்பிரிவு அதிகாரிகள் மன்றில் முன்னர் தெரிவித்திருந்தனர். (ஙு-4)

# கரவெட்டியில் பகல் நேரத்தில் களவாடப்படும் கால்நடைகள்

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

கரணவாய், ஜூலை 27

கரவெட்டியில் மேய்ச்சல் தரவைகளில் விடப்படும் கால்நடைகள் பகல் நேரத்தில் கடத்தப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். அதைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

கரவெட்டி தெற்கு கிராய் பகுதியில் வயல்வெளிகளில் மேய்ச்சலுக்காக விடப்படும் கால்நடைகளே களவாடப்படுகின்றன. கடந்த வாரம் 75ஆயிரம் ரூபா பெறுமதியான பசு மாடு உச்சில் பகுதியில் மேய்ந்து கொண்டிருந்த சமயம் கடத்தப்பட்டது. இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டது.

பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு வழங்கப்பட்ட கால்நடைகளே கடத்தப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

கடத்தப்பட்ட கால்நடைகளில் சில கால்கள், வாய் கட்டப்பட்ட நிலையில் பற்றைகளுக்குள் போடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட சம்பவங்களும் நடந்துள்ளன.

கால்நடைக் களவைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ஙு-108)

# முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 27

கோப்பாய் சமூக சேவா சங்க பாலர் பகல் விடுதி முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று புதன்கிழமை பி.ப. 2.30 மணிக்கு பாலர் பகல் விடுதி மைதானத்தில் நடைபெறும்.

க.பரமானந்தராசா தலைமையில் நடை பெறும் நிகழ்வில் சங்கப் போசகர் பொ.விக்னேஸ் வரலிங்கமும் இன்னும் பலரும் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ஙு-ரி)

# கண்ணீர் அஞ்சலி



எஸ்.வி.முருகேசு
யாழ் நிறுவன முகாமையாளர்
**வே. பரமசிவன்**
அவர்களின் அன்புத் தந்தை

## கதிர்காமு வேலாயுதம்

அவர்களின் மறைவு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்துகின்றது. அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினர் , உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**S.V.முருகேசு**
**154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

**S.V.முருகேசு**
D4, Emision Road, **மருதநகர், கிளிநொச்சி.**

**S.V.M (PVT)Ltd.**
**122, டாம் வீதி, கொழும்பு - 12**

**உரிமையாளரும்,ஊழியர்களும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சு.கவை வீழ்த்துவதற்கு கூட்டணிக்குள் ஆள்கள்

## இராஜாங்க அமைச்சர் டிலான் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 27
சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தும் சதித் திட்டத்தில் எமது கூட்டணிக்குள்ளேயே நபர்கள் உள்ளனர். விமல் வீர வன்ச போன்றவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் உளவாளி களாகச் செயற்படுகின்றனர். ரணில் - விமல் கூட்டணியின் உறவை நாம் அறிவோம். நாடா ளுமன்றத்தில் விமர்சிக்கும் இவர்கள் தனிப்பட்ட ரீதியில் தொடர்புகளை வைத்துள்ளனர்.
இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.
கொழும்பு ஊடகத்துக்கு வழங் கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது-
ஐக்கிய தேசியக் கட்சியுடன் சிறி லங்கா சுதந்திரக் கட்சி ஒன்றி ணைந்து தேசிய அரசைக் கொண்டு செல்கின்றது என்றால் அது நாட்டின் பிரதான சிக்கல் களை நீக்கவும், பன்னாட்டு அழுத்தங்களில் இருந்து விடு படவுமேயாகும். ஐக்கிய தேசியக் கட்சியுடன் கைகோர்த்து அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு பய ணிக்க வேண்டிய வேறு தேவை எமக்கு இல்லை. கடந்த காலத் தில் இலங்கைக்கு எதிராக எழுந்த பன்னாட்டு அழுத்தங்கள் மற் றும் பெரும்குற்றச்சாட்டுகள் தொடர் பில் எம்மால் தனித்து முகம் கொடுக்க முடியாது போனது.
பிரதான இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து பன்னாட்டுச் சவால்களுக்கு முகம் கொடுத்து இன்று நாட்டை விடுவித்துள் ளோம். ஜனாதிபதியும் பிரதம ரும் ஒன்றிணைந்து சவால் களுக்கு முகம் கொடுத்து மீட் டுள்ளனர். தேசியப் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டிய தேவை உள்ளது. அரசமைப்பை உருவாக்குவதிலும், நாட்டின் பொருளாதார நிலைமைகளை சரிசெய்வதிலும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை உள்ளது. இந்த விடயங்களில் நாம் ஒன்றிணைந்து செயற்பட்ட போதிலும் இரண்டு கட்சிகளுக் கும் இடையிலான கொள்கை யில் முரண்பாடுகள் உள்ளன.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தவும் கட்சிக்குள் குழப்பங்களை ஏற்படுத்தி எமது கட்சியைப் பின்தள்ள வேண்டும் என்ற ஆசையும் ஐக்கிய தேசி யக் கட்சிக்கு உள்ளது. அவர் களுக்கான சந்தர்ப்பம் ஒன் றுக்காகக் காத்துக் கொண்டு உள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி யின் கொள்கைகளை நம்பி எம் மால் செயற்பட முடியாது. நடை பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பலத்தை அதிகரிக்க வேண்டும். பிரதேச சபை மட்டத்திலும், மாகாண சபை மட்டத்திலும் எமது கட்சியின் செயற்பாடுகளை பலப்படுத்த வேண்டும் - என்றார். (ந-5)

# கொழும்புத் துறைமுகம் விரிவாக்கப்படவுள்ளது

## பிரதமர் ரணில் தகவல்

கொழும்பு, ஜூலை 27
தெற்காசியாவின் மிகப் பெரிய துறைமுகமாக கொழும்புத் துறை முகம் விரிவாக்கப்படவுள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.
கொழும்புத் துறைமுகம் ஜா-எல வரை விரிவாக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.
கொழும்புத் துறைமுகத்தை விரி வாக்குவதற்கு சிங்கப்பூர் போன்ற நாடுகளின் உதவியை இலங்கை கோரியுள்ளது. (ந-5)

# ஒத்துழைக்காதோரின் பதவிகள் பறிக்கப்படும்

## ஜனாதிபதி மைத்திரி எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 27
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்காத நாடாளுமன்ற உறுப்பினர் களிடம் இருந்து கட்சியின் அமைப்பாளர் பதவிகள் பறிக் கப்படும்.
இவ்வாறு ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேன எச்சரித்துள் ளார்.
மகிந்த ராஜபக்ச ஆதரவு கூட்டு எதிரணியில் இடம்பெற்றுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் களை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் மாலை சந்தித்தார்.
உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மறுசீரமைப்புச் செய்யப் படும். கட்சியின் செயற்பாடு களுக்கு ஒத்துழைக்காதவர் களுக்குப் பதிலாக புதிய அமைப்பாளர்கள் நியமிக்கப் படுவார்கள்.
புதிய கட்சியை உருவாக்கி சிறிலங்கா சுதந்திரக் கட்சியை உடைக்கும் சதித்திட்டங்களுக்கு யாரும் துணைபோகக் கூடாது என்று ஜனாதிபதி தெரிவித்தார்.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் மகிந்த அமரவீர இந்தத் தகவல் களை வெளியிட்டார். (ந-5)

# பசிலின் மீளாய்வு மனு மீது முதலாம் திகதி விசாரணை

கொழும்பு, ஜூலை 27
வாழ்வின் எழுச்சித் திணைக்கள நிதி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவும், திணைக்களத்தின் செயலாளர் நாயகம் ரணவக்கவும் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேன் முறை யீட்டு மனு விசாரணைக்கு எடுத் துக் கொள்ளப்படவுள்ளது.
தமது பிணை மனு நிராகரிக்கப் பட்டமையை சவாலுக்கு உட் படுத்தி பசில் ராஜபக்ச மற்றும் ரணவக்க இருவரும் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர். எதிர்வரும் முதலாம் திகதி இது விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட வுள்ளது என்று கொழும்பு உயர் நீதிமன்றநீதிபதிஎம்.பிடிஎஸ்.வரா யஸ் தெரிவித்தார்.
கடந்த காலத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இருந்த வாழ்வின் எழுச்சித் திணைக்கள நிதியைப் பயன் படுத்தி பிளாஸ்ரிக் குழாய்கள் கொள் வனவு செய்யப்பட்டமை யில் இடம் பெற்ற மோசடி தொடர்பில் பசில் ராஜபக்ச கடந்த 18 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். எதி ர் வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளார்.
தமக்கு பிணை வழங்குமாறு கோரி பசில் ராஜபக்ச கடுவலை நீதிவான் மன்றத்தில் தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டது. பிணை மனு நிராகரிக்கப்பட் டதை சவாலுக்கு உட்படுத்தி கொழும்பு உயர் நீதிமன்றத்தில் மீளாய்வு மனு தாக்கல் செய் யப்பட்டது.
மனு விசாரணைக்கு எடுக்கப் படும் தினத்தில் நிதி குற்ற விசா ரணைப் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர், சட்டமா அதிபர், பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட ஐவர் நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)



அங்கவீனமுற்ற படைவீரர்கள் தமது ஓய்வூதியப் பிரச்சினைக்குத் தீர்வு தருமாறு கோட்டைப் புகையிரத நிலையத்தின் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமது செயற்கைக் கால்களை கழற்றி வைத்து விட்டு வீதியில் படுத்திருந்து அவர்கள் போராட்டம் நடத்தினர். (ந)

# வாய் திறக்காத ஜனாதிபதியால் கூட்டு எதிரணிக்கு ஏமாற்றம்

கொழும்பு, ஜூலை 27
அரசுக்கு எதிராக கூட்டு எதிரணி யினர் நாளை வியாழக்கிழமை ஆரம்பிக்கவுள்ள நடைபவனி தொடர்பாக ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேன எந்தக் கருத் தையும் வெளியிடவில்லை. அது மகிந்த ஆதரவு அணி யினரை ஏமாற்றமடையச் செய் துள்ளது என்று கூறப்படுகின்றது.
கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி 5 நாள் நடைபவனியை மகிந்த ராஜபக்ச தலைமை யிலான கூட்டு எதிரணியினர் நடத்துகின்றனர்.
கூட்டு எதிரணியில் இடம் பெற்றுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர்களை ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேன நேற்றுமுன்தி னம் சந்திக்க அழைத்திருந்தார்.
நடைபவனியைக் குழப்புவதற் காகவே ஜனாதிபதி இந்தக் கூட் டத்தை ஒழுங்கு செய்துள்ளார் என்று கருதி நேற்று முன்தினம் நண்பகல் கூட்டு எதிரணியின் அவசர கூட்டம் ஒன்று கூட்டப் பட்டு ஆராயப்பட்டது. நடைபவனி தொடர்பாக மைத் ரிபால சிறிசேனவுடன் எவ்வாறு பேச வேண்டும் என்றும் தயார் படுத்தல்கள் செய்யப்பட்டன.
நேற்றுமுன்தினம் மாலை ஜனா திபதி செயலகத்தில், கூட்டு எதிர ணியில் உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் களை மைத்திரிபால சிறிசேன சந்தித்துப் பேச்சு நடத்தினார்.
மகிந்த ராஜபக்ச தலைமையில் நாளை நடத்தப்படவுள்ள நடை பவனி தொடர்பாக எந்தக் கருத்தையும் அவர் வெளியிடாதது பலரை ஏமாற்றமடைய வைத்துள்ளது.
நடைபவனிக்கு எதிராக அரசு நட வடிக்கை எதை யும் மேற் கொண டால், அதனைக் கொண்டு கூட்டு எதிரணியின் அர சியல் நட வடிக்கைகளை விரிவாக்கத் திட்ட மிட்டிருந்த மகிந்த தரப்பி னருக்கு, ஜனாதி பதியின் நகர்வு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள் ளது என்று கூறப்படுகின்றது. (ந-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படகுகள் பறிமுதல் ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய வேண்டும் இந்தியா

## வலியுறுத்துகின்றார் பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ்

கொழும்பு, ஜூலை 27
தமிழக மீனவர்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்க வேண்டும். இலங்கை அரசுடன் 2003 ஆம் ஆண்டு செய்து கொண்ட 'படகுகள் பறிமுதல்' தொடர்பான ஒப்பந்தத்தை இரத்து செய்ய வேண்டும். இந்திய நடுவண் அரசை தமிழக அரசு இதுகுறித்து வலியுறுத்த வேண்டும்.



இவ்வாறு பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்தார்.
இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர். இது தொடர்பில் அவர் அறிக்கை வெளியிட்டார்.
அதில் தெரிவித்ததாவது–
தமிழகத்தில் மீன்பிடித் தடைக் காலம் முடிவடைந்து கடந்த மே மாதம் 30 ஆம் திகதி முதன் முறையாக தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்ற போது இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டனர். அன்று முதல் கடந்த 15 ஆம் திகதி வரை 77 தமிழக மீனவர்களை இலங்கைப் படையினர் கைது செய்தனர். தமிழக மீனவர்களுக்கு சொந்தமான 102 மீன்பிடி விசைப்படகுகள் இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்டு பல மாதங்களாக துறைமுகங்களில் நிறுத்தப்பட்டுள்ளன.
தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான படகுகளை விடுவிக்கும் பேச்சுக்கே இடமில்லை என்று இலங்கை மீன்பிடி அமைச்சர் முதல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வரை கூறுகின்றனர். மீனவர்களை விடுதலை செய்துவிட்டு அவர்களுக்கு சோறு போடும் படகுகளை பறிமுதல் செய்து வைப்பது, மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பறித்து உயிருடன் கொல்வதற்கு சமமாகும்.
இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த 5 நாள்களாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். மீனவர்களின் கோரிக்கைகள் குறித்து இந்திய நடுவண் அரசு எதிர்வரும் 29 ஆம் திகதி பேச்சு நடத்த உள்ளது. எதிலும் சம்பந்தப்படுத்திக் கொள்ளாமல் தமிழக அரசு தனித்து நிற்கிறது.
தமிழக மீனவர்கள் இலங்கைப் படையால் கைது செய்யப்பட்டாலோ, படகுகள் பறிமுதல் செய்யப்பட்டாலோ அவற்றை மீட்க வேண்டும் என்று வலியுறுத்தி பிரதமருக்குக் கடிதம் எழுதி விட்டால் கடமை முடிந்தது என்று முதல்வர் ஜெயலலிதா கருதுவதே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணம்.
இந்தியாவின் முன்னாள் பிரதமர் வாஜ்பாய்க்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே 2003 ஆம் ஆண்டு டில்லியில் நடைபெற்ற பேச்சுக்கு பிறகு வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் இந்திய மீனவர்கள் விரைவாக விடுதலை செய்யப்படவேண்டும். அவர்களின் படகுகளை மட்டும் வழக்கு முடியும் வரை பறிமுதல் செய்து வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது எனக் குறிப்பிடப்பட்டது. இந்த ஒப்பந்தம் இரத்து செய்யப்படும் வரை இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதைத் தடுக்க முடியாது.
தமிழக மீனவர்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்க வேண்டுமெனில், இலங்கை அரசுடன் செய்து கொண்ட படகுகள் பறிமுதல் தொடர்பான ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்று இந்திய நடுவண் அரசை தமிழக அரசு வலியுறுத்த வேண்டும்.
நடுவண் அரசுக்கும், மீனவர்களுக் கும் 29 ஆம் திகதி டில்லியில் நடைபெறவுள்ள பேச்சில் தமிழக அரசும் பங்கேற்று இந்தக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும் – என்றுள்ளது.(ற–5)

## ஊழல் குறித்த பாட நெறி அடுத்த ஆண்டு அறிமுகம்

கொழும்பு, ஜூலை 27
பாடசாலைப் பாடங்களில் லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான பாடநெறியை அறிமுகப்படுத்துவதற்கு லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.
இது தொடர்பில் ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது என்று கூறப்படுகின்றது.
ஆரம்பக்கட்ட வேலைத் திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான பாடநெறிகள் 6 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டத்துக்கு கல்வி அமைச்சின் அனுமதி கிடைத்துள்ளது.
அடுத்த வருடம் முதல், பாடத்திட்டம் பாடசாலைகளில் உள்வாங்கப்படவுள்ளது என்று ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (ற–5)

# நடைபவனியைத் தடுக்க முயன்றால் நெருக்கடியை சந்திப்பர் பொலிஸார்

## அச்சுறுத்துகின்றார் உதய கம்மன்பில எம்.பி.

கொழும்பு, ஜூலை 27
மகிந்த ராஜபக்ச தலைமையில் கூட்டு எதிர்கட்சி கண்டியில் நாளை ஆரம்பிக்கவுள்ள நடைபவனியைத் தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்தால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.
இவ்வாறு எச்சரித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில. கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது–
எமது நடைபவனியின் வெற்றியைக் கண்டு அரசு அச்சத்தில் உள்ளது. யானைக் குட்டிக்கும் 40 திருடர்களுக்கும் திருடுவதற்கு இடமளியுங்கள் என்ற கோரிக்கையை முன்வைத்தா நடைபவனியை முன்னெடுக்கிறீர்கள் என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.
யானைக் குட்டி எங்களிடம் அல்ல. உங்களிடமே காணப்படுகிறது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.
யானையைக் காப்பாற்றிக் கொண்டிருப்பது நீங்களே. உங்களுடைய அமைச்சரவையில் இருக்கும் 44 அமைச்சர்களே திருடர்கள். மத்திய வங்கியின் ஆளுநர் ஊழலில் ஈடுபட்டுள்ளார் என்று கணக்காய்வாளரே குறிப்பிட்டுள்ளார்.
நிலக்கரி கொடுக்கல் வாங்கலில் ஊழல் நடந்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவை நடந்தது எமது அரசில் அல்ல. உங்கள் அரசிலேயே. எங்களை கட்டுப்படுத்த முயற்சிக்க வேண்டாம் என்று நாம் கூறுகின்றோம். நடைபவனியைச் சீர்குலைக்கும் நோக்கில் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் விடுமுறைகளை இரத்து செய்து அவர்களை ஆய்வுகளுக்கு அனுப்ப அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.
இதன்மூலம் அரசின் அச்சம் வெளிப்பட்டுள்ளது. நடைபவனியைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று ஊடகங்கள் ஊடாக அறிய முடிகிறது. நீதிமன்ற உத்தரவைப் பெற்றுக்கொள்ள முயற்சித்து நெருக்கடியில் விழவேண்டாம் என்று நாங்கள் பொலிஸ் பொறுப் பதிகாரிக்கு ஞாபகப் படுத்த விரும்புகி றோம்.
நடைபவனி அரசமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமையாகும். மோதல் நடைபெறலாம். வாகன நெரிசல் ஏற்படலாம் என்று பொய்யான தகவல்களை நீதிமன்றுக்கு வழங்கி இதனைத் தடுக்க பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் முயற்சிப்பார்களாயின், எங்களது அடிப்படை உரிமைகளை மீற முயற்சிப்பார்களாயின் அவர்களுக்கு எதிராக உயர் நீதிமன்றம் செல்வோம். நாங்கள் சென்றால் அவர்களது பதவிகள் பறிபோகும். வெளிநாட்டு புலமைப்பரிசில்கள் இல்லாமல் போகும். நடை[illegible] படுத்த வேண்[illegible] எச்சரிக்கின்றோம்– என்றார். (ற–5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# நல்லாட்சி அரசு மனதார்ந்து செயற்பட முனையுமா..?

அதிகாரப்பகிர்வை, நாட்டைப் பிளவுபடுத்தும் அலகாகக் கருதுவது தவறு. உலகில் ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் அதிகாரப் பகிர்வை அடிப்படையாகக் கொண்ட, சமஷ்டி முறையில் அமைந்த நிர்வாகம் காணப்படுகிறது.

அதிகாரப் பகிர்வை அடிப்படையாகக் கொண்ட, சமஷ்டி முறையில் அமைந்த அலகுகளை தனிநாடுகளாகக் கருதுவது இல்லை.

இதே வேளை, அதிகாரப்பகிர்வை தனிநாடாக அர்த்தப்படுத்துவது தெளிவற்ற விடயமாகவே தொடர்கிறது. ஏனெனில், உலகில் ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகள், அதிகாரப் பகிர்வை அடிப்படையாகக் கொண்ட நிர்வாக முறைமையையே கொண்டுள்ளன.

அதனைக் கருத்தில் கொண்டு, சுவிஸ் சர்லாந்தின் சமஷ்டியை இலங்கைக்குள் திணிக்கவோ, அன்றிப் பசைபோட்டு ஒட்டவோ இயலாது.

அரசியல் தீர்வு ஒன்றின் அவசியம் வெளிப்பட்டுள்ள இப்போதைய நிலையில், அதனை அடைவதற்கான கட்டாய தேவை தென்படுகிறது.

மேற்போந்த, அர்த்த புஷ்டியான கருத்தை வெளியிட்டுள்ளார், இலங்கைக்கான சுவிஸ்சர்லாந்தின் தூதுவர் ஹெயின் வோல்க்கற் நெடர்குன்

இலங்கையில், 1983 ஆம் ஆண்டில் மேலெழுந்த கறுப்பு ஜூலையில் ஆரம்பித்து, சுவிஸ்சர்லாந்தில் ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் தஞ்சம் புகுந்து வாழ்கிறார்கள்.

மேலும், தற்போதைய சூழல் இந்த நாட்டில் மாறுபட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்ட சம்பவம் அதனைத் தொட்டுக் காட்டுகிறது அல்லவா..?

இந்த நாட்டின் பிரசைகள் ஒன்றிணைந்து வாழக்கூடிய நிலை இன்னமும் தென்படவில்லை. அதனை மாற்றுவதற்கு உகந்த சூழல் உருவாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்று இடித்துரைத்துள்ளார் இலங்கைக்கான சுவிஸின் தூதுவர்.

நல்லாட்சி அரசு என்ற தொனிப்பான பெயர் சூட்டிச் செயற்படும் மைத்திரி-ரணில் ஆட்சிபீடம், மேற்போந்தவற்றை உள்வாங்கிச் செயற்பட்டாக வேண்டும்.

எதிபார்க்கலாமா? அதற்கான மனதார்ந்த, நாட்டு நலன் நாடிய விரும்பும் ஓர்மமும், காய்த்துப் பழுக்க வேண்டும்.

கொழும்பு அரசிடம் அது தொடர்பில் எத்தனை வீதாசாரம் உண்டு என்று யாருக்குத்தான் தெரியும்...?

சிங்கள மக்களின் தலைவர்களாக மட்டுமன்றி, இந்த நாட்டின் எல்லா இனமக்களினதும், தலைவர்களாகவும் விளங்கி--

அதனூடு உலகளாவிய மட்டத்தில் மதிக்கத்தக்க தலைவர்களாகவும் அவர்கள் இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், எதிர்பார்க்கலாமா என்ன?

சண்டே ரைம்ஸ்
கட்டுரையில்
இருந்து ரெங்கன்

> எதிரணியினரின் பேரணியின் முதல்நாள் நிகழ்ச்சிகளை வரும் 28ஆம் திகதி ராஜபக்ச தலைமைவகித்து ஆரம்பித்து வைப்பார். பின்னர் ஓகஸ்ட் முதலாம் திகதி பேரணியினரை கொழும்பில் அவர் எதிர்கொண்டு வரவேற்பதற்கு ஏற்பாடாகியிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டமானது வழக்கத்தைவிட நீண்ட நேரம் தொடர்ந்தது. இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மகிந்த ராஜபக்சவை கடுமையாகக் குறை கூறியிருந்தார். இவ்வாறு இதற்கு முன்னர் ராஜபக்சவை ஜனாதிபதி சிறிசேன அமைச்சரவைக் கூட்டம் எதிலும் வைத்துக் கண்



டித்துப் பேசியது கிடையாது என்று அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். அவர் தனது மனதில் கிடந்ததை வெளியில் விடுத்தார் என்றார். அமைச்சர் ராஜபக்ச கூட்டு எதிரணியினரும் அரசுக்கு நிகழ்ச்சி நிரல் அமைத்துக் கொடுக்க முயல்கிறார்கள் என்ற ஜனாதிபதி, ஜூலை 28ஆம் திகதி கண்டியிலிருந்து கொழும்புக்கு அவர்கள் நடத்தவிருக்கும் பேரணியைச் சுட்டிக்காட்டினார் .

எதிரணியினரின் பேரணியின் முதல்நாள் நிகழ்ச்சிகளை வரும் 28ஆம் திகதி ராஜபக்ச தலைமை வகித்து ஆரம்பித்து வைப்பார். பின்னர் ஓகஸ்ட் முதலாம் திகதி பேரணியினரை கொழும்பில் அவர் எதிர்கொண்டு வரவேற்பதற்கு ஏற்பாடாகியிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. ராஜபக்ச ஆதரவாளர்களின் பல்வேறு பிரிவினரும் வெவ்வேறு நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலைமையில் பேரணியில் கலந்து கொள்வர். ஒவ்வொரு பிரிவுக்கும் வெவ்வேறு நிறங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ராஜபக்சவினரின் தகிடுதத்தங்கள் எதுவாகவாவது இருந்து விட்டுப்போகட்டும். ஆனால் அவரும் அவரது குடும்பத்தினரும் மேற்கொண்ட முறைகேடுகள் தொடர்பான பல்வேறு விசாரணைகளும் முன்னெடுக்கப்படவேண்டும். அத்துடன் அவைகள் தொடர்பான சட்ட நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்படவேண்டும் என்று சிறிசேன வலியுறுத்தினார். சிலர் அவர்கள் பின்னால் ஏன் ஓடித் திரிகிறார்கள் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இன்றைய அரசின் முன்னேற்றச் செயற்பாடுகளுக்கு முட்டுக் கட்டைபோட ராஜபக்சவும், எதிர் அணியினரும் எத்தனித்து வருகிறார்கள் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். இந்த அரசின் பங்காளிகளுக்கிடையில் ஒற்றுமை இருக்க வேண்டும். இந்த அரசு வீழ்ந்துவிட மாட்டாது. அதற்கு நாம் இடம் கொடுக்கப்போவதில்லை என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

**இரண்டு முக்கிய அமைச்சரவைக் குழுக்கள்**

அமைச்சர்கள் இரண்டு முக்கிய குழுக்களை நியமிப்பதற்குத் தீர்மானித்தார்கள். பிரச்சினைகள் ஏற்படும்போது அவைகள் தொடர்பாக பொது நிலைப்பாட்டை மேற்கொள்வதற்கு ஒரு குழு நியமிக்கப்படும் இரண்டாவது குழு ஜூலை 28ஆம் திகதியில் எதிரணியினரின் பேரணி உட்பட அவர்கள் செயற்பாடுகளால் உருவாகும் நிலைமைகளைக் கையாள்வதற்கானதாக இருக்கும்.

தேசிய மற்றும் முக்கிய பொது விடயங்கள் தொடர்பில் ஒரே குரலில் பேசுவதற்கு அரசுத் தலைவர்களால் முடியாமல் இருப்பது பெரும் குறைபாடாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

பல அமைச்சர்கள் மற்றும் அவர்களின் பிரதி அமைச்சர்கள் அடிக்கடி ஒருவருக்கொருவர் முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டு தமது கருத்தே அதிகாரபூர்வமானதுபோல் காட்டிக் கொள்கிறார்கள். வேறு சிலர், விடயங்களில் போதிய அறிவு இல்லாமல் இருப்பதுடன், அவர்களின் கருத்துக்கள் அரசுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்துபவையாகவும் அமைந்து விடுகின்றன. இதில் ஒரு சம்பவம் என்னவென்றால், இலங்கை அரசு பனாமா அதிகாரிகளிடம் வெளிநாட்டு நிறுவனங்களில் கணக்குகள் வைத்திருக்கும் இலங்கையர்களின் பெயர்களை வழங்கும்படி கேட்டிருக்கிறது என்று ஓர் அமைச்சர் அறிவித்திருந்தமையாகும்.

கண்டியிலிருந்து கொழும்பு நோக்கி எதிர்த் தரப்பினர் பேரணி நடத்தும்போது பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுமா, வன்செயல்கள் ஏதும் தூண்டிவிடப்படுமா என்பவை பற்றி இரண்டாவது குழு கவனம் செலுத்தும் என்று ஓர் அமைச்சர் தெரிவித்தார். அரசில் உள்ள பங்காளிக் கட்சிகள் ஒற்றுமையாக செயற்படவேண்டும் என்று ஜனாதிபதி கூறினார். இரண்டு குழுக்களிலும் பிரதம மந்திரியும் ஜனாதிபதியும் அங்கம் வகிப்பார்கள் என்று தெரிகின்றது.

**அபாயகரமான அதிகாரி**

தகவல் திணைக்களத்துக்குப் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள ஓர் அதிகாரியைப் பற்றியும் ஜனாதிபதி கடும் குற்றச்சாட்டை முன்வைத்தார். அவர் ஒரு மிகப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரணியின் பேரணி குறித்து அமைச்சரவையில் விவாதம்

## ராஜபக்ச மீது ஜனாதிபதி கடும் காட்டம்



"அரசதுறை ஊடகங்கள் தமக்கு ஆதரவாக செயற்படவில்லையென்றும் கூறினார். இந்த மாதம் முற்பகுதியின் அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பேசும்போதும் இந்தக் குறைபாட்டை ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அரசுக்கு மக்கள் ஒன்றாக செயற்படுவதற்கான ஆணையையே வழங்கினார்கள். எனவே நாம் ஒன்றாகவே முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார்."

பயங்கரமான நபர் என்று ஜனாதிபதி வர்ணித்தார். அவர் திபெத்திய பௌத்த தலைவர் தலாய்லாமாவை பற்றி சில கருத்துக்களை பகிரங்கமாகக் கூறியிருந்தார். அந்தக் கருத்துக்கள் அரசின் கருத்து என்பதாக அர்த்தம் கொள்ளப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி கூறினார்.
அரசின் தகவல்துறை சம்பந்தப்பட்டவர் என்பதால் குறித்த கருத்தை இது, மேலும் உறுதிப்படுத்துவதாய் இருந்துள்ளது. இது பற்றிச் சீனத் தூதரகத்தினர் கேள்வி எழுப்பிய போது, தமக்குப் பெரும் மனச் சங்கடம் ஏற்பட்டது என்று ஜனாதிபதி தெரிவித்தார். முன்னரும் அவர் இவ்வாறு தவறிழைத்துள்ளார். தாம் அவரை அழைத்து எச்சரிக்கை செய்திருந்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், அரசதுறை ஊடகங்கள் தமக்கு ஆதரவாகச் செயற்படவில்லையென்றும் கூறினார். இந்த மாதம் முற்பகுதியில் அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பேசும் போதும் இந்தக் குறைபாட்டை ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அரசுக்கு மக்கள் ஒன்றாகச் செயற்படுவதற்கான ஆணையையே வழங்கினார்கள். எனவே நாம் ஒன்றாகவே முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார்.
ஜனாதிபதியின் கருத்துக்களை பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க ஆமோதித்தார். தகவல் துறையில் புதிதாகச் சேர்ந்துள்ள அதிகாரி வெளியிட்டுள்ள கருத்துப் பற்றி தாம் முதலில் அறிந்திருக்கவில்லையென்றும் பிரதமர் குறிப்பிட்டார். இது பற்றிக் கேள்விப்பட்டதும் அவரிடம் பேசி இவ்வாறு நடந்து கொள்வதைத் தவிர்க்கும்படி எச்சரித்ததாகக் கூறினார்.
வேறுசில அமைச்சர்களும் ஒருமைப்பாட்டை வலியுறுத்தினார்கள். நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க பேசும் போது வற்வரி அதிகரிப்புத் தொடர்பாக எதிரணியினர் ஏன் எதிர்ப்புக்களை இன்னும் முன்வைக்கிறார்கள் என்பது விளங்கவில்லை. வரவு-செலவுத்திட்டத்தின் 17 முன்மொழிவுகளில் 16 முன்மொழிவுகள் நீதிமன்றங்களில் விசாரணையில் இருப்பதால் செயற்படுத்த முடியாமல் இருக்கிறது என்றார். முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் கப்ரால் மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் அலுவலர்களின் பிரதானி காமினி செனரத் மற்றும் அவன்ட் கார்ட் மெரிடைம் சேர்விசஸ் நிறுவனம் ஆகிய விசாரணைகளின் முன்னேற்றம் குறித்தும் அவர் கேள்வி எழுப்பினார்.
அதே புதன்கிழமை மாலையில் இன்றைய தேசிய ஒற்றுமை அரசின் செயற்பாடுகளைக் கண்காணித்து வரும் மும்மூர்த்திகளான ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகிய மூவரும் வெகு நாள்களுக்குப் பின்னர் சந்தித்து நீண்டதொரு கலந்துரையாடலை நடத்தினார்கள்.
இன்றைய அரசியல் நிலைமை மற்றும் மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது குடும்பத்தினரின் மீதுள்ள குற்ற விசாரணைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது. எவராயினும் சரி, தகுந்த ஆதாரங்கள் இருப்பின் சட்டநடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்பதை சந்திரிகா பண்டாரநாயக்க வலியுறுத்தியதாகத் தெரிகின்றது.

## உண்மையைக் கூறும் உதயனது செய்தி குசும்பா?

அச்சுவேலிதெற்கு உலவிக்குளம் பிள்ளையார்கோயில் தேர்த்திருவிழாவின்போது தேரின் ஒருபக்க வடத்தை சீருடையினர் ஆக்கிரமித்துக் கொண்டனர். தேர் இழுத்து நேர்த்தி செலுத்த வந்தவர்கள் பக்கமாக ஒதுங்கி நின்று பிள்ளையாரை வழிபட்டனர் என்ற (20.07.2016) அன்று ஒளிப்படத்துடன் உதயன் வெளியிட்ட செய்தியை விமர்சித்து (21.07.2016) வாசகர் திருமுகம் பகுதியில் ராஜா என்ற வாசகர் உதயனுக்கு ஏனிந்தக் குசும்பு என்று தலைப்பிட்டு வந்த செய்தி படித்தேன். வாசகர் கூறும் மேலாதிக்கப் போக்குடன்தான் சீருடையினர் வடக்கு-கிழக்குப் பகுதியில் தமது செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றனர் என்பது வாசகருக்கும் அவர் தம் நண்பருக்கும் புரியாமல் இருப்பது எமது துரதிர்ஷ்டமே. பெரும்பான்மையினத்தினர் இந்துமத தெய்வங்களை வழிபட்டு வருகின்றனர் என்பது தமிழ் மக்கள் அறிந்ததே. அதேபோன்று விகாரைகளைத் தாண்டும் போது கோயில் என்ற ரீதியில் நாமும் கையெடுத்துக் கும்பிட்டே செல்கின்றோம். ஓர் ஆலயத்தில் மகோற்சவம் தொடங்கினால் முடியும் வரை ஆலயச்சூழலில் வாழும் மக்கள் பல்வேறு விதமான நேர்த்திகளை வைத்து விரதமிருந்து வடம்பிடித்து தேர் இழுப்பது என்பது தமது நேர்த்திக்கு கிடைத்த பெரும் பேறு என நினைப்பதுண்டு. நேர்த்தி வைத்தவர்கள் ஒதுங்கி நிற்க, சீருடையினர் முழுமையாக வடம் பிடித்திழுத்தமை மேலாதிக்கம் அன்றி வேறென்ன? வடக்கு-கிழக்கு தமிழ்மக்கள் வாழ்ந்த பூமியில், உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் சீருடையினர் தங்கியிருப்பது மேலாதிக்கம் இல்லையா? தமிழ் மக்களின் விவசாய நிலங்களில் சீருடையினர் விவசாயம் செய்து, விவசாய பொருள்களை அடிமாட்டு விலைக்கு சந்தையில் விற்பது மேலாதிக்கம் இல்லையா?கடலே கதியென கடலை நம்பி வாழும் எமது மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை நலிவுபடுத்தி தமது இன மீனவர்களைப் பாதுகாப்புடன் தொழில் செய்ய அனுமதிப்பது மேலாதிக்கம் இல்லையா? வடம் பிடித்து தேர் இழுத்த சீருடையினர், தேர் இருந்த இடமெல்லாம் பௌத்த விகாரை கட்டியிருப்பது மேலாதிக்கம் இல்லையா? தமிழர் தம்தேசத்தில் தமது இனத்தவரை குடியிருத்தி பாதுகாப்பளிப்பது மேலாதிக்கம் இல்லையா? இதனாலேயே எமது தமிழ் அரசியல் தலைமைகள், வடக்கு-கிழக்கில் இருந்து இராணுவத்தினர் வெளியேற்றப்பட வேண்டும் என்று கூறி நிற்கின்றனர் என்பதை வாசகரும் அவரது நண்பரும் புரிந்து கொள்வது சாலச்சிறந்தது.
'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதனையே உதயன் தன் பிறப்பு முதல் உலகறிய உணர்த்தி வருகின்றான். உண்மைகளைக் கூறிய உதயனின் செயல் குசும்பல்ல.

**கொக்குவில் மைந்தன்.**

## உதயனோடு உங்களுக்கேன் இந்த வம்பு

அச்சம் தவிர்த்து செய்தி வெளியிடும் உதயனுக்கு செய்திகளால் குசும்பு விட நேரமில்லை. எந்தச் செய்திக்கும் இருபக்கங்கள் அல்ல, பல பக்கங்கள் இருக்கலாம். இந்து ஆலயங்களுக்குச் செல்வதற்கு ஒரு பண்பாட்டு முறை இருக்கிறது. அதிலும் தேர் வடம் பிடிக்க விரதம் இருக்க வேண்டும். உளத் தூய்மை, உடல் தூய்மை, உடைத்தூய்மை ஆகிய மூன்றும் வேண்டும். நான் அடித்துச் சொல்லுவேன், இந்த மூன்றும் படையினரிடம் இல்லை. பிள்ளையார் சிலைகளைத் திருடவும் அடித்து நொறுக்கவும்தான் தெரியும். கண தெய்யோ எனக்கூறுவது ஏன் தெரியுமா? இலங்கையில் பூர்வீக மதம் இந்து மதமே என்பதைத் திரிவுபடுத்தி பௌத்தர்கள் கண தெய்யோ என்று வழிபட்டதாக நிறுவ முயல்கின்றனர். பௌத்தம் நிலை நாட்ட வடம்பிடித்து வழி தேடும் குள்ளநரித் தந்திரம் தெரியாமல் இப்படி விசுக்கோத்து மாதிரி சிந்திக்கிறார்களே உதயன் வாசகரும் அவரது நண்பரும். வீடு கொளுத்துபவனுக்கு கொள்ளிக் கட்டை எடுத்துக் கொடுக்க வேண்டாம். படையினரின் சீருடையில் குருதி வாடை இன்னும் போகவில்லை. இவர்களால் குருதிக்கறை தோய்த்த தமிழ் மண்ணின் குருதிக் கறை கழுவப்படவில்லை. 2009 ஆம் ஆண்டு போரின் இறுதியில் தமிழ் அப்பாவிப் பெண்களை சிதைக்க ஆயத்தமாகி நின்றதுபோல இருக்கு இவர்களின் தோற்றம். நீங்கள் கண தெய்யோ என்று கதை அளக்கின்றீர்கள். அளவுக்கதிகமான படைச் சேர்ப்பால் திணறி நிற்கும் அரசு படையினரை தமிழ்ப் பிரதேசத்தில் சமூகமயப்படுத்தி கலப்படம் செய்து, இடம் பிடிக்க வடம் பிடிப்பதை ஏன் புரிந்துகொள்ள மறுத்து உதயனோடு வம்பு செய்கின்றீர்கள்!

**இரா.பிரம்மா**

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். இன்றேல் உண்மையான விபரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத் திறனாளிகளின் இல்லத்தில் கத்திக்குத்து! 19 பேர் கொடூரக் கொலை!!

## ஜப்பானில் நேற்று அதிகாலை பயங்கரம்



டோக்கியோ, ஜூலை 27

ஜப்பான் தலைநகர் டோக்கியோவின் புறநகர்ப் பகுதியில் உள்ள மாற்றுத் திறனாளிகள் இல்லத்தில், அதன் முன்னாள் ஊழியர் ஒருவர் கத்தியால் குத்தி, சர மாரியாகத் தாக்குதல் நடத்தியதில் 19 பேர் உயிரிழந்தனர். 45 பேர் படுகாயமடைந்தனர்.

ஜப்பானின் டோக்கியோ நகரத்திலிருந்து 50 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது சாகாமிஹாரா நகரம். இங்கு, மாற்றுத் திறனாளிகள் இல்லம் ஒன்று உள்ளது. இந்த மையத்துக்குள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் நுழைந்த முன்னாள் ஊழியர் ஒருவர் கத்தியால் கண்ணில் தென்பட்டவர்களையெல்லாம் சரமாரியாகத் தாக்கியுள்ளார். இந்தத் தாக்குதலில் 19 பேர் உயிரிழந்தனர். 45 பேர் படுகாயமடைந்தனர்.

இது தொடர்பாகப் பொலிஸ் நிலையத்துக்குத் தொலை பேசியில் தகவல் கொடுத்த நபர் ஒருவர், மர்ம நபர் ஒருவர் கத்தியால் தாக்குதல் நடத்தினார் என்றும், உடனடி மருத்துவ வசதிகள் தேவை என்றும் கூறினார்.



உடனடியாக அங்கு விரைந்த பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு, மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதற்கிடையே, தாக்குதலில் ஈடுபட்ட நபர், சம்பவம் நடந்த இரண்டு மணி நேரத்தில் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். தாக்குதலுக்குப் பயன்படுத்திய கத்தியைக் காரில் வைத்திருப்பதாக அவர் கூறினார்.

தாக்குதலில் ஈடுபட்ட நபர் சதோஷி உமேட்சு (வயது-26) என ஜப்பான் நாட்டு ஊடகங்களில் தகவல் வெளியாகியது. இவர், தாக்குதல் நடத்திய இல்லத்தில் ஏற்கெனவே பணிபுரிந்திருக்கிறார் எனவும் கூறப்படுகின்றது. (கு)




# மலேசியாவில் படகு கவிழ்ந்து 8 பேர் சாவு

## 20 பேரைக் காணவில்லை



கோலாலம்பூர், ஜூலை 27

மலேசியாவின் கடற்கரை ஜோஹர் மாகாணத்தில், கடலில் எழுந்த இராட்சத அலையில் சிக்கிப் படகு கவிழ்ந்ததில் கடலில் மூழ்கி உயிரிழந்த 8 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டதோடு, படகில் இருந்த 20 பேர் காணாமற்போயுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் இந்தோனேஷியாவிலிருந்து ஜோஹர் மாகாணத்தின் ஊடாகச் சட்டவிரோதமாக மலேசியாவுக்குள் குடியேறியவர்களே உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மலேசியாவிலிருந்து இந்தோனேசியர்கள் 62 பேர் மீண்டும் இந்தோனேஷியா செல்வதற்காகக் கடந்த சனிக்கிழமை இரவு படகில் புறப்பட்டனர்.

ஜோஹர் மாகாணத்துக்கு அருகே படகு சென்றபோது கடலில் எழுந்த இராட்சத அலையில் சிக்கி அது கவிழ்ந்தது. நேற்றுமுன்தினம் காலை கப்பலில் ரோந்து சென்ற கடலோரப் பொலிஸ் படையினர் படகு கவிழ்ந்து கிடப்பதைக் கண்டு விரைந்து சென்று உயிருக்குப் போராடிய கொண்டிருந்த 34 பேரை மீட்டனர். நீரில் மூழ்கி உயிரிழந்த 8 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டதோடு, மேலும் படகில் இருந்த 20 பேர் காணாமற் போயினர். அவர்களைத் தேடும் பணி இடம்பெற்று வருகின்றது. (கு)

# தடுப்புக் காவல் மையத்தில் இளைஞர்கள் சித்திரவதை

## விசாரணைக்கு ஆஸ்திரேலிய அரசு உத்தரவு



கான்பிரா, ஜூலை 27

ஆஸ்திரேலியாவின் வடக்கு எல்லையில் அமைந்திருக்கும் இளையோர் தடுப்புக் காவல் மையத்தில், சிறைப் பாதுகாப்புப் பணியாளர்கள், பதின்ம வயது இளைஞர்களைத் தாக்குவதும், அவர்கள் மீது கண்ணீர்ப் புகை வீசுவதும் தொலைக்காட்சி ஆவணப்படத்தில் ஒளிபரப்பப்பட்டதை அடுத்து, அரசு அது பற்றிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

சிறைக் கைதி ஒருவர் ஆடைகளையப்படுவது, இன்னொருவர் கழுத்தில் பிடித்துத் தூக்கி சிறைக்குள் வீசப்படுவது, இன்னொருவர் தலை மூடப்பட்டும், விலங்கிடப்பட்டும் ஏறக்குறைய இரண்டு மணி நேரம் நாற்காலியில் உட்கார வைக்கப்பட்டிருப்பது ஆகியவை இந்த ஆவணப் படத்தில் ஒளிபரப்பானது.

2010, 2014 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் பதிவு செய்யப்பட்ட இந்தப் படங்களைப் பார்த்து அதிர்ச்சி அடைந்ததாகப் பிரதமர் மல்கம் டர்ன்புல் கூறினார்.

இந்த வடக்கு எல்லையானது ஆஸ்திரேலியாவில் அதிக குற்றங்கள் பதிவாகும் பகுதிகளில் ஒன்றாகும்.

இந்தச் சிறையில் இருப்போரில் மூன்றில் இரண்டு பகுதியினர் ஆஸ்திரேலியப் பழங்குடியினர் என்று கூறப்பட்டது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹிலாரிக்கு ஆதரவாக மிச்செல் ஒபாமா உரை

### ட்ரம் மீது கடும் சாடல்




வொஷிங்ரன், ஜூலை 27
அதிபர் வேட்பாளராக ஹிலாரி கிளின்டனை அறிவிப்பதில் அமெரிக்க ஜனநாயகக் கட்சி ஒற்றுமையுடன் இருப்பதற்காக, உணர்ச்சி மிக்க உரை ஒன்றை அமெரிக்காவின் முதல் பெண்மணி மிச்செல் ஒபாமா ஆற்றினார். செனட் அவை உறுப்பினர் பெர்னி சான்டர்ஸின் ஆதரவாளர்களால் நடத்தப்பட்ட போராட்டத்தின் பின்னர் பேசிய மிச்செல், ஹிலாரி கிளின்டன் அழுத்தங்களால் ஒருபோதும் சோர்ந்து போகவில்லை என்று கூறினார்.
அதிபர் வேட்பாளராக அறிவிக்கப்பட 140 எழுத்துச் சொற்களைப் பயன்படுத்தி மட்டுமே, பிரச்சினைகளை எளிமைப்படுத்திவிட முடியாது என்று ஹிலாரி கிளின்டனுக்குத் தெரியும் என்றும் அவர் தெரிவித்தார்.
140 எழுத்து அல்லது இட வடிவங்களை மட்டுமே அதிகபட்சமாக அனுமதிக்கும் ருவிற்றரில் செய்தி அனுப்புவதில் மிகுந்த ஈடுபாடு காட்டும் குடியரசுக் கட்சியின் அதிபர் வேட்பாளர் டொனால்ட் டிரம் மீதான தெளிவான தாக்குதல் இதுவெனக் கருதப்படுகின்றது. (இ)

# உலகை முதல் முறையாகச் சுற்றி வந்து சோலர் இம்பல்ஸ் விமானம் சாதனை







அபுதாபி, ஜூலை 27
சூரிய சக்தியை மட்டுமே பயன்படுத்தி, உலகைச் சுற்றி வரும் சோதனை முயற்சியைச் சோலர் இம்பல்ஸ் - 2 விமானம் நிறைவு செய்தது.
ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து பயணத்தைத் தொடங்கிய இந்த விமானம், உலகைச் சுற்றி வருவதற்கு 16 மாதங்கள் எடுத்துக் கொண்டு, உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை நான்கு மணியளவில் அபுதாபியை வந்தடைந்தது.
விமானி பெர்டிரான்ட் பிக்காட் இந்தப் பயணத்தின் 17ஆவது மற்றும் கடைசி நிலையான கெய்ரோவை விட்டுச் சனிக்கிழமை புறப்பட்டார். உலகை மாற்றக்கூடிய, மாசு விளைவிக்காத தொழில்நுட்பத்தின் ஆற்றலை இந்த விமானம் நிரூபித்துள்ளதாக, இந்த முயற்சிக்கு பின்னால் இருக்கும் சுவிற்சர்லாந்திலிருந்து இயங்கும் அணி கூறியிருக்கிறது.
ஓராண்டுக்கு முன்னர் ஜப்பானிலிருந்து ஹவாய் தீவுக்குப் பறந்த மிக நீண்ட பயணத்தின்போது,
இந்த விமானத்தின் மின்கலங்களில் அதிக வெப்பம் உருவானதால், இந்த ஆண்டு ஏப்ரல் மாதம்வரை இது செயற்படவில்லை. (இ)

## தீவிரவாதிகள் தங்கியிருந்த மறைவிடம் மீது தாக்குதல்

### பங்களாதேஷில் 9 பேர் சாவு



டாக்கா, ஜூலை 27
பங்களாதேஷ் தலைநகரான டாக்காவுக்கு அருகில் இருக்கும் ஒரு மறைவிடத்தின் மீது தாக்குதல் நடத்தி, இஸ்லாமியவாதத் தீவிரவாதிகள் என்று சந்தேகப்படும் ஒன்பது பேரைச் சுட்டுக் கொன்றதாகப் பங்களாதேஷ் பொலிஸார் அறிவித்தனர்.
இன்னொரு தீவிரவாதி கைது செய்யப்பட்டார்.
இவர்கள் எந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.
ஜமாத்துல்-முஜாஹிதீன் இஸ்லாமியவாதக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் எனச் சந்தேகப்படும் பலரைப் பொலிஸார் அண்மையில் கைது செய்திருந்தனர்.
20 பேர் கொல்லப்பட்ட, டாக்காவின் உயர்தர உணவகம் ஒன்றில் சமீபத்தில் நடைபெற்ற தாக்குதலில் இந்தக் குழுவின் ஈடுபாடு இருந்ததாக அரசு குற்றஞ்சுமத்தியுள்ளது. இந்நிலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது தீவிரவாதிகள் மறைந்திருந்த இடம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனப் பங்களாதேஷ் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (இ)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி?

## மேடம்

குரு பெயர்ச்சி ஓகஸ்ட் 2ஆம் திகதி ஆடி 18 ,ஆடி அமாவாசை கூடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை–தீமைகளைப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் –இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2, 5, 7,9,11 என முழு சுப பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.



### அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம் வரை

*(மேட ராசியின் பலன்கள் குறித்த நேற்றைய தொடர்ச்சி)*

குருவின் பார்வை அயன, சயன ஸ்தானம் எனப்படும் 12ஆம் இடத்தில் பதிவதால் பயணங்கள் அதிகரிக்கும். அலைச்சல் கூடும். இந்த நேரத்தில் ஆதாயமும் கிடைக்கும். பால்ய நண்பர்கள் உதவியால் புதுமுயற்சி ஒன்று கைகூடும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புக்கள் வந்து சேரும்.

தடைப்பட்டு வந்த சுப நிகழ்ச்சிகள் நடந்தேறும். மங்கல ஓசையும், மழலையின் ஓசையும் கேட்கப் போகிறது. வீடுமாற்றம், நாடுமாற்றம் போன்றவை எதிர்பாராத விதத்தில் வந்து சேரும். குரு, சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (2.8.2016 முதல் 19.9.2016 வரை): பிள்ளைகள் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அவர்களின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்களில் இலாபம் உண்டு. பாகப்பிரிவினைகளுக்காக எடுத்த முயற்சிகளில் பலன் கிடைக்கும்.

குருபகவான், சந்திர சாரத்தில் சஞ்சரிக்கும்பொழுது (20.9.2016 முதல் 24.11.2016 வரை): பெற்றோர்களால் விரயம் உண்டு. பிரச்சினைகளில் இருந்து விலக வழிபிறக்கும். தொழிலுக்கு மூல தனம் வந்து சேரும். புதிய வாகனம் வாங்க முயற் சிப்பீர்கள். வெளிநாட்டு தொடர்பு கிடைக்கும்.

குரு, செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும்பொழுது (25.11.206 முதல் 21.2.2017 வரை மற்றும் 2.6.2017 முதல் 1.9.2017 வரை) இல்லத்தில் சுப நிகழ்ச்சி நடைபெறும். ஆரோக்கியம் சீராகும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். சொத்துக்கள் வாங்க முடிவு எடுப்பீர்கள்.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**
மேட ராசியில் பிறந்த பெண்களுக்கு மேன்மையான காலம் இது. பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய பாதை புலப்படும். உத்தியோகத்தில் சேரும் வாய்ப்பு கைகூடி வரும். ஊர்மாற்றமோ, வீடு மாற்றங்களோ வருவதற்கான அறிகுறிகள் தென்படும். கோபத்தைக் குறைத்துக்கொண்டு செயற்படுவது நல்லது. தொழில் செய்பவர்களுக்கு தொகை கடைசி நேரத்தில் வந்து சேரும். பகையை வளர்த்துக் கொள்ளாமல் பாசத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். இளைய சகோதரத்தோடு இணக்கம் அதிகரிக்கும். கணவன்–மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயரை வழிபட்டால் தொல்லைகள் தீரும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்கிரக காலம்!**
இந்தக் காலத்தில் செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும் என்றாலும், மனக்கவலையும் அதிகரிக்கக் கூடும். 9,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக குரு விளங்குவதால் பெற்றோர் வழியில் பிரியம் குறையலாம். குரு அதிகாரம் பெற்று துலாம் ராசியில் சஞ்சரிக்கும்பொழுது உங்கள் ராசியைப் பார்ப்பார். எனவே அந்தக் காலம் பொற்காலமாக அமையும். அனைத்து வழிகளிலும் நன்மை கிடைக்கும். பொருளாதார நிலை உயரும். புதிய பொறுப்புக்களும், பதவிகளும் வந்து சேரும்.

**செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!**
ராசிநாதன் செவ்வாய் என்பதால், முருகப்பெருமானை முறையாக வழிபட்டு வாருங்கள். சஷ்டி விரதமிருந்து வந்தால் சங்கடங்கள் தீரும். சந்தோசங்கள் வந்துசேரும். (தொடரும்)

---

# வண்ணை வைத்தீஸ்வரன் தையல் நாயகி இன்று கொடியேற்றம்

இராசையா ஸ்ரீதரன்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதிபராசக்தியானவள் தம்மை வழிபடும் அடியார்களுக்குஅருள்புரியும் நோக்கில்தையல்நாயகியம்மை என்னும் திருநாமத்துடனும் எழுந்தருளி வீற்றிருக்கும் புனிதத் தலம் தான் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்.

யாழ்ப்பாணம் பெரிய சிவன்கோயில் என வழங்கும் இந்தக் கோயிலில் தெற்குநோக்கி எழுந்தருளியிருக்கும் தேவியாம் தையல் நாயகியம்மைக்கு இன்று கொடியேற்றம் .

இந்தத் துர்முகி ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவம் இன்று மு.ப.10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இந்த மகோற்சவம் இன்று முதல் ஆடிப்பூர நன்னாள் வரை தொடர்ந்து 10 நாள்களுக்கு வெகு கோலாகலமாக இடம் பெறும் என்று ஆலய தர்மகர்த்தா தெரிவித்தார்.

இந்த அம்பிகையின் மகோற்சவத் திருநாள்களில் யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலுமிருந்தும் அடியார் பெருமக்கள் இந்தக் கோயிலில் வந்து குழுமுவர். ஒவ்வொருநாளும் ஒவ்வோர் அலங்காரத்துடன் தையல் நாயகி திருவீதி வலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். விதவிதமானஅழகிய ஆபரணங்களுடன் மலர்மாலைகளும் அணிந்து அலங்கார பூஜிதையாக வெவ்வேறு வாகனங்களில் வரும் அம்பிகையின் அருட்காட்சியின் அழகே தனி.

ஸ்ரீலஸ்ரீ.ஆறுமுகநாவலர் பிரசங்கம் செய்த திருக்கோயில். செட்டியார் பரம்பரையினரான க.வைத்திலிங்கச் செட்டியார் என்பவரால் பரிபாலிக்கப்பட்டு வருவதுடன், தினசரி ஆறுகாலப் பூசையும் செவ்வனே நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

அம்பிகைக்கு நடைபெறுகின்ற இந்த அருள்மிகு அற்புதத் திருவிழாக்கள் கோயிலின் இரண்டாம் வீதியில் அமைந்துள்ள அழகான வசந்த மண்டபப் பூசையுடன் ஆரம்பமாகி, உள்வீதி யாகசாலைப் பூசை நடைபெற்று திருவீதி உலா இடம்பெறும்போது பிரபல நாதஸ்வரக் கலைஞர்கள் மங்கள வாத்திய இசை வழங்குவர்.

ஆலயவெளி வீதியில் மண்டகப்படி பூரண கும்பங்களுடன் குத்து விளக்கேற்றி வைத்து அம்பாளை வரவேற்கும் பக்திபூர்வமான நிகழ்வு தினசரி இடம்பெறும் போது, அடியார்கள் மெய்மறந்து வணங்கி நிற்பது அற்புதக் கோலாகலக் காட்சியாகும்.

அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலரே உறம் நோக்கில் அடியார் பெருமக்கள் பக்திப் பரவசத்துடன் ஆனந்தக் கண்ணீர் மல்க தோத்திரங்களைப் பாராயணஞ்செய்தவண்ணம் சிந்தித்து, வந்தித்து சேவித்து நிற்கும் ஆனந்தமயமான காட்சிவேறு எங்குமே காணமுடியாது. மேலும், இந்தத் தேவி மகோற்சவத்தின் தேர்த்திருவிழா வெகுவிமரிசையாக நடைபெறும். அழகே ஒருவெடுத்தாற்போன்று தையல் நாயகியம்மை அலங்காரமாகத் தேரிலே ஆரோகணிக்க பெண் அடியார்கள் அம்பாளின் தேர்வடம் பிடித்து இழுத்துவரும் காட்சி கண்கொள்ளாக்காட்சியன்றோ.



வீதியின் இருமருங்கும் வாழைமரங்களும், கமுகு மரங்களும் செவ்விளநீர்க் குலைகளும் கட்டப்பெற்று மகர தோரணங்கள், மாவிலை, வேப்பிலை அசைந்தாட சித்திரத்தேர் மணிஓசை ஒலிக்க ஆடி அசைந்து இவர்ந்து வருகின்ற ஆனந்த கோலாகலக்காட்சியை இங்கே காணலாம்.

அம்பிகை தேரேறி வந்து அருள்சொரியும் தேவியாகக் காட்சிதர அடியார்கள் அர்ச்சனைத் தட்டும் கையுமாக ஒருவரையொருவர் இடித்துத் தள்ளிக்கொண்டு நான் முந்தி நீ முந்தி என்று தேர் அர்ச்சனை செய்வதும் பக்திமயமான ஒரு காட்சிதான்.

லோகமாதாவாக சகல ஜீவராசிகளுக்கும் தாயாக விளங்குகின்ற, ஆதிபராசக்தி அன்னையவள் துன்பங்களையும், துயரங்களையும் அநியாயங்களையும், அக்கிரமங்களையும் அழித்தொழிப்பதற்காக இன்று தேரிலே ஏறி நேரிலே காட்சி தரும் அழகைக் கண்டு தரிசிக்க அம்மன் அடியார்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். அன்னையைத்தொழுது திருவடி வணங்கி எல்லோரும் இன்புற்றிருக்க அவளருளையே நாடித்தேடி வாழ்த்திப் பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை படைத்த மாமேதையாயினும் தன்னடக்கத்தால் புகழ்ஈட்டிய

ஈழத்தமிழ்மணி

**இந்தியாவின் பதினோராவது ஜனாதிபதியாகப் பதவி வகித்த மாமேதை அப்துல் கலாமினது மறைவின் முதலாவது ஆண்டு நினைவு நாள் இன்றாகும்.**



## அப்துல் கலாம்

இளைஞர்களே கனவு காணுங்கள் என்ற உரிமைக் குரலுக்குச் சொந்தக்காரரும், இந்தியாவை உலக அரங்கில் உயர்த்தி வைத்தவரும், அதியுயர்ந்த விஞ்ஞானியும், கவிஞரும், இந்தியத் திருநாட்டின் ஜனாதிபதியாகப் பதவி வகித்து உலகத்தில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களுக்கெல்லாம் பெருமை சேர்த்த மாமேதையுமான ஆவுல் பக்கீர், ஜெயனுல்லாப்தீன் அப்துல் கலாம் மறைந்து (27.07.2016) இன்றுடன் ஓராண்டு ஆகிறது.

இந்தியாவின் அரசியலில் பிரவேசித்து அதில் உயர் நிலைகளில் இருந்தவர்களே முன்னெரெல்லாம் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனால் அப்துல்கலாம் அரசியலில் ஈடுபடாது அணு விஞ்ஞானியாக உயர்ந்தும், தனது உயர்ந்த குறிக் கோள், இலட்சியங்கள் என்பவற்றால் மகத்தான மனிதராக மதிக்கப்பட்டு இந்திய நாட்டின் பதினோராவது குடியரசுத் தலைவராகத் தெரிவான முதல் தமிழ் மகன் என்ற வரலாற்றுப் பெருமையைப் பெற்றிருந்தார்.

அப்துல்கலாம் தமிழ் நாட்டின் பிற்பட்ட வறண்ட பூமியான இராமேஸ்வரத்தில் ஓர் ஏழை இஸ்லாமிய குடும்பத்தில், ஆயிசா அம்மா– ஜெயனுல்லாப்தீன் தம்பதியினருக்கு மகனாக 1931 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி பிறந்தார். இராமேஸ்வரத்தில் ஒரு சாதாரணமான பள்ளியில் ஆரம்பக் கல்வியைத் தொடங்கியவர் திருச்சி சென்.ஜோசப் கல்லூரியிலும், பின்னர் சென்னை தொழில்நுட்பக் கல்லூரியிலும் தமது கற்றலைத் (1955–1960) தொடர்ந்தார். இவர், கற்றலும் கற்பித்தலுமே தனது உயிர் மூச்செனக் கருதியவர். தான் கற்றவை எல்லாவற்றையும் இளைய தலைமுறையினருக்கு மத்தியில் எடுத்தக்கூறி அவர்களுக்குத் தெளிவூட்டினார்.

தனது ஆரம்பக் கல்வியை இராமநாதபுரம் ஸ்வார்ட்ஸ் மெட்ரிகியுலேசன் பாடசாலையில் கற்றார்.தான் கல்வி கற்ற பாடசாலைகளில் சராசரியான பெறுபேறுகளையே அப்துல் கலாம் பெற்று வந்தாலும், படிப்பில் ஆர்வமுள்ள மாணவனாக, முக்கியமாக கணித பாடத்துக்கு அதிகளவு நேரத்தை செலவிடுபவராக இருந்துள்ளார். பாடசாலைக் கல்வியை முடித்திருந்த காலத்தில் தனது குடும்ப வறுமை நிலை காரணமாக பத்திரிகை விநியோகிக்கின்ற பணியில் ஈடுபட்டிருந்தார்.உயர் நிலைக்கல்வியை முடித்த பின்னர், திருச்சியில் ஒரு கல்லூரியில் இயற்பியல் துறையில் பயின்றார். எம்.ஐ.டி. பொறியியல் கல்லூரியில் ஒரோநாடிக்கல் பொறியியல் துறையில் இடம் கிடைத்தது. அதற்கான பணத்தை செலுத்த முடியாத நிலையில் இவரது சகோதரியே நகைகளைக் கொடுத்துதவி, அந்தக் கல்வியைக் கற்பதற்கு இவரை அனுப்பி வைத்தார்.

கல்வியிலே மிகவும் ஆர்வம் கொண்டு நன்றாகக் கற்று வான்வெளிப் பொறியியல் சிறப்புப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். போர் விமானியாகும் கனவு நிராசையாகியிருந்தாலும், சோர்வடையாது பாதுகாப்புப் பிரிவின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறையில் வான்வெளி சம்பந்தமான ஆராய்ச்சிப் பிரிவில் தன்னை ஒரு விஞ்ஞானியாக இணைத்துக் கொண்டார்.

பின்னர் இந்திய விமானப்படையின் தகுதிகாண் பரீட்சையில் ஒன்பதாவது இடத்தைப் பெற்றுக்கொண்டதால், தனது கனவான விமானியாகும் இலட்சியத்தை மயிரிழையில் தவற விட்டிருந்தார். இதில் வெற்றிடமாக இருந்த 8 இடங்களுக்கே அதற்குரியவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்கள்.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் வானூர்தி மேம்பாட்டுப்பிரிவில் விஞ்ஞானியாக இணைந்தவர் ஹோவர்கிராஃட் விமானத்தை வடிவமைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

1963 ஆம் ஆண்டு விக்ரம் சாராபாய் விண்வெளி ஆய்வுத்திட்டத்துக்கு மாற்றப்பட்டவர், 1980 வரை அங்கேயே பணியாற்றினார். இந்தக் காலப் பகுதியிலேயே இந்தியா உலக விஞ்ஞானத்தில் பெரிய மைல்கல்லை அடைந்திருந்தது.

இந்தக் காலப்பகுதியில் எஸ்.எல்.வி. ரொக்கெட் வடிவமைப்புத் திட்டத்தைப் பொறுப்பேற்ற கலாம், அதனை வெற்றிகரமாகப் முழுமை செய்து, 1980 ஆம் ஆண்டு ரோகிணி செயற்கைக் கோளை முதலாவது இந்திய உள்நாட்டு தயாரிப்பான எஸ்.எல்.வி. ரொக்கெட் மூலம் ஏவி வெற்றிகரமாக புவிச்சுற்றில் நிலை நிறுத்திச் சாதனை படைத்தார். 1980 ஆம் ஆண்டிலே கலாமுக்கு இந்தியாவின் ஏவுகணை மனிதன் என்ற பெயர் கிட்டியது.கலாமின்திறனை அறிந்த அப்போதைய பிரதமரான இந்திராகாந்தி, ஒருங்கிணைந்து வழி நடத்தப்படும் ஏவுகணைத்திட்டத்துக்கு அமைச்சரவையின் எதிர்ப்பையும் மீறி இரகசிய நிதி வழங்கி கலாமை இயக்குநராகவும் நியமித்திருந்தார்.

1980 ஆம் ஆண்டு உலகே வியக்கும் வண்ணம் வெற்றிகரமாக ரோகிணி என்ற துணைக்கோளை வெற்றிகரமாக புவிச்சுற்றில் நிலைநிறுத்திச் சாதனைபடைத்தபின்னர்அப்துல் கலாம் இவ்வாறு குறிப்பிடுகின்றார். "பல கோடி ரூபா செலவில் இந்தியா முதன் முறையாக ஒரு துணைக்கோளை விண்ணுக்கு ஏவும் அந்தத் தருணத்துக்காக அனைவரும் ஆவலோடு காத்திருக்கின்றனர். இதயம் துடிப்பது எமது செவிகளுக்குக் கேட்கிறது. செயற்கைக் கோள் விண்ணிலே பாய்கின்றது.அந்தோ! ஒருசில நிமிடங்களில் வெடித்துச் சிதறுகின்றது. அதிர்ந்து போகின்றேன். தொழில்நுட்பக் கோளாறு, பத்திரிகையாளர் மாநாடு கூட்டப்படுகின்றது. கேள்விக்கணைகள் சரமாரியாக என் மீது தொடுக்கப்படுகின்றன. அவமானத்தையும், தோல்வியையும் சுமந்து குறுகி நிற்கின்றேன் அப்போது ஒலிவாங்கியை எனது தலைவர் தன்னை நோக்கி நகர்த்துகிறார். தவறுகளுக்குப் பொறுப்பேற்கிறார்.

மீண்டும் மீண்டும் கடும் முயற்சி. நித்திரையற்ற பல இரவுகள். தவறுகள் அனைத்தும் திருத்தப்படுகின்றன. ரோகினி வெற்றிகரமாக விண்ணுக்கு ஏவப்படுகின்றது. வானைப்பிளக்கும் கரகோசம். மீண்டும் பத்திரிகையாளர்கள் மாநாடு கூட்டப்படுகிறது. ஆனால், இந்த முறை என்னையே பேசும்படி தலைவர் கூறுகிறார். எனது கண்கள் பனிக்கின்றன. அண்டங்கள் அனைத்தையும் கடந்து அவர் எனது கண்களில், மனதில் உயர்ந்து தெரிகிறார்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

★ உங்களுக்கென ஒரு சொந்தக் கனவு உள்ளதா? மற்றவர்களுக்காகவன்றி உங்களுக்கான கனவு நல்ல உறக்கத்தில் காண்பதல்ல. நான் கூறும் கனவு உறங்கவிடாது செய்வது என்று கூறியவர் அப்துல் கலாம்.

★ ஒவ்வொரு இந்தியனும் கனவுகாணவேண்டும். ஒவ்வொரு இந்தியனும் காணும் கனவுதான் இந்தியாவைச் சுபீட்சமடையவைக்கும். ஊழலற்ற இந்தியாவை உருவாக்கும். கனவு காணுங்கள். அதனை நனவாக்குவதற்கான வழிமுறைகளைப் பின்பற்றுங்கள் என்ற அப்துல் கலாமின் பிரபல்யமான கூற்றை இன்றைய இளைஞர்கள் நினைவில் கொள்ளல் வேண்டும்.

ரோகிணியைத் தொடர்ந்து திரிசூல், ப்ரித்வி, ஆகாஸ் என இந்தியாவின் விஞ்ஞான வலிமையை உலகுக்கு உரக்கச் சொல்லும் ஏவுகணைகளை உருவாக்கி இந்தியாவின் ஏவுகணைத் தொழில்நுட்பத் தந்தை என அழைக்கப்பட்டார்.

இரண்டாம் பரிசோதனையில் வெற்றியடைந்தபோது, இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி மட்டுமல்ல, பிரான்ஸ் ரஷ்யா, ஜப்பான், சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்களும் கலாமுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தன.

1992 ஆம் ஆண்டு தொடக்கம் 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை பிரதமரின்தலைமைவிஞ்ஞானவியல் ஆலோசகராகவும் கடமையாற்றிய அப்துல் கலாம், இந்தக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்தியாவின் இரண்டாவது அணுவாயுத பரிசோதனைத் திட்டமான 'புன்னகைக்கும் புத்தர் இரண்டின்' பிரதான ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட்டார்.

அப்துல் கலாம் தமது சாதனைகளுக்காக 1981 மற்றும் 1990 ஆகிய காலப் பகுதிகளில் பத்மபூசன் விருதும், 1997 ஆம் ஆண்டு பாரத ரத்னா விருதும்வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 1997ஆம் ஆண்டில் இந்திராகாந்தி தேசிய விருதையும் பெற்றுக்கொண்டார்.

இளைய தலைமுறையினர் கல்வி கற்ற கலாசாலைகளுக்கு எல்லாம் சென்று பகுதிநேர பேராசிரியராகவும், தொழில் முறைசாராப் பேராசிரியராகவும், கற்பித்தலை ஒரு தவமாக மேற்கொண்டார். இந்திய நிர்வாக சர்வ கலாசாலை செய்லாங், இந்திய நிர்வாக சர்வ கலாசாலை அகமாபாத் மற்றும் இத்தூர் இந்திய விஞ்ஞான சர்வகலாசாலை பெங்களூர் ஆகிய இடங்களுக்கெல்லாம் சென்று மாணவர் உள்ளங்களில் அறிவுக்கு முதலிடம் கொடுக்க வைத்தார்.

திருவனந்தபுரம் விண்வெளி விஞ்ஞான சர்வ கலாசாலையில் விண்வெளி விஞ்ஞான கற்கை நெறிக்கான பேராசிரியராகவும், தமிழ்நாடு அண்ணா சர்வகலாசாலையிலும், ஜே.எஸ்.எஸ். சர்வகலாசாலை மைசூரிலும் தனது சேவையை வழங்கியிருந்தார். 1998 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதி பொக்ராணில் இந்தியா, அணு குண்டுச் சோதனை நடத்தி, சர்வதேச அரங்கில் தன்னை வல்லரசாக அறிவித்தது. இதற்கு அடித்தளம் அமைத்தவர் அப்துல் கலாம் ஆவார். நான் என்ற அகந்தை, கர்வம் சிறிதளவேனும் அவரிடம் இருந்ததில்லை. சிறிய வயது தொடக்கம் தனது வாழ்நாளின் இறுதிக்காலம்வரை அமைதியாகவும் ஆடம்பரமின்றியும் வாழ்ந்தவர்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தன்னை முன்னிலைப்படுத்தி பிரபல்யப்படுத்திக்கொள்ள விரும்பாத அவர் தற்பெருமை கொள்வதை ஒரு போதும் விரும்பியதில்லை. ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் ஒரு நாள் டெல்லி ஜும்மா மசூதிக்கு தொழச் சென்ற அவர், இட நெருக்கடி காரணமாக கடைசி வரிசையில் கூட்டத்தோடு கூட்டமாக நின்று இறைவனைத் தொழுது சென்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கனகசுந்தரம் என்ற சன்னியாசியிடம் அப்துல் கலாம் ஆங்கிலம் கற்றுக்கொண்டார். ராமேஸ்வரம் மாவட்டக்கல்விக் கழக பள்ளி அறிவியல் ஆசிரியர் சிதம்பர சுப்பிரமணியத்திடமிருந்து தான் அறிவியல் ஆர்வத்தை அப்துல் கலாம் பெற்றுக்கொண்டார்.

அப்துல் கலாம் நீண்ட நாள்களாக காலை உணவாக ஒரே ஒரு அப்பம் மட்டுமே உண்ணுவார். ஒரு கோப்பை பால் அருந்துவார். வேறு எதையும் சாப்பிட மாட்டார். அப்துல் கலாமிடம் ஒரு பழைமையான வீணை உண்டு. எப்போதாவது நேரம் கிடைத்தால் அந்த வீணையை மீட்டி மகிழ்வார்.



சிறுவயதில் கிணற்றுக்குள் ஒரு கல்லைத் தூக்கிப் போட்டார். அதிலிருந்து குமிழ் குமிழாக வந்தபோது, அது ஏன் வருகிறது என்று அப்துல் கலாம் கேட்டார். இது அறிவியல்பூர்வமாக அவர் கேட்டுக் கொண்ட முதல் கேள்வியாகும்.

இராமேஸ்வரத்தில் உள்ள இலட்சுமண தீர்த்தத்தில் தைமாதம் விழா நடத்தும்போது, அப்துல் கலாம் குடும்பத்தினருக்கு சந்தனப்பாடி என்று ஒரு மரியாதை கொடுப்பது வழக்கம். அந்த அளவுக்கு அப்துல் கலாம் குடும்பத்தினருக்கும் இந்துக்களுக்கும் நெருக்கமான உறவு இருந்தது.

தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் அப்துல் கலாம் கற்றிருந்தார். குறிப்பாக திருக்குறளைக் கரைத்துக் குடித்திருந்தார் என்றே கூறலாம். இவர் எழுதிய 'எனது பயணம்' என்ற கவிதை நூல், ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பது இவரது பழக்கமாகும். ஒரு நாளைக்கு 18 மணி நேரம்கூட உழைக்கத் தயங்கமாட்டார்.

அப்துல் கலாம் ஒருபோதும் நன்றி மறக்காதவர். தனது ஆசிரியர்கள், நண்பர்கள், உதவி செய்பவர்கள் என அனைவரையும் அடிக்கடி நினைவு படுத்திப் பேசுவார். அப்துல் கலாமிடம் நகைச்சுவை உணர்வு அதிகம் இருந்தது.

பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான பி.ஜே.பி. அரசு ஆட்சியில் இருந்த போது அப்துல் கலாமை இந்திய நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்த போது அத்தனை எதிர்க்கட்சிகளும் தங்கள் குரோதங்களை மறந்து அந்தத் தெரிவுக்கு ஆதரவை வழங்கின.

விஞ்ஞானியாக நாட்டுக்குப் பணியாற்றிவிட்டு, 2002 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியால் முன்மொழியப்பட்டு பாரதிய ஜனதாக்கட்சி ஆதரவுடன் இந்தியாவின் குடியரசுத்தலைவர் தேர்தலில் போட்டியிட்டு வென்று நாட்டின் பதினோராவது குடியரசுத் தலைவரானார்.

இவர் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஜூலை 26வரை இந்திய நாட்டின் குடியரசுத் தலைவராகப் பணியாற்றினார். திருமணம் செய்து கொள்ளாத அப்துல் கலாம், ஜனாதிபதிமாளிகையில்குடியேறிய முதல் விஞ்ஞானி என்ற பெருமையையும் அடைந்தார். சாதாரண ஒரு பொது மகனுக்குக் கூட சிறந்ததொரு ஊக்குவிப்பாளராக, வழிகாட்டியாக அப்துல் கலாம் அறிமுகமாயிருக்கின்றார். அந்த அறிமுகம் அவரது 'அக்கினிச் சிறகுகள்' சுயசரிதை புத்தகம் மூலம் தான் பெரும்பாலும் நிகழ்ந்தது.

நாடெங்கும் பட்டி தொட்டிகளில் படிக்கும் மாணவ மாணவிகளிடம்கூட நாட்டின் மீது தேசப்பற்று ஏற்படச் செய்தவர். மாணவர்களே கனவு காணுங்கள் என்று கூறி மாணவர்கள் மத்தியில் புரட்சியை ஏற்படுத்தியவர். இந்திய அரசியல்வாதிகளிடம் இவர் அடிக்கடி உதிர்த்த வார்த்தை, தொழில்நுட்பத்தில் கவனம் செலுத்துங்கள் என்பது தான். உலகத் தலைவர்களில் அப்துல்கலாம் அளவுக்கு இளைய சமுதாயம் எழுப்பிய கேள்விக்கு இதுவரை எவருமே உன்னதமான பதில்களை அளித்ததில்லை. அப்துல் கலாம் மிகப்பெரிய நட்பு வட்டாரத்தைக் கொண்டவர். ஆனால் தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி அவர் எவர் ஒருவருக்கும் பரிந்துரை செய்ததேயில்லை. உங்களுக்கென ஒரு சொந்தக் கனவு உள்ளதா? மற்றவர்களுக்காகவன்றி உங்களுக்கான கனவு நல்ல உறக்கத்தில் காண்பதல்ல. நான் கூறும் கனவு உறங்கவிடாது செய்வது என்று கூறியவர் அப்துல் கலாம். ஒவ்வொரு இந்தியனும் கனவு காணவேண்டும். ஒவ்வொரு இந்தியனும் காணும் கனவுதான் இந்தியாவைச் சுபீட்சமடையவைக்கும். ஊழலற்ற இந்தியாவை உருவாக்கும். கனவு காணுங்கள். அதனை நனவாக்குவதற்கான வழிமுறைகளை பின்பற்றுங்கள் என்ற அப்துல் கலாமின் பிரபல்யமான கூற்றை இன்றைய இளைஞர்கள் நினைவில் கொள்ளல்வேண்டும். இவ்விதம் உலக அரங்கிலே இந்தியாவை உயர்த்தி வைத்தவரான அப்துல் கலாம் மறைந்து இன்றுடன் ஓராண்டாகிவிட்டது.

டாக்டர் அப்துல் கலாம் 2014ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் வந்திருந்தார். பத்திரிகையாளர்களையும் சந்தித்து அளவளாவினார். யாழ். இந்துக்கல்லூரி மாணவர்களையும், மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்களையும் சந்தித்து உரையாடியிருந்தார்.

தாய் மொழியான தமிழ் மொழியில் கல்வி பயின்று உச்சத்தையடைந்த தமிழ் மகனான அப்துல் கலாம், இளைஞர்களுக்கும், மாணவர் சமுதாயத்தினருக்கும், சொந்தக்காரராக இருந்தாலும், அதே சமுதாயத்தினர் முன் அவரது இறப்பும் நிகழ்ந்திருந்தது. இன்றும் அவரது புகழ், சாதனையாகவும் உலகத்தின் உச்சத்தில் நிறைந்தேயுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்லியல்துறைக்கு அரும்பணியாற்றிய பல்துறை வித்தகர் கலைஞானி

## அவரது பிறந்த தினம் ஜூலை 23

எம்.சாந்தன் சத்தியகீர்த்தி எம்.ஏ

குரும்பசிட்டி மண் தந்த தவப்புதல்வர்களில் கலைஞானியும் ஒருவராவார். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அவர் ஆற்றிய அரிய பணி, தமிழர்களின் வரலாற்றுக் கலைப்பொக்கிசங்களைக் காத்து நின்றது. அதற்காக மாமனிதர் என்று மகுடம் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டவர். அன்னாரது சேவையைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும். இந்தப் பணியின் அவசியத்தையும் உயர்வையும் உணர்ந்து, தன்னை அர்ப்பணித்து பிரமச்சாரியாகவே வாழத் தலைப்பட்டவர் இவர். செல்வந்தக் குடும்பத்தின் வாரிசான கலைஞானி அவர்கள் தனது அனைத்துச் சொத்துக்களையுமே இந்தப் பணிக்காகச் செலவு செய்தார்.

கலைஞானி ஈழத்தில் நினைவு கூரப்படவேண்டிய முதன்மையான மனிதர்களில் ஒருவர். தமது வாழ்வைப் பொதுச்சேவைக்கு அர்ப்பணித்து வாழ்வோர் மிக அரிதான இந்தக் காலத்தில், இந்த மண்ணை நேசித்து, மண்ணுக்காகவே வாழ்வை அர்ப்பணித்த கலைஞானி என்றும் நினைவுகூரப்பட வேண்டியவர். சிறிது சிறிதாய்ச் சேர்த்த எமது மண்ணின் வரலாற்றுச் சுவடுகளைப் பெரும் பிரயத்தனத்துடன் பாதுகாத்து வந்தவர். புகைப்படத் துறையில் தனக்கென ஒரு கலைநெறி வகுத்து அற்புதமான கலை ஓவியங்களைப் படைத்தவர். இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களது வரலாற்றுச் சாசனங்களையும், தொல்லியல் சான்றுகளையும் சேகரித்துப் பாதுகாத்த பெரும் பணியை செல்வரத்தினம் எனும் இயற் பெயர் கொண்ட கலை ஞானி நீண்ட நெடுங்காலமாக போர் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தும் ஆற்றி வந்தார்.

தான் தேடிய, தேடுதற்கரிய ஆவணங்களைப் பல இடங்களிலும் காட்சிக்காக வைத்து தொல்பொருள் ஆய்வில் இளைய தலைமுறையை ஈடுபடுத்துவதற்கு அவர் அவ்வப் போது செவ்வனே எடுத்த முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியவையாகும்.

கலைஞானி பன்முகப்பார்வை கொண்ட கலைஞர். சமூகத்தின் மீதும், கலாசாரம், பண்பாட்டின் மீதும் அக்கறை கொண்ட மனிதர். ஓவியம், புகைப்படம், நாடகம் தொல்லியல் துறைகளில் மட்டு மன்றி, பத்திரிகைத் துறையிலும் அவர் கால் பதித்திருந்தார். தானே ஆசிரியராக இருந்து கலைஞானி என்ற பெயரில் பத்திரிகை ஒன்றையும் வெளியிட்டு வந்தார். 'கலைஞானியும் கலைத்தொண்டும்' என்ற நூலுக்கு வழங்கிய அணிந்துரையில் கலைஞானியின் பத்திரிகைப் பணியை கலாநிதி ஆறு. திருமுருகன் பின்வருமாறு விவரிக்கிறார்.

"வரலாறுகள் திரிபடைகின்ற போதெல்லாம் வாதாடுகின்ற ஒருவராக கலை ஞானி விளங்கி இருக்கின்றார். வரலாற்றுத்துறைப் பேராசிரியர்கள் முதல் வரலாற்று ஆய்வாளர்கள் வரை தவறாகக் கருத்துக்கள் வெளியிட்ட காலங்களில், துணிந்து மறு கருத்துக்கள் வெளியிட்டவர் கலைஞானி. எனக்கு இன்று ஞாபகமாக இருக்கின்றது, யான் யாழ்.இந்துக் கல்லூரி மாணவனாக இருந்த காலத்தில், யாழ்ப்பாண அன்ன சத்திரம் பற்றி. ஈழநாடு பத்திரிகையில் கலைஞானி மக்கள் கருத்து என்ற பகுதியினூடாக வெளிப்படுத்திய தகவல்கள் பலரையும் திகைக்க வைத்தன. அந்தக் காலத்தில் அவரது அறை கூவலே அன்ன சத்திரத்தின் வரலாற்றை எம் போன்ற இளைய தலைமுறை அறியவைத்தது." எனலாம்.

> கலைஞானி ஈழத்தில் நினைவு கூரப்பட வேண்டிய முதன்மையான மனிதர்களில் ஒருவர். தமது வாழ்வைப் பொதுச் சேவைக்கு அர்ப்பணித்து வாழ்வோர் மிக அரிதான இந் தக் காலத்தில், இந்த மண்ணை நேசித்து, மண்ணுக்காகவே வாழ்வை அர்ப்பணித்த கலை ஞானி என்றும் நினைவு கூரப்பட வேண்டியவர்.

1933ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி பிறந்த கலைஞானி, தனது ஆரம்பக் கல்வியைகுரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயத்திலும், இடைநிலைக்கல்வியை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் பயின்றார். பள்ளிப் பருவத்திலிருந்து இவர் தேடிச் சேமித்து வந்த சேகரிப்புக்கள், கண்காட்சி மண்டபமொன்றை அமைப்பதற்குத் தேவையான விடயதானங்கள் அனைத்தையும் கொண்டிருந்தன. இவரின் சேகரிப்புகளில் பழைய பத்திரிகைகள், அரியபுகைப்படங்கள், சிலைகள், நாணயங்கள், ஓடுகள், செங்கற்கள் என்பவை அடங்கியிருந்தன.

கலைஞானி எளிமையான தோற்றமுடையவர். காற்றிலாடும் வெள்ளைத் தலைமுடி, நாலு முழ வேட்டி, வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்ட சட்டையணியாத மேனி இவைதான் அவரது வெளிப்புறத் தோற்றம். சாது போன்ற தோற்றம், ஆனால் என்றும் சளைக்காத மன உறுதியோடு வலம் வந்தவர் கலைஞானி என்ற மாபெரும் கலைஞன். கலைஞானி பற்றி அறிந்திராத யாழ்ப்பாண அறிஞர்கள்இல்லை என்னும் அளவுக்குத் தனது தொண்டின் மூலம் சரித்திரம் படைத்துச் சென்றுவிட்டார் அவர்.



கலைஞானி மீது பெரும்பற்றுக் கொண்டிருந்த, சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும், ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவருமான கலாநிதி ஆறு. திருமுருகன் அருள்ஒளி 2013 ஆனி மாத மலரில் 'ஆதி' என்ற புனைபெயரில் கலைஞானி குறித்து வடித்திருந்த கவிதை கீழே தரப்பட்டுள்ளது.

*அரும்பொருளை ஆயுள்வரை காத்தாய்*
*ஆன்மிகப் பெரியோரை மதித்தாய்*
*கலையின்பமே நிலையின்பமாய்*
*கால மெல்லாம் கருதி வாழ்ந்தாய்*
*நீவரைந்த ஓவியங்கள்*
*நிலைபெற்று வாழ்கின்றன*
*மண்ணின் வரலாறு மாசுபடக் கூடாதென*
*மண்ணில் மடியும்வரை உரைத்தாய்*
*காலங்கள் மாறினாலும்*
*கலைஞானி உன் கருத்து வாழும்*
*தனி மனிதனாய் வாழ்ந்து*
*தவஞானக் கலை வளர்த்து உனக்கு*
*ஆயிரம் நன்றிகள்*
*அன்றாடம் சொல்வோம்.*

கட்டுரையாளர் – முன்னாள் இயக்குநர்
கலைஞர் அருங்காட்சியகம்.

---

# "புலித்தலையை நாய் மோத்தல் இல்"

## வில்லோடு உடுக்கடித்துக் கதை விளம்பிய யாழ்ப்பாணக் கல்லூரியின் துடிப்பான மாணவர்கள்

ஜெ.கி.ஜெயசீலன்

தமிழர் தம் கலைகளோ, உயர் தனித்துவமானவை. அத்தகையவற்றுள்ளே ஒன்றுதான், 'வில்லுப்பாட்டிசைக்கலை!' இதன் பரிமாணமும், பரிணாமமும் காலம் பல கடந்து இன்றுவரை சுவைநயம் சிறிதும் குறையாமல் நிலைபெற்றுள்ளன. இந்தியத் தமிழகத்திலும் சரி, ஈழத்தமிழ் மண்ணிலும் சரி, வில்லிசைத்து, உடுக்கடித்து கதை சொல்லுங்கலை, உணர்வுபூர்வ உயிர்த் துடிப்போடு வாழ்கின்றது.

அதன் வெளிப்பாடுகளில் ஒன்றே, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மாணவர்கள் நிகழ்த்தி வென்ற "புலித் தலையை நாய் மோத்தல் இல் ! " எனும் மகுடத்திலான வில்லுப்பாட்டிசை நிகழ்வாகும். இலங்கை முழுவதற்குமான தமிழ் மொழிமூல வில்லுப் பாட்டிசைப் போட்டியிலே முதலாவது இடத்தைத் தம் வசப்படுத்திய யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள், இதற்கு முன்னரும் கூட, குறித்த போட்டியில், மூன்று, நான்கு முறை அகில இலங்கை ரீதியிலே முதலாவது இடத்தைப் பெற்றமை, ஈண்டு குறிப்பிடத் தக்கதாகும்.

ஈழத்திலே மிகப் புகழ் பெற்ற வில்லிசை மகாகலைஞானி சின்னமணி எனும் நா. கணபதிப்பிள்ளை அண்மையிலே தான் சாவெய்தினார். அந்த மகா கலைஞனின் வில்லிசைக்கலை ஆற்றுகையை 1960துகள், 1970துகள், 1980துகளில் கண்டு கேட்டுச் சுவைத்த இன்புறாதவர் துர் அதிஷ்டசாலிகளே ஆவர்.

அப்பேற்பட்ட வில்லிசைக் கலை நாயகனே அமரர் சின்னமணியாவார். அவருக்கு முற்பட்ட காலத்திலும், அவரின் சமகாலத்திலும், அவருக்குப் பிற்பட்ட காலத்திலும் வில்லிசைக் கலைஞர்கள் பலர் இருந்த போதிலும், சின்னமணியின் உயர் தனிக் கலைப்பக்குவத்தை வேறெவரிடத்தும் காணமுடியவில்லை. இது, பேருண்மை! வெறும் புகழுரை அல்ல.

அத்தகையதொரு மாபெரும் கலையை பலரும் போற்ற நிகழ்த்தி அனைத்திலங்கை அளவிலே முதல் இடத்தைப் பிடித்த யாழ்ப்பாணக்கல்லூரி மாணவ வில்லிசைக்குழுவினரையும், அவர்களைத் தக்க வண்ணமாக நெறிப்படுத்திய வில்லிசைப் பிரதி ஆக்குநர் துரை. கணேசமூர்த்தி (ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி) அவர்களையும், அவரோடு துணைநின்று பேருதவி செய்த குறுந்திரைப்பட இயக்குநன் கலைஞன் ஜோசித்தன்என்கிறமேரிஜோசப் அவர்களையும், மனதார வாழ்த்திப் போற்றுவது உண்மையான கலைச் சுவைஞர்களின் உயிர்க்கடனாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “உயிர்ப்பைத் தேடி” அரங்க ஆற்றுகை

கைதடியூர் நி.ஹரன்

**நடிகர்களில் பெரும்பாலானோர் திறந்த வெளியில் தமது சொந்தக் குரலிலேயே பேசி நடித்தனர். உண்மையில் இது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். எனினும் சிலவேளைகளில் நடிகர்களின் குரல் வெளிப்பாடு போதாமல் இருந்ததனால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் பார்வையாளரால் விளங்கிக் கொள்ள முடியாதிருந்தது.**

ஒரு சமூகம் தனக்கே உரித்தான சுய கௌரவம், தன்மானம், பண்பாட்டு விழுமியங்களுடன் தலைமைத்துவம் ஒன்றின் கீழ் மகிழ்வாக வாழ்ந்து வருகின்றது. அந்தச் சமூகத்தின் மகிழ்வை விரும்பாத மற்றொரு சமூகம் திட்டமிட்டுப் படிப்படியாக அந்தச் சமூகத்தின் இருப்பின் அடையாளங்களை அழிக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றது. இந்த நிலையில் சந்தர்ப்ப சூழ்நிலை விபரீதமாக எதுவும் செய்ய முடியாத நிலையில் தலைமையை அந்தச் சமூகம் வேறு இடம் நோக்கி வழியனுப்பி விடுகின்றது. அதன் பின்னர் அந்தச் சமூகத்தை மற்றைய சமூகம் அடித்து கொடுமைப்படுத்தி தம்வசப்படுத்திக் கொள்கிறது. முழுமையாக அவர்களது நிலங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து தமது சொல்லுக்கு அடிபணிந்து செல்லும் பரிபாலகர் மூவரை தெரிந்து அவர்கள் மூலம் நொந்து போயிருக்கின்ற சமூகத்தை மேலும் சீரழிக்க விழைகின்றனர். குறிப்பாக கட்டுக்கோப்பாக சுய பண்பாட்டோடு இருந்த சமூகத்தை போதைப் பொருள் பாவனை நிறைந்த சமூகமாக மாற்றி, அதில் வெற்றியும் கண்டனர். இந்த சமூகத்தின் கவலைக்கிடமான போக்கைக் கண்டு மிகவும் மனம் வருந்திய தமிழ்ப் பற்றுள்ள பெரியவர், சென்ற தலைமையை மீண்டும் வருமாறு கதறி அழுகின்றார். இறுதியில் தலைமை வந்து அந்தச் சமூகத்தை மீண்டும் பழைய மகிழ்வான நிலைக்கு கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டு, மக்கள் மனங்களில் நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

இது அண்மையில் இடம்பெற்ற ஓர் அரங்க ஆற்றுகையின் சுருக்கமான கதையம்சம். “உயிர்ப்பைத் தேடி” என்ற இந்த அரங்காற்றுகை கடந்த செவ்வாய்க் கிழமை (19.07.2016) மாலை 6.30 மணியளவில் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் அமைந்துள்ள பண்பாட்டு மலர்ச்சிக் கூட வளாகத்தில் ஆற்றுகை செய்யப்பட்டது. யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் துறை விரிவுரையாளர் கலாநிதி க.சிதம்பரநாதனால் நெறியாள்கை செய்யப்பட்டிருந்தது.

வெளியைப் பயன்படுத்தி இந்த நாடகம் ஆற்றப்பட்ட முறைமை உண்மையில் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். பழைமை வாய்ந்த வீட்டு வளவு அரங்க வெளியாக மாறியது. படச்சட்ட மேடையிலிருந்து வித்தியாசமாக அமைந்தது. திறந்த வெளி அரங்கில் நாலா பக்கமும் ஆற்றுகை செய்யப்பட்டது. படச் சட்ட மேடையின் பார்வையாளர் போல் கதிரையில் அமர்ந்த வெறும் மௌனிகளாக நாடகம் பார்க்கும் நிலை மாறி, பார்வையாளர் நாலா பக்கமும் சென்று நின்று ஆற்றுகையைப் பார்த்தனர். இடையிடையே ஆற்றுகையோடு பங்கேற்கும் நிலையும் காணப்பட்டது. பிரதன நடிப்பிடத்துக்கு நேர் எதிரே சுமார் 50 மீற்றர் தொலைவில் உள்ள வெளி இசையமைப்பாளர்களின் இடமாக மாறியது. மா மரத்தின் கீழ் உள்ள வெளி, தென்னை மரத்தின் கீழ் உள்ள வெளி, புல்வெளி, வீட்டுக் கூரையின் மேலுள்ள வெளி, புளிய மரத்தின் மேலுள்ள வெளி என்பன ஆற்றுகைக்குரிய இடங்களாகின. சாதாரணமாக இருக்கின்ற வெளிகளை எப்படி ஆற்றுகைக்குரிய இடமாக மாற்றுவது என்பது இந்த அற்றுகையின் மூலம் பார்க்கக் கூடியதாக இருந்தது.

இந்த ஆற்றுகையில் நடிப்பு சற்று வித்தியாசமான பாணியில் அமைந்திருந்தது. நடிகர்கள் மிகவும் உற்சாகமான முறைமையில் நடிப்பை வெளிப்படுத்தினர். அவர்கள் ஆடுகிறார்கள், பாடுகிறார்கள், உரையாடுகிறார்கள், ஓடுகிறார்கள், கூக்குரலிடுகிறார்கள், அழுகிறார்கள், சிரிக்கிறார்கள், பாய்கிறார்கள், மரத்தில் ஏறு கிறார்கள், வீட்டுக் கூரையில் ஏறுகிறார்கள், நிலத்தில் உருண்டு புரள்கிறார்கள், கிபிறிஸ் மொழியில் பேசுகிறார்கள், கைகளைத் தட்டுகிறார்கள், சண்டை செய்கிறார்கள், உடலைப் பயன்படுத்தி பல்வேறு படிமங்களை உருவாக்குகிறார்கள். இவை எல்லாம் இணைந்த சற்று மாறுபட்ட உயிர்த்துடிப்புள்ள நடிப்பை நடிகர்கள் தந்தார்கள். நடிகர்களில் பெரும்பாலானோர் திறந்த வெளியில் தமது சொந்தக் குரலிலேயே பேசி நடித்தனர். உண்மையில் இது பாராட்டப்படவேண்டிய விடயமாகும். எனினும் சிலவேளைகளில் நடிகர்களின் குரல் வெளிப்பாடு போதாமல் இருந்ததனால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் பார்வையாளரால் விளங்கிக் கொள்ள முடியாதிருந்தது. குறிப்பாக குரல் பயிற்சியில் இன்னும் கூடிய கவனம் எடுக்க வேண்டும். அப்போதுதான் இந்த அற்றுகை சிறப்புற அமையும்.

இசையமைப்பு ஆற்றுகைக்கு உயிர்ப்பைக் கொடுத்தது. ஈழத்தின் புகழ்பூத்த இசையமைப்பாளர் இசைவாணர் கண்ணன் இசையமைத்தார். நீண்ட இடைவெளியின் பின்னர் அவர் நாடகத்துக்கு இசையமைத்திருந்தார். ஓகன், பறை, உடுக்கு, தப்பு, தவில், தாளம், ஆர்மோனியம், ரம்ஸ், றபாண், வயலின், தபேலா, ஒக்ரபாட், கிற்றார் போன்ற இசைக்கருவிகள் மூலம் வழங்கப்பட்ட இசை பார்வையாளர் மனதை நெருட வைத்தது. நடிகர்களின் நடிப்பு வெளிப்பாட்டுக்கு இசையமைப்பு பக்கபலமாக இருந்தது என்றால் அது மிகையாகாது. அத்தோடு பின்னணியில் பாடப்பட்ட பாடல்கள் ஆற்றுகைக்கு மேலும் உரம் சேர்த்தன. வேட உடை ஏனைய நாடகங்களைப் போல் பாத்திரத் தோற்றத்தை முழுமையாக காட்டுவதாக அமையாது, பெரும்பாலும் பொதுமைப் படுத்தப்பட்ட உடையமைப்பாக அமைந்திருந்தது. காரணம் ஒரு நடிகர் பல்வேறு பாத்திரங்களை ஏற்று நடிக்கும் முறைமை இங்கு காணப்பட்டது. எனினும் பாத்திரங்களின் வகைகளைப் பார்வையாளரால் விளங்கிக் கொள்ளக்கூடிய நிலமை இருந்தது. பொதுமைப்படுத்தப்பட்ட உடைக்கு அப்பால் தீய சக்திகள் கறுப்பு நிற உடையையும், பரிபாலகர்கள் சாக்கால் செய்யப்பட்ட உடையையும், களியாட்டக்காரர் பளபளப்பான உடையையும் சம்பவத்துக்கு ஏற்ப அணிந்து ஆற்றுகையை மேற்கொண்டிருந்தனர். அதேபோல் ஒலி, ஒளியமைப்பும், காட்சியமைப்பும் நாடகத்துக்கு வலுச் சேர்த்தது. குறிப்பாக ஆற்றுகை இரவு வேளையில் நடைபெற்றமையால் ஒளியமைப்புக் கட்டாயமாக அமைந்திருந்தது.

அரங்கு ஒரு சமூகத்தின் காத்திரமான ஊடகம் என்பதை ஆற்றுகை வலியுறுத்தியது. போருக்குப் பின்னர் உள்ள தமிழ் மக்களின் உண்மையான நிலையை ஒரு சில குறியீட்டு அம்சங்களுக்கு ஊடாக வெளிப்படுத்த முயற்சித்தது. நாடகங்கள் நலிந்துபோய்விட்ட இந்தக் காலத்தில் இத்தகைய முயற்சிகள் பாராட்டப்படவேண்டியவைதான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபகங்கள்
# ஓவியக் கண்காட்சி
## ஒரு பாராட்டத்தக்க முயற்சி









துடுசியந்தன்

துடுசியந்தன்

உள்ளத்தெழுக்கை யாவும் துகிலிகை Brush மூலம் ஊற்றெடுத்துத் தங்குதடை இன்றி பாய்ந்து செல்வதே ஓவியம் என்பது சீன மக்களின் ஆழ்ந்தறிந்த கருத்தாகும்.

மனிதன், தான் உலகுள் நுழைந்து (Seeing, into) கண்டறிந்தவற்றால் உண்டாகும் ஆனந்தத்தையும், அழகுணர்ச்சியைம், அனுபவத்தையும், உள நெகிழ்ச்சியையும் சுவர், சீலை, காகிதம், பலகை முதலிய தட்டையான பரப்புக்களின் மீது இரேகை, ரீபன், வண்ணம் ஆகியவற்றினால் சிருஷ்டிப்பதே ஓவியங்களாகும்.

ஞாபகங்கள் ஓவியக் கண்காட்சி போர்க்கால வாழ்க்கையை மீட்டெழும் நினைவுகளாக காட்சியளித்தது கடந்த ஜூலை 2ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை றக்கா வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலாமுற்றம் ஆட் கலரியில் (Art Gallery) நடைபெற்ற யாழ்ப்பாண இந்துக்கல்லூரி ஓய்வு பெற்ற சித்திர ஆசிரியர் எம்.எஸ்.சிவதாசனின் ஓவியக் கண்காட்சி இன்றைய காலகட்டத்தில் பாராட்டத்தக்க முயற்சியாக அமைந்துள்ளது.

பிரதிமை ஓவியங்கள், மரபு சார்ந்த யதார்த்த பாணி ஓவியங்கள், நவீன ஓவியங்கள் என பலதரப்பட்ட சுவைஞர்களையும் திருப்திப்படுத்தும் வகையில் ஓவியங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. வாயில் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த தலை துண்டாடப்பட்ட தியான நிலையில் காணப்படும் மனிதனின் கழுத்துப் பகுதியை பிணம் தின்னிக் காகங்கள் கொத்துகின்ற விதம் பார்வையாளர்களை பல்வேறு கோணங்களில் சிந்திக்க வைக்கிறது.

இடிந்த வீட்டில் இரு பெண்பிள்ளைகள் தலை வாரும் தன்மையில் காணப்படும் ஓவியம் மிகச் சிறந்த யதார்த்தமாகவும், பழைய ஞாபகங்களையும் மீட்பதாகவும் காணப்படுகிறது.

மழைநாள் ஒன்றில் ஒரு கையில் குடையையும் மறு கையில் மாட்டையும் இழுத்துச் செல்லும் விதமாக காணப்படும் ஓவியம், யாழ்ப்பாணம் புகழ்பெற்ற ஓவியரான மு.கனகசபையின் ஓவியத்தை நகல் செய்தது போன்று காணப்படுகிறது.

காட்சிப்படுத்தப்பட்டிருந்த பிரதிமை சித்திரங்கள் மிக நேர்த்தியாகவும், உரியவரைக் கண் முன்னே நிறுத்தியது போன்றும் காணப்படுகிறது. இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த நவீன ஓவியங்கள் கொழும்பு கலாபவனத்தின் முன்புற வீதிகளில் நடைபெறும் ஞாயிறு ஓவியம் சந்தையில் காணப்படும் ஓவியங்களை நினைவுபடுத்துகிறது.

வடக்கே இலைமறைகாயாக இருக்கும் படைப்பாளிகளின் படைப்புகளை வெளிக்கொணரவும் நம்மவர் படைப்புகளை ஆவணப்படுத்தவும், நமக்கென்ற ஒரு கலைவடிவத்தை பேணவும் வளர்க்கவும் மிகப்பெரிய பங்களிப்பை வழங்கி வரும் நிறுவனங்களில் திருமறைக்கலாமன்றமும் ஒன்றாகும். அவர்களினால் உருவகிக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டு வரும் கலைத்தூது கலாமுற்றம் (Art Gallery) வடக்கின் ஒரேயொரு செயல்படு ஆட் கலரியாகும். இந்த கலரியின் ஒரு பிரசவமாக ஞாபகங்கள் (MEMORIES) கண்காட்சி அமைந்திருந்தது.

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்
(சித்திரம்) யாழ். கல்வி வலயம்

# நவாலி சென்.பீற்றஸ் உபகரணக் காட்சி

எமது பாடசாலைகளில் இத்தகைய சஞ்சிகைகளை வெளியிட்டு வரும் கல்விக் கூடங்கள் எத்தனை உள்ளது. எனது 8ஆம் வகுப்பு மாணவப் பருவத்தில் பாடசாலை மலரில் எழுதிய கட்டுரையை இப்பொழுதும் பாதுகாத்து வருகிறேன். அதனை இடையிடையே எடுத்து வாஞ்சையுடன் வாசிப்பேன்.

கடந்த 21 07.2016 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நவாலி சென்பீற்றஸ் றோ.க.த.க.பாடசாலை கற்றல் கற்பித்தல் உபகரணக் காட்சி 2016 அருணன் சஞ்சிகை வெளியீடு என்பன அதிபர் க.ஸ்ரீநந்தகோபன் தலைமையில் நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில், சண்டிலிப்பாய், கோட்டக்கல்விப் பணிப்பாளர். ச. சிவானந்தராசா மேற்கண்டவாறு கூறினார்.

சிறு பாராயங்களில் இயல்பாகத் தோன்றும் ஆக்கத் திறன்கள் மாணவர்களின் கற்றல் திறனை வளர்க்க உந்து சக்தியாக அமையுமென்பதை மறுத்துவிட முடியாது. அதிபர் ஸ்ரீநந்தகோபன் காலத்திலேயே முதன்முதலாக அருணன் சஞ்சிகை கடந்த 2015ஆம் ஆண்டு இதே திகதி மாதத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதன் இரண்டாவது இதழே இன்று வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. இதனூடாக மாணவரிடையே வாசிப்புப் படைப்பாற்றல்களை வளர்த்தெடுக்க முடியும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து அருணன் சஞ்சிகையை வெளியிட்டு வைத்துப் பேசிய நவாலியூர்க்கவி த.பரமலிங்கம் பேசியதாவது. படித்த பாடசாலையில் எனக்கு இந்தக் கௌரவம் வழங்கப்பட்டதைப் பெருமையாகக் கருதுகிறேன். மூன்றாம் வகுப்புக்கு மேலே பாடசாலைக் கல்வியைப் பெறாத என்னால் நாவல்,சிறுகதை, கவிதை நூல்களை வெளியிட முடிந்தது. அதுபோல் ஐந்தாம் வகுப்புக்கு உட்பட்ட இந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவ மாணவிகளின் படைப்புகளை ஏந்தி வந்துள்ள அருணன் சஞ்சிகையில் சிறார்களின் சின்னச் சின்ன கட்டுரைகள், கவிதைகள், துணுக்குகள், தகவல்கள் வெளிவந்துள்ளன. சிறுவர் இலக்கியம் சிறார்களது மழலைச் சொற்களில் படைக்கப்படுவதே இயல்பான யதார்த்தப் படைப்பாக அமையும். வளர்ந்தவர்கள் குழந்தைகளாக மாறிப் படைக்கும் படைப்புகள் போலியாகவே அமையும் என்றார்.

தலைமையுரையில் அதிபர் க.ஸ்ரீநந்தகோபன் தெரிவித்ததாவது.

இடவளங்கள் குறைவாக உள்ள நவாலி சென்.பீற்றர்ஸ் பாடசாலைக்கு புலம்பெயர் நாடுகளில் வாழும் நல்லுள்ளங்களின் பரோபகார உதவிகள் கிடைப்பதால் அபிவிருத்தி அடைந்து வரும் பாடசாலையாக மாறிக் கொண்டிருக்கிறது.

முன்பாக அமைந்துள்ள பழைமைவாய்ந்த கட்டடம் மிக விரைவில் அகற்றப்பட்டு, அந்த இடத்தில் அழகான விளையாட்டுக் கூடமொன்றும் 7 மில்லியன் ரூபா செலவில் அமைக்க சகல விதமான திட்டங்களும் முழுமையாகி உள்ளன. அதே வேளை சமீபத்தில் கிடைத்த இரண்டு கணினிகளோடு மொத்தம் 8 கணினிகள் மாணவர்களின் கற்றலுக்காக அமைந்த கூடமும் அமைக்கப்பட்டுள்ளன. இது வரை வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்துள்ள எமது பாடசாலை அடுத்து தங்கப் பதக்கத்தை இலக்கு வைத்து முன்னேறிக் கொண்டுள்ளது என்றார்.

அருணன் சஞ்சிகையின் முதல் பிரதியை சிறப்பு விருந்தினர் கவிஞர் த.பரமலிங்கத்திடமிருந்து சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசா பெற்றுக் கொண்டதை அடுத்து, விருந்தினர், பெற்றோர், மாணவ மாணவிகள் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற கற்றல் கற்பித்தல் உபகரணக் காட்சிக் கூடங்களை முதன்மை விருந்தினர், சிறப்பு விருந்தினர்களுடன் கௌரவ விருந்தினர் பழைய மாணவியும், முன்னாள் ஆசிரியையுமான, தற்போதைய சுவிஸ் பிரசை திருமதி ஜெயந்திமலர் ஜெயபாலன் மற்றும் விருந்தினர் முடிப்பு யோண்சன் ஆகியோர் நாடா வெட்டித் திறந்து வைத்தனர்.

கண்காட்சி நடுவர்களாக அதிபர்களான எம்.சி.சுதாகரன், எஸ்.நல்லகுமார், எஸ்.அருமைநாதன் மற்றும் ஆசிரியர்கள் எஸ்.முகுந்தன், எஸ்.இராஜேஸ்வரன், திருமதி சு.சிவா[illegible] திருமதி ச.கலாசுலோசினி ஆகியோர் கடமை ஆற்றினர். முடிப்புயோண்சன், திருமதி ஜெ.ஜெயந்திமலர் ஆகியோரும் உரையாற்றினர். (16[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெக்குருகிச் சொக்க வைத்த மயில்களின் ஆடலரங்கம்

**கே.எஸ்.சிவஞானராஜா**

மஞ்ஞைகள் ஆடி மகிழ்ந்து குலாவிய இடம் கொக்குவில் மஞ்சவனப்பதி. மானிட நேயங்கள் தேடியே வந்து ஆடியும் பாடியும் போற்றிய பதியும் மஞ்சவனப்பதி. சஞ்சலம் நீங்கவும் சமரசம் பெருகவும் சாந்தியளிப்பது திருமுருகன்பதி. சரணகமலாலய நடனவினோதமதை பரதவரமாக்கியே பாரதியைப் பேறாக்கினர் கொக்குவில் பெற்ற நோர்வே ரம்யா, அபிராமி இருவரும்.

**ஆடலரங்கம்**

கொக்குவிலைச் சொந்தவிடமாகவும் நோர்வே நாட்டை வதிவிடமாகவும் பாரதியை பரதவார்ப்பாகவும் பெருமையூட்டிய ஆடல் ஆற்றுகை கடந்த 17.07.2016 ஞாயிறன்று கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத் திருமண மண்டபத்தில் வெகுசிறப்பாகவும் கனகச்சிதமாகவும் அரங்கேறியது. காணக் கண்ணாயிரம் வேண்டும்.

**மிக உச்சமாக அதிரவும், உயரவும், பதியவும், சிகரமாக நிமிர வைத்த செல்விகள் ரம்யா அருட்செல்வன், அபிராமி திருக்குமார் இருவரும் நோர் வேயில் எமது இலங்கையையும், இலங்கையில் யாழ்.மண்ணில் ஒரு நோர்வேயையும் ஸ்தாபிதம் செய்து பரத இணைப்பாளர்களாக வரம்பெற்று விட்டனர்.**

**குரு**

பரதகலா சூடாமணி திருமதி பாலாம்பிகை சண்முகநாதனின் ஆசீர்வாத சம்பிரதாயபூர்வாங்க பிரவாகிப்புடன் மஞ்சவனப்பதி முருகன் ஆலய பிரதம குருவின் தெய்வாம்ச வரங்களோடு செல்விகளான அழகு மயில்கள் ரம்யா, அபிராமி இருவரும் முழு பரிபக்குவ ஆற்றுகைக் கலாவல்லிகளாக மேடையைச் சீதனமாக்கினார்கள். குருவின் பார்வையால் மேடை மனோபலமானது. தாரமும் குருவும் தலைவிதிப்படியே என்பதற்கமைய நல்ல வண்ணம் குருவாக பலாம்பிகை நிலைத்தமை பெறுமதியையளித்தது. நல்ல வித்தை சித்திகரமானது.

**மேடை**

அழகுதரு மேடை வண்ணக் கலவையால் மேவிய ஒளி அமைப்பு, ஒலிப்பதிவு ஊடாக பிசிறல் இல்லாமல் வழங்கின. பின்னணி இசை, தமிழ் விளையாடிய அறிவிப்புக்கள், ஒலியமைப்பு யாவுமே இரசிகர்களுக்கு விருந்தாகின. எல்லாமே அச்சா!

**பாரதியும் ஆடலும்**

அடேயப்பா! அபிநயம் ரசம் சொட்டிய கவிநயம் மனோலயமாய் மண்டபத்தை வசீகரித்தது. இருவரினதும் அரங்கேற்றம்போல அப்பாலும் கற்பனை சென்றது. மிருதங்க ஜதி வார்ப்பும் நட்டுவாங்க ஒத்திசைவும் சலங்கை ஒலியும் அற்புதம் நெக்குருகிச் சொக்க வைத்த பாரதியும் பரதமானார்.

போயின போயின துன்பங்களாக இருளகற்றி ஒளி தந்த ஆடல் அரங்கம் பாரம்பரிய பரத சம்பிரதாயங்களோடு தொய்வின்றிப் பிரகாசித்தன. புஷ்பாஞ்சலி, அலாரிப்பு, கௌரத்துவம், வர்ணம், பதம், கீர்த்தனை, லயக் கவிதை, தில்லானா, கோணாங்கி, மங்களம் எனப் பத்து உருப்படிகளிலும் பாரதியின் உயிர் பரோபகாரம் செய்யத் தவறவில்லை. பாரதி ஒரு நவரசக் கலைஞன்.

பாஞ்சாலிசபதத்தை விட்டு பாரதியை வேறுபடுத்த முடியாதென்பதை யுணர்ந்த குரு சிஷ்யைகள், அதற்கு முக்கியத்துவம் வழங்கியிருந்தமையால் ஆடல் அரங்கத்தைச் சுகம் விசாரித்து கண்ணபிரானிடம் சரணமாக்கினர். கண்ணனின் தரிசனம் கண்டு பரவசமானோம்.

பாரதியின் கவியுணர்வுகள் அடைவுகள் வாயிலாக மிளிர்ந்தன. அடைவுகளைச் சுத்தமாகவும் தெளிவாகவும் செய்வதே அங்க சுத்தமாகும். இந்த ஆற்றுகையில் பாமர மக்களும் பொருளை விளங்கி ரசித்துச் சுவைத்ததை மண்டபம் உறுதி செய்தது. பதாகம், திரிபதாகம், அர்த்தபதாகம், கர்த்தரீமுகம், மயூரம், அர்த்தசந்திரன், அராளம், சுகதுண்டம், முஷ்டி, சிகரம், கபித்தம், கடாகாமுகம், ஸூசி (ஊசி) சந்திரகலா, பத்மகோசம், சர்ப்ப சீரிம், மிருகசீரிம், சிம்ஹமுகம், காங்குலம், அல்பத்பம், சதரம்பிரமரம், ஹம்ஸாஸ்யம், ஹம்ஸபட்சம், சந்தம்சம், முகுளம், தாம்ரசூடம், திரிசூலம், வியாக்ரம், ஊர்ணநாபம், பாணம், அர்த்த சூச ஆகிய அஸம்யுத ஹஸ்தங்கள் யாவும் மண்டபத்தில் விரவின உயிர் பெற்றன.

**நவரஸங்கள்**

சுபாவங்களை உயிரோட்டமாக வெளிக்காட்டுதலே ரஸங்களாகும். இந்த ஆடலரங்கில் சிருங்காரம், வீரம், கருணை, அற்புதம், ஹாஸ்யம், பயானகம், பீபத்ஸம், ரௌத்திரம், சாந்தம் ஆகிய ஒன்பது ரஸங்களையும் அனுபவிக்க ஏதுவாயிற்று. அந்தநிலை இரசிகர்களுக்குப் பாக்கியமே.

**பதம்**

உணர்ச்சியின் பல நிலைகளை அதிலும் குறிப்பாகச் சிருங்கார பாவங்களைச் சித்திரித்து வெளிக்காட்டவல்லது பதமாகும். நாயகன், நாயகி, சகி பாவனையில் காதல் பிரவாகிப்பதாக இது அமைகிறது.

*காற்று வெளியிடைக்*
*கண்ணம்மா நின்தன்*
*காதலை எண்ணிக்*
*களிக்கின்றேன்,*
*அடடா அருமை துயர்*
*போயின போயின*
*துன்பங்கள் எம் துன்பங்கள்*
*போயே விட்டன.*
*இனியென்ன? சுகம் வரும்.*

**வேறு**

*பாயுமொளி நீ யெனக்குப்*
*பார்க்கும் விழி நானுனக்கு*
*தோயும் மது நீ யெனக்கு*
*தும்பியடி நானுனக்கு*

கண்ணம்மா என் காதலியாக சௌக்க கால சாகித்திய பாவத்தால் ஆடலைச் சமர்ப்பணமாக்கிய ரம்யா, அபிராமி இருவரும் இணைபிரியா ஜோடிகளாக நளினஞ்செய்து சோபித்த விதம் பஞ்சாமிர்தம் உண்ட களிப்பையும், பரத கொழிப்பையும் ஏற்படுத்தியது. பாயுமொளியில் பாய்ந்து மேய்ந்த கண்கள் ஒருபுறம், வீணையைத் தடவி வாசிக்கும் மீட்டு விரல்களின் இதம் ஒருபுறமாகப் பாடிய பாடகரின் இரம்மியமான சாஹித்திய பாவம் அற்புதம் சிலாகித்த காட்சி பிரமாதம்.

*வீணையடி நீயெனக்கு*
*மேவும் விரல் நானுனக்கு*
*பூணும் வடம் நீயெனக்கு*
*புதுவைரம் நானுனக்கு*
*என்பதை*
*அபரிமிதமான சமிக்ஞையால்*
*மண்டபத்தை உள்வாங்கினர்*
*இரு மயில்களாக.*

**சிறப்பு**

ஆடலரங்கின் சிறப்புக்கு வித்திட்டாற்போல் வர்ணமும், தில்லானாவும் முத்திரை பதித்தன. வர்ணமானது சௌக்க கால சஞ்சாரி பாவங்களுக்கு இடமளித்து மேடைக்குக் காத்திரமளித்தது. தில்லானாவானது மிகவும் விறுவிறுப்பாய் பாவ இராக தாளச் சுவை சொட்டியது. அவையும் தாளசமுத்திமாய் கை கொட்டியது. ஜதிகள், சாகித்தியம், ஸ்வரவார்ப்புகள் நிறைந்த உருப்படி, தில்லானாவாகும். அதனை மிக உச்சமாக அதிரவும், உயரவும், பதியவும், சிகரமாக நிமிர வைத்த செல்விகள் ரம்யா அருட்செல்வன் அபிராமி திருக்குமார் இருவரும் நோர்வேயில் எமது இலங்கையையும், இலங்கையில் யாழ்.மண்ணில் ஒரு நோர்வேயையும் ஸ்தாபிதம் செய்து பரத இணைப்பாளர்களாக வரம்பெற்று விட்டனர். பரவசப்படுத்திய பரத நிகழ்வு பிரமாதம், அற்புதம்.

பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா தம்பதிகள் பிரதம விருந்தினராக அழகு தமிழில் இனிக்கப் பேசினர். புலவர் திருஞானசம்பந்தம்பிள்ளையின் தலைமையுரை வரமாக அமைந்தது. திருமதி கலா சுந்தரேசன், இராசலிங்கம் இராசையாவின் பாராட்டு தீராத மகிமையை இந்த மண்ணில் விதைத்து ரம்யா, அபிராமியை நீடு வாழ வரம் கொடுத்தது! அடுத்து!!








## கண்டாவளையில் கவிதைப் பயிலரங்கு

கண்டாவளை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கவிதைப் பயிலரங்கு 19.07.2016 அன்று பிரதேச செயலர் த. முகுந்தன் தலைமையில் நடைபெற்றது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பயனர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் தமிழில் மரபுக் கவிதைகளுக்கான அறிமுகம் என்ற தலைப்பில் கவிஞரும் பருத்தித்துறைப் பிரதேச செயலருமாகிய த.ஜெயசீலனும் தமிழில் புதுக்கவிதைக்கான அறிமுகம் என்ற பொருளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசனும் கருத்துரைகளை வழங்கினர்.

நிறைவாக நிகழ்வில் கலந்திருந்த பயனர்கள் கவிதை எழுதுமாறு ஆற்றுப்படுத்தப்பட்டனர். சிறந்த கவிதைகள் பிரதேச செயலகத்தால் வெளியிடப்படவுள்ள வளையோசை மலரில் பிரசுரிக்கப்படவுள்ளதாகப் பிரதேச செயலர் த.முகுந்தன் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













## "சிறையில் இருந்து மடல்கள்" கவிதை நூல் வெளியீடு

ஊடகவியலாளர் இரா. ஸ்ரீ ஞானேஸ்வரன் எழுதிய 'சிறையில் இருந்து மடல்கள்' கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில், சேனையூர் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் கவிஞர் இரா.இரத்தினசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது மங்கல விளக்கை மூத்த கவிஞர் தாமரைத்தீவான் ஏற்றி வைப்பதையும், இரத்தினசிங்கம் தலைமையுரையாற்றுவதையும், ஊடகவியலாளர் திருமலை நவம், அறிமுக உரை நிகழ்த்துவதையும், இலங்கை உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க தலைவர் அ. சத்தியானந்தன் விமர்சன உரை வழங்குவதையும், நூலின் முதற்பிரதியை நூலாசிரியர் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இம்மானுவேல் வழங்கி வெளியிட்டு வைப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் காணலாம்.

(40)

















## "அவள் ஒரு தனித்தீவு" நூல் அறிமுக விழா

வவுனியாத் தமிழ்ச் சங்கத்தில், திருமலை, கவிச்சுடர் சிவரமணியின் 'அவள் ஒரு தனித்தீவு' நூல்அறிமுக விழா இடம்பெற்றபோது, மங்கல விளக்கை ஆ.அம்பிகை பாகன்–தர்மினி தம்பதியினர் ஏற்றிவைப்பதையும், தமிழருவி த.சிவகுமாரன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாணசபை உறுப்பினரான மயில்வாகனம் தியாகராஜா, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் எம்.பி.நடராசா, வவுனியா பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீரசிங்கம் பிரதீபன், தமிழ்மணி கே.கே.அருந்தவராஜா (மேழிக்குமரன்), நூலாசிரியர் ஆகியோர் உரையாற்றுவதையும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# திருவள்ளுவர் தந்த

## திருக்குறளின் வாழ்க்கைத் தத்துவங்கள்

க.கனகசபை

உலகளாவிய தத்துவங்களைக் கொண்ட திருக்குறளை இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் திருவள்ளுவர் படைத்து உலக இலக்கிய அரங்கில் தமிழ் மொழிக்கென்று ஓர் உயர்ந்த இடத்தை நிலைபெறச் செய்தவர். இந்த உண்மையைப் பாரதியார் வள்ளுவர் தன்னை உலகினுக்குத் தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு என்று புகழாரம் சூட்டியுள்ளார். எம் அன்னைத் தமிழ் மொழியில் காலத்துக்குக் காலம் பல்வேறு நூல்கள் தோன்றிய வண்ணம் உள்ளன. அவற்றுள் கால வெள்ளத்தில் மறைந்தன சில உண்டு. காலத்தை வென்று வாழும் சிறப்புக்குரியன சிலவுமுண்டு. அத்தகு சிறப்புக்குரிய, ஈடு இணையற்ற நூலாகப் போற்றப்படுவது திருக்குறள் ஒன்றே ஆகும். காலத்தை வென்று வாழும் இந்த நூல் உலக மக்கள் அனைவருக்கும் வழிகாட்டும் பெருமைக்குரியது. திருமால் ஈரடியால் உலகளந்தார் என்றுரைப்பர் புராண வித்தகர்கள். ஆனால், திருவள்ளுவர் இரண்டு அடிகளால் உலக மக்கள் அனைவரதும் உள்ளங்களை அளந்துள்ளார் என்றால் அது மிகை அல்ல. இதனாலே புரட்சிக் கவி பாரதியும் -

*"வள்ளுவன் தன்னை
உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட
தமிழ்நாடு"* எனப் போற்றினார்.

வள்ளுவன் தந்த முதற் குறளே பரந்த நோக்குடையதாக, உலக சமுதாயம் அனைத்தையும் ஒன்றாகக் கருதும் பண்புடையதாக, அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் கருத்துடையதாக மிளிர்வதைக் காணலாம்.

*"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"*

என்கிறார் வள்ளுவர். இது இன்றைய நிலையில் மிக முக்கியமாக நோக்குதற்குரிய கருத்தாகும். சமயப் பொதுமைக்கும் முற்போக்குச் சிந்தனைக்கும் தொடக்கமாக அமைகிறது இந்தக் குறள். குறளில் அமைப்பு அதன் சீரிய சிந்தனைகளை மக்கள் மனதில் பதிக்கும் வகையில் அமைந்துள்ளன எனலாம். இவர் உலக மக்களால் தெய்வப் புலவர், பொய்யாப்புலவர், செந்நாப் போதர், பெருநாவலர், பொய்யா மொழிப் புலவர் என்றெல்லாம் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றார். இவர் எழுதிய திருக்குறள் வாழ்வியலில் எல்லா அங்கங்களையும் இனம், மொழி, பாலின பேதங்களின்றி காலம் கடந்தும் பொருந்துவதுபோல் கூறி உள்ளது.

இந்த நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. 133 அதிகாரங்களையும் அதிகாரம் ஒன்றிற்கு பத்துப் பாடல்கள் வீதம் 1330 குறட்பாக்களையும் கொண்டு விளங்குகின்றது. திருக்குறளின் அறத்துப்பால் 38 அதிகாரங்களையும், பொருட்பால் 70 அதிகாரங்களையும், காமத்துப்பால் 25 அதிகாரங்களையும் கொண்டுள்ளது. இது அற நூலாகவும் வையத்து வாழ்வாங்கு வாழும் நெறியுரைக்கும் சீரிய இலக்கியமாகவும் திகழ்கிறது. வாழ்க்கைக்கு சிறந்த வழிகாட்டியாகத் திருக்குறள் விளங்குகிறது. மனித வாழ்க்கையை நுணுகி ஆராய்ந்து வாழும் வழியிதுவென வையகத்தாருக்கு வள்ளுவர் வழிகாட்டுகின்றார். அவரது குறள்கள் ஒவ்வொன்றும் மனித வாழ்க்கையை செம்மைப் படுத்துவனவாகவே அமைகிறது.

*"தோன்றிற் புகழொடு
தோன்றுக அஃ திலார்
தோன்றலிற் தோன்றாமை
நன்று"* (குறள்238) என்கிறார்.

நிகழ்ந்ததை நிகழ்ந்தபடி அல்லது கேட்டதைக் கேட்டபடி கூறுதல் அன்று வாய்மை. கேட்போருகக்கு ஒரு சிறிதேனும் தீமைதராத ஒன்றே வாய்மை என்பது வள்ளுவர் தரும் கருத்தாகும்.

*"பொய்மையும் வாய்மை
இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்"* (குறள் 292) என்று வாய்மைக்குப் புது விளக்கம் தருகின்றார் வள்ளுவர். இவ்வாறு வையத்து வாழ்வாங்கு வாழும் நெறியை வள்ளுவரது திருக்குறள் நமக்குணர்த்துகின்றது.

அறத்துப் பாலில் அறநெறி உணர்த்திடும் வள்ளுவர் பொருட்பாலில் புதிய பல கருத்துக்களை எமக்குப் புலப்படுத்துகின்றார். ஆட்சி புரிவோருக்கு அறிவுரை கூறுகின்றார். பொருள் வளம் பெருகிடும் முறைகளைப் புகழ்கிறார். மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றார்.

காமத்துப்பாலில் இல்லறத்தான் இன்பம் பெறும் வழிகளை இனிய முறையில் எடுத்துரைக்கிறார். அறம், பொருள், இன்பம் மூன்றையும் அழகாக எடுத்துக் கூறும் திருக்குறள் வாழ்வியல் நூலாகத் திகழ்கிறது. அதனாலேயே உலக மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு நூலாக உலகப் பொதுமறையாக இது விளங்குகிறது. வள்ளுவம் இன்று வானுயர்ந்த சிறப்பைக் கொண்டுள்ளது. உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டு உலக மக்களால் பெரிதும் போற்றிப் படிக்கப்படும் ஒரு நூலாக விளங்குகிறது. கடுகு சிறிதெனினும் காரம் பெரிதென்பர். குறுகிய இரு அடிகளில் ஆக்கப் பெற்ற குறளானது இன்று எல்லா மக்களாலும் போற்றப்படுகின்றது என்றால் அதன் பொருட் சிறப்பே அதற்குக் காரணமாகும்.

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்" என்பது ஔவையாரின் அருள் வாக்கு. குறளின் பெருமைக்கு வேறு சான்றும் வேண்டுமா? திருக்குறளின் சிறப்பினைப் புலவர் பலரும் போற்றிப் புகழ்ந்துள்ளனர். வள்ளுவரின் பின் வந்த புலவர்கள் யாவரும் அவரது கருத்துக்களைத் தத்தம் பாக்களில் புகுத்தியுள்ளமையைக் காண்கிறோம். புலவர் போற்றும் புலவராக வள்ளுவர் விளங்குகிறார். அவர் படைத்த குறள் உள்ளவரை அவர் நாமம் நின்று நிலைக்கும் என்பதில் ஐயமில்லை. உலகப் புகழ் வாய்ந்த நீதிநூலாக, உலக மாந்தர்க்கு வழிகாட்டும் தமிழ் மறையாக விளங்கும் திருக்குறளை ஓதியின்புறுவதே எமது கடனாகும். உலகனைத்துக்கும் பொதுவான இந்த நூல் வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கூறும் நூலாகவும் விளங்குகிறது. இல்லறத்தை நல்லறமாக்கி மேற்கொண்டொழுகும் முறைகளையும், விருந்தோம்பல் பண்பையும், மக்கட்பேற்றின் சிறப்பையும் திருக்குறளில் நாம் காணமுடிகிறது. இதனாலேயே திருக்குறளை சிறந்த வாழ்வியல் நூலாகக் கருதுகின்றோம்.

ஒரு நாட்டுக்கோ, ஒரு மொழிக்கோ, ஓர் இனத்துக்கோ உரியதல்ல திருக்குறள். அது உலக மக்கள் அனைவரதும் உள்ளங்களை ஒன்றுபடுத்த வல்லது அத்தகைய சிறப்புக்குரிய நூலை எந்தநாளும் போற்றிக் கற்பதே எம்பெரும் பணியாக அமைதல் வேண்டும். உலகப் பொதுமறை நூலின் ஊடாக பெருநாவலர் உலக இலக்கிய அரங்கில் தமிழர்களை பெருமிதம் கொண்டு நெஞ்சில் நிமிர நிற்கும்படி செய்த உன்னத படைப்பாளி என்று கூறினால் மிகையாகாது.

**எம் அன்னைத் தமிழ் மொழியில் காலத்துக்குக் காலம் பல்வேறு நூல்கள் தோன்றிய வண்ணம் உள்ளன. அவற்றுள் கால வெள்ளத்தில் மறைந்தன சில உண்டு. காலத்தை வென்று வாழும் சிறப்புக்குரியன சிலவுமுண்டு. அத்தகு சிறப்புக்குரிய, ஈடு இணையற்ற நூலாகப் போற்றப்படுவது திருக்குறள் ஒன்றே ஆகும். காலத்தை வென்று வாழும் இந்த நூல் உலக மக்கள் அனைவருக்கும் வழிகாட்டும் பெருமைக் குரியது. திருமால் ஈரடியால் உலகளந்தார் என்றுரைப்பர் புராண வித்தகர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 750 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 700 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 700 | 500 | 450 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 800 | – | – |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 400 | 500 | – |
| விளை | 650 | 600 | 400 | 800 | 500 | 600 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 500 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 450 | 500 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 300 | – | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 200 | 200 | – |
| நகரை | 250 | 300 | – | 300 | 300 | 100 | 370 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 150 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 400 | 300 | 200 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 350 | 300 | 300 | 200 |
| மதனம் | 150 | 200 | 180 | – | 250 | – | 300 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 120 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 400 | 300 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 250 | 300 | 300 |



## பெண்களுக்கான வீட்டுக் குறிப்புகள்

- இட்லிக்கு வாசனை தூக்கலாக வேண்டுமானால் குக்கர் தண்ணீரில் கொத்துமல்லி, எலுமிச்சம்பழத் தோல் போடலாம்
- கீரை வெந்ததும் மசித்து, எலுமிச்சம் பழம் பிழிந்தால் சப்பாத்திக்கு சூப்பராக இருக்கும்.
- சமைக்கும் போது காய்கறிகள் நிறத்தையும் மணத்தையும் இழக்காமல் இருக்க திறந்து வைத்து சமைக்கவும்.
- சப்பாத்திகள் மென்மையாக இருக்க அதன் மாவை வெந்நீரில் பிசையவும்.
- முட்டையை உடைத்து ஊற்றியவுடன் சிறிது பாலையும் உளுத்தம்மாவையும் சேர்த்து ஆம்லேட் தயாரித்துப் பாருங்கள். சுவையாக இருக்கும்.
- கோழிக் கறியில் மஞ்சள் பொடி தடவி 10 நிமிடம் கழித்து வெட்டினால் மாமிசத்திலிருந்து வரும் துர்நாற்றம் போகும்.
- குழந்தைகளுக்கு மரக்கறி சூப் செய்யும் போது அதில் துருவிய முந்திரி, பொடியாக நறுக்கிய பிரெட்டை நெய்யில் வறுத்து சூப்பின் மேல் தூவினால் குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவர்.
- புளித்த பாலில் வெள்ளிப் பாத்திரங்களையோ, வெள்ளி நகைகளையோ அரைமணி நேரம் ஊறப் போட்டுப் பின் துலக்கினால் அவை புதியவை போல் இருக்கும்.
- வெண்ணெயில் உப்பைத் தூவி விட்டால் அது நாட்பட்டாலும் கெடாமல் இருக்கும்.
- வெயில் காலத்தில் எங்கு நோக்கினும் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருக்கும். வீட்டைக் கழுவும் போது நீரில் சிறிது உப்பைச் சேர்த்துப் பின்பு கழுவுங்கள். காய்ந்த பின் அறையில் ஈக்கள்வராது.
- காய்கறி மற்றும் பழங்களை சிறிதளவு வினிகர் கலந்த குளிர்ந்த நீரில் ஒரு சில நிமிடங்கள் போட்டு வைத்தால் கிருமிகள் இறந்துவிடும்.



## நாளை

**ஆடி-13**
வியாழக்கிழமை
-28.07.2016
திதி: நவமி பி.ப.01.28 வரை
நட்சத்திரம்: பரணி மு.ப.09.10 வரை
ராகுகாலம்: 01.32-03.02 வரை
சுபநேரம்: 07.32-09.02 வரை
கார்த்திகை விரதம்

## வாழைக்காய்ப் பிட்டு

### தேவையான பொருள்கள்

வாழைக்காய்—2
உப்பு —தேவையான அளவு
பெருங்காயம் —சிறிதளவு
எண்ணெய்—2 தேக்கரண்டி
கடுகு—1 தேக்கரண்டி
உளுத்தம்பருப்பு—2 தேக்கரண்டி
மிளகாய் வற்றல்—3
கறிவேப்பிலை — தேவையான அளவு

### செய்முறை

வாழைக்காயைத் துண்டுகளாக வெட்டி, ஒரு வாயகன்ற பாத்திரத்தில் இட்டு அந்தத் துண்டுகள் மூழ்கு மளவுக்குத் தண்ணீரை ஊற்றி வேக வைக்கவும்.

வாழைக்காய் பாதி வெந்தும் வேகாத பதத்தில் எடுத்து ஆறவிடவும். வாழைக்காய் சூடு ஆறினவுடன் தோலைச் சீவிவிட்டு வாழைக்காயை அரிப்பில் துருவிக் கொள்ளவும்.

சட்டியில் எண்ணெய் இட்டு கடுகு, உளுத்தம் பருப்பு, மிளகாய் வற்றல், கறிவேப்பிலை தாளிசம் செய்து வாழைக்காய் துருவியதைப் போட்டு உப்புப் போட்டு வதக்கவும்.

லேசாகத் தண்ணீர் தெளித்துக் கொள்ளவும். துருவப்பட்டிருப்பதால் சீக்கிரம் அடிப்பிடிக்கவும் வாய்ப்பிருப்பதால் அடுப்பை மிதமான தீயில் வைத்து கிளறி வரவும். பெருங்காயம் போட்டு நன்றாக கிளறி விடவும். பிட்டு வெந்தவுடன் உப்பைச் சரி பார்த்து இறக்கவும். சுவையான வாழைக்காய் பிட்டு ரெடி.





## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 80 | 120 | 30 | 40 | – | 30 |
| கத்தரி | 120 | 100 | 130 | 120 | 70 | 80 | – | 70 |
| கரட் | 150 | 160 | 200 | 160 | 160 | 160 | – | 140 |
| மரவள்ளி | 100 | 100 | 100 | 30 | 100 | 80 | – | 50 |
| பயிற்றை | 80 | 50 | 150 | 60 | 80 | 140 | – | 80 |
| பாகல் | 200 | 160 | 180 | 240 | 120 | 160 | – | 150 |
| கருணைக்கிழங்கு | 120 | 120 | 50 | – | 120 | – | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 90 | 80 | 90 | – | 70 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 120 | 120 | 120 | 100 | – | 100 |
| பூசணி | 150 | 80 | 150 | 120 | 90 | 100 | – | 130 |
| தக்காளி | 200 | 130 | 160 | 160 | 100 | 150 | – | 200 |
| வாழைக்காய் | 120 | 100 | 100 | 100 | 100 | 80 | – | 50 |
| கீரை | 20 | 20 | 40 | 20 | 20–30 | 40 | – | 15 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 500 | 450 | 600 | 450 | 600 | 600 | – | 600 |
| புடோல் | 70 | 80 | 80 | 100 | 80 | 80 | – | 60 |
| கோவா | 150 | 140 | 120 | 160 | 140 | 80 | – | 120 |
| வெண்டி | 80 | 60 | 100 | 100 | 100 | 80 | – | 80 |
| போஞ்சி | 180 | 180 | 150 | 180 | 140 | 160 | – | 140 |
| லீக்ஸ் | 120 | 160 | 140 | 160 | 160 | 200 | – | 120 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 25–30 | 20 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 110 | 100 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 100 | 140 | 150 | 120 | 140 | 200 | – | 120 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | 200 | 300 | 400 | 260 | 200 | – | 200 |
| இராசவள்ளி | 160 | – | – | 250 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 600 | 250 | [illegible] | 400 | [illegible] | 300 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | | | | | 7 | | |
| | | 2 | | | 9 | | | |
| | | | | | 4 | | | 9 |
| | 4 | 8 | 6 | | | 9 | | |
| | 1 | | | | 5 | 6 | 2 | |
| | | 5 | 2 | 4 | | | | |
| 5 | | 3 | 4 | 7 | | | 1 | |
| | | | | 1 | | 8 | | |
| 7 | | | | | | | 3 | 5 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 5 | 1 | 3 | 9 | 8 | 2 | 7 | 6 |
| 7 | 2 | 8 | 4 | 1 | 6 | 3 | 5 | 9 |
| 3 | 9 | 6 | 7 | 2 | 5 | 8 | 1 | 4 |
| 1 | 8 | 2 | 9 | 5 | 3 | 6 | 4 | 7 |
| 9 | 7 | 5 | 8 | 6 | 4 | 1 | 3 | 2 |
| 6 | 3 | 4 | 1 | 7 | 2 | 9 | 8 | 5 |
| 8 | 1 | 7 | 6 | 4 | 9 | 5 | 2 | 3 |
| 2 | 4 | 9 | 5 | 3 | 1 | 7 | 6 | 8 |
| 5 | 6 | 3 | 2 | 8 | 7 | 4 | 9 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமா கப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.







மனைவி:
உங்களுக்கு ராணி என்று
ஏற்கனவே ஒரு மனைவி இருக்கா என்று கல்
யாணத்துக்கு முன்பே ஏன் என்கிட்ட சொல்லலை...
கணவன்: சொன்னேனே... மறந்திட்டியா...
மனைவி: எப்போ சொன்னீங்க... நீங்க சொல்லவே இல்லை..
கணவன்: உன்னை ராணி மாதிரி வச்சுக் காப்பாத்துவேன்
என்று நான் சொல்லலை...
மனைவி:???





## விவாகரத்துப் பெறும் இயக்குநர் விஜய்–அமலாபால் தம்பதிகள்

திருமணமான இரண்டே ஆண்டுகளில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுப் பிரிந்தனர் இயக்குநர் விஜய் - அமலாபால் தம்பதிகள்.


கடந்த 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7ஆம் திகதி கேரள மாநிலம் கொச்சியில் இயக்குநர் விஜய் - அமலாபால் இருவருக்கும் நிச்சயதார்த்தம் நடந்தது.

ஜூன் 12 ஆம் திகதி சென்னையில் திருமணம் நடந்தது. திருமணத்துக்குப் பின் அமலாபால், கணவருடன் சென்னையில் குடியேறினார்.

சென்னை அடையார் 'போட்' கிளப்பில் உள்ள ஒரு வீட்டில் இருவரும் தனிக் குடித்தனம் நடத்தினார்கள்.

அமலாபால் தொடர்ந்து சினிமாவில் நடித்து வந்தார். அதுதான் அவரது விருப்பமாகவும் இருந்தது. ஆனால் அவர் நடிப்பதை இயக்குநர் விஜய்யும், அவருடைய குடும்பத்தினரும் விரும்பவில்லை. கணவர் மற்றும் அவர் குடும்பத்தினர் விருப்பத்தை மீறி, அமலாபால் புதிய படங்களில் நடிக்க ஒப்பந்தமானார். இது விஜய்-அமலாபால் இடையே கருத்து வேறுபாட்டை ஏற்படுத்தியது. இரண்டு பேரும் பிரிவது என்று முடிவு செய்தார்கள்.

அதன்படி அமலாபால் இயக்குநர் விஜய் இருவரும் நெருங்கிய நண்பர்கள் முன்னிலையில் சுமுகமாகப் பேச்சு நடத்திப் பிரிந்தார்கள். இப்போது விஜய் தனது பெற்றோருடன் வசிக்கிறார். அமலா பால் சென்னையில் தனியாக வசிக்கிறார். இரண்டு பேரும் குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்துக்கு விண்ணப்பிக்கப் போகிறார்கள் எனத் தகவல்கள் வெளியாகின.



**மேடம் :** பெற்றோரின் ஆலோசனையை ஏற்பீர்கள். தொழில், வியாபாரத்தில், போட்டி குறுக்கிடலாம். மிதமான ஆதாயம் கிடைக்கும். வெளியூர்ப் பயணத்தில் திடீர் மாறுதல் உண்டாகும்.

**இடபம்:** எதிரியின் திட்டத்தை சமயோசிதமாக முறியடிப்பீர்கள். குடும்பத்தில் அமைதி நிலைக்கும். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்தியளிக்கும். தக்க சமயத்தில், உறவினர்களின் உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கு பூர்த்தியாகும். வருமானம் அதிகரிக்கும். வீட்டுத் தேவைகளை தாராள செலவில் நிறை வேற்றுவீர்கள். ஆரோக்கியம் பலம் பெறும்.

**கடகம்:** அடுத்தவர் விடயத்தில், கருத்துச் சொல்ல வேண்டாம். குடும்பத் தேவை பூர்த்தியாகும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். நண்பரால் உதவி உண்டு.

**சிங்கம்:** எவருக்கும் தேவையற்ற வாக்குறுதி தரவேண்டாம். தொழில், வியாபாரத்தில், பணிச் சுமை அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். இயந்திரப்பிரிவு பணியாளர்கள், விழிப்புடன் இருப்பது நல்லது.

**கன்னி:** மனதில் பெருமித உணர்வு மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற வளர்ச்சி நிலையை கண்டு, பிறர் வியப்படைவர். இயன்ற அளவில் தர்மச்செலவு செய்வீர்கள். விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.

**துலாம்:** கடந்த கால நற்செயலுக்கான நன்மை தேடி வரும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பணக் கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். அக்கம் பக்கத்தினருடன் இணக்கம் உண்டாகும்.

**விருச்சிகம் :** சிலர் உங்களின் செயலைப் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில், உற்பத்தி, விற்பனை, சராசரி அளவில் இருக்கும். மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள், நகை, பணத்தை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**தனுசு:** மதிநுட்பத்துடன் செயலாற்றி வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மகரம்:** திட்டமிட்டபடி, செயல்களை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். உபரி பணவரவு கிடைக்கும். குடும்பத்தினருடன், விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.

**கும்பம்:** விடாமுயற்சிக்கான நற்பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், போட்டியை சமாளித்து வெற்றி காண்பீர்கள். பெண்கள் சிக்கனமாக செலவு செய்து சேமிப்பர். உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்:** மனம், செயலில் புத்துணர்வு பெறுவீர்கள். பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழிலில் இருந்த மந்தநிலை விலகும். வருமானம் அதிகரிக்கும். உறவினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்புக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை காலை வடக்கு மாகாணத்திற்கு கனேடிய அயலுறவுத்துறை அமைச்சர் பயணம் மேற்கொள்வார். வடக்குப் பயணத்தின் போது, வடக்கு மாகாண ஆளுநர் கூரே, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோரைச் சந்திப்பார். சந்திப்புக்களின் முடிவில், கனேடிய நிதி உதவியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை அவர் பார்வையிடுவார் என கொழும்பிலுள்ள கனேடிய தூதரகத் தகவல்கள் தெரிவித்தன. (வ-5)

## அரசுக்குள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளதாவது: மிக் விமானக் கொள்வனவு உட்பட பல மோசடிகளில் அவர் ஈடுபட்டார் என்பதற்கான உறுதியான ஆதாரங்கள் உள்ளன. எனினும் கோத்தாபய ராஜபக்ச கைதுசெய்யப்படுவது அரசுக்குள் உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் சிலரின் கடும் எதிர்ப்பு காரணமா கவே தாமதமாகிவருகின்றது என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. மிக உயர்ந்த விலையில் தரமற்ற மிக் விமானங்களைக் கொள்வனவு செய்த குற்றச்சாட்டை முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் எதிர்கொள்கின்றார். ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் இது குறித்த முக்கிய ஆவணங்கள் காணாமற்போயுள்ளமை தெரியவந்தது. இலங்கை அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீர உக்ரைனுக்குப் பயணம் மேற்கொண்டவேளை இது குறித்து ஆராயுமாறு உக்ரைன் அரசைக் கோரியிருந்தார்.

இதேவேளை, முன்னாள் பாதுகாப்புச் செயலாளரை பொதுச் சொத்தை தவறாகப் பயன்படுத்தியமை மற்றும் அரச ஊழியர்களின் பணிகளில் இடையூறுகள் ஆகிய குற்றச்சாட்டுகளில் மாத்திரமே கைதுசெய்யலாம் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (வ-21)

# மரண அறிவித்தல்கள்

## தில்லையம்பலம் சுதந்திரபாலன் (சுதா)

(ஓய்வுபெற்ற கணக்காளர்)



தோற்றம் 1947 . 08 . 19 — மறைவு 2016 . 07 . 23

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் சுதந்திரபாலன் கடந்த (23.07.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - ஜெயமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், வேதநாயகியின் அன்புக் கணவரும், கௌரிசங்கர் (நியூசிலாந்து), கௌசிகன் (ஆஸ்திரேலியா), கௌரிநாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திவிஷா, வினிந்தித்தா ஆகியோரின் நேசமிகு மாமனும், காலஞ்சென்ற தர்மபாலன் மற்றும் தர்மலிங்கம், ஸ்ரீமுருகானந்தன், ஸ்ரீரங்கநாயகி, தயாளினி, சத்தியஸ்ரீ ஆகியோரின் அன்புச் சகோதரனும், வசந்திதேவி, சிதம்பரேஸ்வரி, சுவர்ணலதா, சுந்தரலிங்கம், சந்திரலிங்கம், சிவம், அன்னலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், செல்வராஜேஸ், சொர்ணலட்சுமி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும், சன்விகா, பிரணீவ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2016) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடிய பாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

**021 222 2314**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சந்திரகலை சிவரஞ்சன்



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரகலை சிவரஞ்சன் நேற்று (26.07.2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் விநாயகமூர்த்தி - பூபதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சிவரஞ்சனின் அன்பு மனைவியும், ரஜிதனின் அன்புத் தாயாரும், கலா, வத்சலா, விஜிதா, விமலா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீகாந்தராஜா, செல்வநாயகம், சண்முகநாதன், ஜெயராஜ், சிவமோகன், சிவகுமார், சிவரூபன், உதயகுமாரி, தட்சாயினி, சுபாசினி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. ஒரு மணியளவில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் புளியங்கூடல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## அருட்சகோதரி சவேறினா செபமாலை லெம்பேட் -தி.கு



வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட் சகோதரி சவேறினா செபமாலை லெம்பேட் 25.07.2016 திங்கட்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.


இவரது பூதவுடல் இன்று (27.07.2016) புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்சகோதரி
கிறிஸ்ரா மரியதாஸ்
(மாகாணத் தலைவி)

121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(3241) (13,18)

## சித்தியானந்தன் செல்லத்துரை



தோற்றம் 27 . 09 . 1935 — மறைவு 24 . 07 . 2016

யாழ். கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வீமன்காமத்தை வசிப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாக வும் கொண்ட சித்தியானந்தன் செல்லத்துரை 24.07.2016 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்லத்துரை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், முத்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவி அவர்களின் ஆருயிர்க் கணவரும், யசிந்தா, கிரிகரன், சுயேதா, விந்தா, விநோதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நித்தியானந்தன், காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தன், சற்குணானந்தன், விபுலானந்தன் மற்றும் கலா, கெங்காதரன், ஜெகதீசன், ராசாத்தி, தேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவகுமார், நந்தினி, விபுலன், ரவிச்சந்திரன், பார்த்தீபன் ஆகியோரின் ஆசை மாமனும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதிதேவி, சுந்தரலிங்கம், வேலுப்பிள்ளை, சாவித்திரி தேவி, பரமேஸ்வரி, மகேஸ்வரி, மகாலிங்கம், ருக்மணி தேவி மற்றும் அமிர்தலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான T.K. பொன்னுத்துரை, சபாரத்தினம், நவரத்தினம், விஜயநாதன், பரஞ்சோதி, சந்திரவதனி, சிவசுந்தரி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2016) புதன்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.குருதேவ் (பேறாமகன்)

(ஜே.3256)
(13.17.18)

கிரிகரன் - கனடா +141 6409 8775
சிவகுமார் - கனடா +141 6835 5806
விந்தா - கனடா +141 6284 5835

## திருமதி சின்னத்தம்பி குணபூரணம்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி குணபூரணம் 25.07.2016 திங்கட்கிழமை இயற்கை மரணம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமசாமி - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் சின்னத்தம்பியின் பாசமிகு மனைவியும் ரவி(ஜேர்மனி), இராஜேந்திரம்(லண்டன்), பாமா மற்றும் காலஞ்சென்றவர்களான சேகர், சபேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கோமதி, கவிதா, தருமராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் துவாரகா, பிரதீபன், பிருந்தா, சானுஜா, அஸ்வினி, துவாரகன், கிரிதரன், தட்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பூமணியின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, ஆனந்தசுந்தரம், பாலசுந்தரம் மற்றும் சிவசுந்தரம், யோகம்மா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(28.07.2016) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.43, கலைவாணி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.


தகவல்:
குடும்பத்தினர்.

**077626 0731**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## செல்லத்துரை பத்மநாதன்

(ராசன்- பத்தர்)



தோற்றம் 26.04.1933 — மறைவு 25.07.2016

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வசிப்பிடமாகவும், கனடாவைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை பத்மநாதன் 25.07.2016 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா - நாகமுத்து தம்பதிகளின் அருமை மருமகனும், காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும், ரஞ்சிதராணி, தர்மதாஸ்(கனடா), சாந்தி (கனடா), வசந்தகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், பரமேஸ்வரன், அம்பிகைபாலன் மற்றும் தர்மலிங்கம், ஜெகதீஸ்வரி, பாக்கியம் ஆகியோரின் அருமைச் சகோதரனும், சௌந்தரராஜன், புஸ்பகலா (கனடா), பாஸ்கரன் (கனடா), பாலினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், சஜிதா, சில்வியா (கனடா), ஷான் (கனடா), பிரதீப் (கனடா), பிரசான் (கனடா), பிரகாஷ் (கனடா), நித்தாஷா(கனடா), நிதர்சன் (கனடா) ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.07.2016) புதன்கிழமை St.John's Dixie Cemetery & Crematorium, 737 Dundas StE, Mississauga On L4Y 2B5, Canada வில் பார்வைக்காக வைக்கப்பட்டு தகனக்கிரியைகள் நாளை (28.07.2016) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சௌந்தரராஜன் - ரஞ்சிதராணி
(மருமகன்- மகள்)
077 185 3421

(J/3247)
(11,18)

வசந்தன்(மகன்- கனடா)-001 905 848 5151, 001 416 587 0592

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
25 . 08 . 1925



மறைவு
27 . 06 . 2016

### அமரர் தங்கம்மா சிற்றம்பலம்

கடந்த 27.06.2016 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (27.07.2016) புதன்கிழமை எமது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதலும் அனுதாபத்தையும் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)**

'அன்பகம்'
கோண்டாவில் வீதி,
இருபாலை கோப்பாய்.

குடும்பத்தினர்.

## கடை வாடகைக்கு உண்டு

இலக்கம் 05, கஸ்தூரியார் வீதி, யாழ் மாநகர சபை புதிய கட்டடத் தொகுதியில் உள்ள (43 X 12) விஸ்தீரணம் உள்ள கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 3611282

## தொழில்நுட்ப ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, ஜூலை 27

இலங்கையின் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்காக 13 மில்லியன் யூரோவை நன்கொடையாக வழங்கும் புதிய ஒப்பந்தமொன்று நேற்றுக் காலை கைச்சாத்திடப்பட்டது.

ஒப்பந்தத்தின் பிரகாரம் வழங்கப்படும் நன்கொடை வில்பத்து தேசிய பூங்காவுக்கான பாதுகாப்பு எல்லைகளுக்கான முகாமைத்துவம், வடக்கு – கிழக்கில் தொழில்சார் பயிற்சிநெறி, சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்தல், சமூக மாற்றீட்டு மேம்பாடு போன்ற நான்கு திட்டங்களுக்காக உபயோகிக்கப்படவுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜேர்மனிக்குப் பயணம் மேற்கொண்ட போது இந்தத் திட்டத்திற்கு ஜேர்மனி ஒப்புதல் வழங்கியிருந்தது.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவால் இது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. (ற-5)

## ROOM வாடகைக்கு தேவை

யாழ் நகரை அண்மித்த பகுதியில் 2 ஆண்களுக்கு ROOM வாடகைக்கு தேவை.

தொடர்புக்கு.0772814020

## மரண அறிவித்தல்

### திருமதி இராசசௌந்தரி பவாநாதன் (குஞ்சு)



உடுவில் தெற்கு, பாலாவோடை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசசௌந்தரி பவாநாதன் கடந்த (25.07.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- தங்கச்சிஅம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நடராசா- இராசமணி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நடராசா பவாநாதனின் அன்பு மனைவியும் மதுசா (அபிவிருத்தி உத்தியோகத்தர் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் - வடமாகாணம்), ஸ்ரீராச்பவன்(ஆஸ்திரேலியா), ஸ்ரீரகுபவன்(இரவுக்கணக்காய்வாளர்-Tilkohotel ) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராசநாயகி, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தனஞ்செயராஜசிங்கம் (லண்டன்), கிரிசானந்தன் (ஆஸ்திரேலியா), திஸ்ஸானந்தன்(ஆஸ்திரேலியா), பாதுசா (அபிவிருத்தி உத்தி யோகத்தர் கமநல சேவை நிலையம்- உடுவில்) ஆகியோரின் பாசமிகு சிறியதாயும் தர்ஜினி, சாரங்கி (ஆஸ்திரேலியா), சுஜந்தன்( அன்ரா கலர்லாப்) ஆகியோரின் பாசமிகு மாமியும் சஞ்செய், சஸ்வின், ஷலினா, எஜெய் (ஆஸ்திரேலியா), தஷ்மியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உடுவில் தெற்கு,
பாலாவோடை, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

077 068 6643

## கண்ணீர் அஞ்சலி

எமது வலயக்கல்வி அலுவலகத்தில் ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றும் திரு.மூ.கேசவன் அவர்களின் அன்புத் தந்தையார்

### சபாபதிப்பிள்ளை முருகையா

அவர்கள் 25.07.2016 இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி கழகம்
வலயக் கல்வி அலுவலகம், தீவகம், வேலணை

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை கணக்காளர் சேவையில் பல்வேறு திணைக்களங்கள் அமைச்சுக்களில் கடமையாற்றி ஓய்வுபெற்ற

### தில்லையம்பலம் சுதந்திரபாலன்

பிரதம கணக்காளர் (இ.க.சே)

அவர்களின் மறைவையிட்டு அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை கணக்காளர் சேவை சங்கம்
-வடமாகாணம்.

## வேலைவாய்ப்புக்கள்

(i) Heavy Vehicle Drivers- 5 male
Salary :- 25,000/= + Food
(ii) Office Assistant - 4 female
Salary:- 10,000/=

இந்த வேலைவாய்ப்புக்களை பெறவிரும்பின் சுயவிவரக் கோவையுடன் நேரில் வந்து பதிவினை மேற்கொள்ளவும்.

(பதிவுக்கட்டணம் உண்டு)

**WINSTAR JOB BANK**
#106. தபாற் பெட்டிச் சந்தி. திருநெல்வேலி.
021 320 2789 / 070 236 3676

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்
### இராசையா சிவம்
(கார்க்கார அம்மானின் மனைவி)

தோற்றம்
20.01.1938

மறைவு
27.06.2016




கடந்த (27.06.2016) திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி இராசையா சிவம் அவர்களின் 31ஆம் நாள் நினைவு நிகழ்வுகள் இன்று (27.07.2016) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அவரின் மரணச்சடங்கில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த [illegible] தனிப்பட்ட அழைப்பாகவும் [illegible]

[illegible]

குடும்பத்தினர்.
077 844 8024

## 7 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
### சுப்பையா வைத்திலிங்கம்

அன்னை மடியில்
18.07.1936


ஆண்டவன் அடியில்
13.08.2009

ஆண்டுகள் ஏழாகியும் ஆறமுடியவில்லை அப்பா
அன்பான அன்பு அப்பாவை தேடி அலைகின்றோம்
எத்தனை உறவுகள் எங்கு எங்கு இருந்தாலும் அப்பா
எங்கள் அப்பாவிற்கு ஈடிணைவு இல்லை அப்பா
[illegible] ஆத்ம சாந்தி [illegible] வேண்டுகின்றோம் அப்பா

S.V.T கோபுரம் அரிசி ஆலை,
மரக்காரம்பளை வீதி, வவுனியா.

குடும்பத்தினர்.
இணுவில்.

## கண்ணீர் அஞ்சலி



வலயக்கல்வி அலுவலகம் கிளிநொச்சியில் தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றும் திரு.க.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் அன்புத் தந்தை

### வீரசக்தி கணபதிப்பிள்ளை

அவர்கள் 24.07.2016 அன்று காலமானதையிட்டுத் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்
வலயக்கல்வி அலுவலகம் - கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்பு விழா

தென்மராட்சி, ஜூலை 27

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 51 ஆவது ஆண்டு விழாவும் வளர்மதி கல்விக் கழகத்தின் பரிசளிப்பு நிகழ்வும் இன்று புதன்கிழமை பி.ப.4.30 மணிக்கு வளர்மதி கலையரங்கில் இடம்பெறும்.

நிலையத் தலைவர் ச.கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் முன்னாள் அதிபர் க.அருந்தவபாலன், வட மாகாண உள்ளூராட்சித் திணைக்கள தலைமைப்பீட சனசமூக அபிவிருத்தி அலுவலர் செ.தவநாயகம் மாகாண முதலமைச்சர் செயலக அபிவிருத்தி அலுவலர் க.கேசவரூபன் ஆகியோர் கலந்து கொள்வர். கல்விக் கழக மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கலும், கலைநிகழ்வுகளும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி எலிசபேத் மகாலட்சுமி நவரத்தினம்



கரம்பகம், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் லோட்டன் வீதி மடத்தடி ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி எலிசபேத் மகாலட்சுமி நவரத்தினம் 25.07.2016 திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா நவரத்தினத்தின் அன்பு மனைவியும், மகாரத்தினம் (உடுப்பிட்டி), மகாதேவி (மானிப்பாய்), ஜீவரத்தினம் (Canada), ரட்ணாதேவி (USA), பத்மினிதேவி (London) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினபாக்கியதேவி (சுட்டி ரீச்சர்), யோகரத்தினம், சிந்தியா, அருமைராஜா, இரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், நியோமி அனுஷியா (யாழ்ப்பாணக் கல்லூரி), தர்மகுமாரன் (உடுவில் மகளிர் கல்லூரி), நிரோஜன், தேனுகா (A.R.P.A), ஒசியா தனுஜன், யோயனா இயூனிசியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டேமியன், ஆவினி, அகல்யன், அஸ்விகன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (28.07.2016) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது வதிவிடத்தில் நடைபெற்று நல்லடக்கத்துக்காக கட்டைவேலி மெதடிஸ்த மிஷன் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லோட்டன் வீதி,
மடத்தடி லேன், மானிப்பாய். (J/3257) (11,17,18)

தகவல்: பிள்ளைகள், மருமக்கள்.

### திருமதி பாலசௌந்தரி பூபாலசிங்கம்



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசௌந்தரி பூபாலசிங்கம் நேற்று (26.07.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா-இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் சின்னத்துரை-அழகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் பூபாலசிங்கத்தின் அன்பு மனைவியும் ஜனகன், பானுசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் பாலயோகினி, பாலேந்திரன், பரமானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் புஸ்பவதி, கண்ணபிரான், பராசக்தி, மனோகரி, பாலச்சந்தர், புஷ்பமலர், ஜெயறஞ்சினி, ஜெகநாதன், சிவமலர், ஸ்ரீஸ்கந்தராசா, இராஜகுமாரி, பாலவதனி, கெங்கா ஆகியோரின் மைத்துனியும் சுபாஜினி, சுரேஸ்குமார், ரோஜினி ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (27.07.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 3.00 மணியளவில் பூதவுடல் காடாகடம்பை இந்து மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி திரேசம்மா செல்வநாதன்



உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசம்மா செல்வநாதன் (ஓய்வு பெற்ற ஆசிரியை) நேற்று (26.07.2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற எட்வேட் செல்வநாதனின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுவாம் பிள்ளை -ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வர்களான குணரத்தினம், ஞானரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அன்னபூரணம் காலஞ் சென்ற அலேஸ் வேதநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சேவியர் புஸ்பராஜா (லண்டன்), புஸ்பலதா (ஆசிரியை யா/சுதுமலை வடக்கு தமிழ் கலவன் வித்தியாலயம்), யூடின் புஸ்பநாயகம் (லண்டன்), மேரி புஸ்பமாலா (ஆசிரியை, யா/கொக்கு வில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும், இந்திராதேவி (லண்டன்), மேபிள் (லண்டன்), தோமஸ் இம்மானு வேல் (பொலிஸ் இன்ஸ்பெக்டர் K.K.S), கிருபைநாயகம், திருநாயகம், சுபோதினி, நிறஞ்சினி, அமுதினி ஆகியோரின் அன்பு மாமியும், போல் பிரியன், அன்றூ டிலான், டர்னி, லவனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சுபஞானபதி"
உயரப்புலம் ஆனைக்கோட்டை.

தகவல்: பெறாமக்கள்

### இராமலிங்கம் ஞானசேகரம் (பாபு)



புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் ஞானசேகரம் (பாபு) 25.07.2016 திங்கட்கிழமை பிரான்சில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங் கம் மற்றும் மல்லிகாதேவி தம்பதியினரின் சிரேஸ்ட புதல்வனும் காலஞ்சென்ற விஜியின் அன்புக் கணவரும் லலிதா (ஆசிரியை, யா/வைத்தீஸ்வராக் கல்லூரி), புஸ்பலதா (ஆசிரியை, கிளி/கோணாவில் மகாவித்தியாலயம்), இராம்குமார், ஹரிதாஸ், விஜயகுமாரி, இளங்கீரன், சசிகரன், (மிருக வைத்தியர், பாண்டியன் குளம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தவநேசன், உதயமூர்த்தி (ஆசிரியர், கிளி.ஸ்கந்தபுரம் இல 2 அ.த.க.பாடசாலை), கோகிலா, தனுசன், (உப தபாலதிபர், வட்டக்கச்சி), யாழினி, (அபிவிருத்தி உத்தியோகத்தர், கரைச்சி பிர.செயல கம்), மேனகா (ஆசிரியை, கிளி.இராமநாதபுரம் ம.வி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.07.2016 வெள்ளிக்கிழமை பிரான்சில் இடம் பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல .44/8, மணல்தறைலேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
0778367805

தகவல்: குடும்பத்தினர்

### சபாபதிப்பிள்ளை முருகையா

(ஓய்வுபெற்ற சாரதி- யாழ். மாவட்ட செயலகம்)



தோற்றம் : 16.03.1944
மறைவு: 25.07.2016

தொல்புரம் மத்தி, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை முருகையா (ஓய்வுபெற்ற சாரதி-யாழ். மாவட்ட செயலகம்) 25.07.2016 திங்கட்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான பூலோகராசா-செல்லம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், அரியசோதியின் அன்புக் கணவரும், முகுந்தன் (சுவிஸ்), பானுமதி (பிரான்ஸ்), சிவேந்திரன் (ஆண் பரிசாரகர், காரைநகர் பிரதேச வைத்தியசாலை), புவேந்திரன் (ஆண் பரிசாரகர், யாழ். போதனா வைத்திய சாலை), கேசவன் (ஆசிரிய ஆலோசகர், தீவக கல்வி வலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜிதா (சுவிஸ்), மதியழகன் (பிரான்ஸ்), மணிமேகலை, விஜயலட்சுமி (ஆசிரியர், யாழ்ற் றன் கல்லூரி-காரைநகர்), சகுந்தலா (ஆசிரியர், காரைநகர் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அருமை மாமனும், கஜானன், கோபிகன், வர்ஜினி, சாரங்கன், கார்த்திகன், பவித்திரன், கிருத்திகா, சாகித்தியா, நித்யஶ்ரீ, தரணிகா ஆகியோரின் அன்புப் பேரனும், வேலையா, காலஞ்சென்ற இராசாத்தி மற்றும் அன்னமுத்து பாக்கியம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07. 2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11 மணிக்கு தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள் ளவும்.

பத்தானை வீதி,
தொல்புரம், சுழிபுரம்.

தகவல்: குடும்பத்தினர்.
T.P: 0779079464

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சந்திரா பாஸ்கரன்



ஊர்காவற்றுறை நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 2A, மருதடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரா பாஸ்கரன் (25.07.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அல்பிரட்-மரியம்மா (மணி) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், பாஸ்கரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சறோஜா, யூஜினா மற்றும் யூஜின் (கனடா), யஸ்ரின் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான இந்திரா (பிரான்ஸ்), ஜெனின் (பிரான்ஸ்) மற்றும் றொபின் (பிரான்ஸ்), ஜகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், றோச், இம்மானுவேல், விஜயராணி (கனடா), சாந்தி (பிரான்ஸ்) ராதிகா (பிரான்ஸ்), குலேந்திரன் (பிரான்ஸ்) மதி (பிரான்ஸ்) பிளேவியன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், பா.திருஞான சம்பந்தர் காலஞ்சென்ற தர்மதேவி மற்றும் ரேணுகாதேவி, காலஞ்சென்ற பிறேமாதேவி மற்றும் திருவிளங்கம், காலஞ்சென்ற கணேஸ்வரன் மற்றும் பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.


அன்னாரது நல்லடக்க நிகழ்வுகள் இன்று (27.07.2016) புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் யாழ். புனித திரேசாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2A, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
கணவர்-பாஸ்கரன்
077 400 4787
021 320 2551

### கார்த்திகேசு அரியரெத்தினம்

பிறப்பு
20
.
06
.
1942



இறப்பு
26
.
07
.
2016

வேலணை வங்களாவடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு 149/16மோதாரை வீதி, கொழும்பு 15ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கார்திகேசு அரியரெத்தினம் நேற்று (26.07.2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்திகேசு-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சந்திரகாந்தா, காலஞ்சென்ற ஜெயகாந்தா, தேவகாந்தன், சிவகாந்தா, லக்சிகாந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக புஞ்சி பொரளை லங்கா மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இன்று(27.07.2016) புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று மாலை 4.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பொறளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
மைத்துனர்-சிவப்பிரகாசம்(சின்னராஜா)
தொலைபேசி : 077 7686629, 077 7970132

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முரளிக்கு ஆதரவாக

# முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் கொதிப்பு

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனை துரோகி என்று, இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்புக்கள் எழுந்துள்ளது.

இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர்களான மகேல ஜெயவர்த்தன, குமார் சங்கக்கார மற்றும் லசித் மலிங்க ஆகியோர் முரளிதரனுக்கு ஆதரவாக தமது கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர்.

இலங்கை – ஆஸ்திரேலிய கிரிகெட் தொடர் நடந்து வருகின்றது. இலங்கையில் நடைபெறும் இந்தத் தொடரில், ஆஸ்திரேலிய அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளராக முத்தையா முரளிதரன் நியமிக்கப்பட்டார். இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் திலங்க சுமதிபால, முத்தையா முரளிதரன் மீது கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார்.

முரளிதரனை 'துரோகி' என்று அவர் விழித்திருந்தார். இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் கருத்துத் தெரிவித்திருந்த முத்தையா முரளிதரன், நான் துரோகி என்றால் என்னை விடப் பெரிய துரோகி இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைதான். ஆஸ்திரேலிய அணிக்கு நான் 10 நாள்களுக்கு மாத்திரமே பந்துவீச்சு ஆலோசகராகப் பணிபுரிகிறேன். என்னை முழுத்தொடருக்கும் ஆலோசகராகப் பணிபுரிய வேண்டும் என்று கேட்டார்கள். ஆனால் நான் அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. இலங்கை அணி விளையாடும்போது என்னால் ஆஸ்திரேலிய அணியின் உடைமாற்றும் அறையிலிருந்து போட்டியை ரசிக்க முடியாது.

2011 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஒரு தடவை மாத்திரமே என்னை இலங்கை அணி ஆலோசகராகச் செயற்படும்படி கேட்டுக்கொண்டது. நான் அப்போது என்னால் முழு நேரமும் அதனை செய்ய முடியாது. என்னால் இயன்ற நேரங்களில் நாட்டுக்காக நான் அதைச் செய்கிறேன் என கேட்டுக்கொண்டேன். நாட்டில் பல சிறந்த கிரிக்கெட் வீரர்கள் உள்ளனர். அவர்களை விடுத்து வெளிநாடுகளில் உள்ளவர்களை அழைத்து பயிற்சி கொடுக்கின்றனர். அது மாத்திரமின்றி நிறத்தை பார்த்து பயிற்சி வழங்கியோருக்குப் பணம் வழங்குகின்றனர். 10 நாள்கள் நான் வழங்கும் பயிற்சியில்தான் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெறும் என்றால், உலகில் என்னை விடச் சிறந்த பயிற்சியாளர் யாரும் இருக்க மாட்டார்கள் என்று முரளி சாடியுள்ளார்.

முரளிக்கு ஆதரவு வழங்குவதாக இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளர் லசித் மலிங்க தனது முகநூலில் தெரிவித்தார். இங்கிலாந்துக்கான துடுப்பாட்ட ஆலோசகராகச் செயற்பட்டபோது இதேபோன்ற கடினமான விமர்சனங்களையே தான் எதிர்கொண்டதாக முன்னாள் அணித்தலைவர் மகேல ஜெயவர்த்தன தெரிவித்தார். முரளிதரனுக்கு ஆதரவான கருத்துக்களை அவர் வெளிப்படுத்தினார்.

இலங்கையின் மற்றொரு முன்னாள் அணித் தலைவரான குமார் சங்கக்கார, முத்தையா முரளிதரன் இலங்கை நாட்டின் சிறந்த மகன். அவர் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளத் தேவையில்லை. முரளிக்கு தன் நாட்டின் மீது அன்புள்ளது, மேலும் அவர் யாருக்கு வேண்டுமானாலும் ஆலோசகராக அல்லது பயிற்சியாளராகவும் செயற்படலாம். இலங்கை கிரிக்கெட் சபை முரளியிடம் பயிற்சியளிக்க இதுவரையும் கேட்டுக்கொண்டதில்லை. தனது நாட்டுக்காக தனது முழு திறமையையும் வெளிபடுத்தியுள்ளவர். நாட்டுக்காக செயற்பட எப்போதும் தயாராகவே உள்ளார். இலங்கை கிரிக்கெட் சபையே முரளியிடம் கேட்க வேண்டும். முக்கிய பிரச்சினைகள் ஏதும் முரளியுடன் இலங்கை கிரிக்கெட் சபைக்கு இருப்பின் அதை நிவர்த்தி செய்துக்கொள்ள இதுவே சரியான தருணம் – என்றார்.

இதேவேளை – அமைச்சர் மனோ கணேசன், ஒரு காலத்தில் தேசபக்தராக இருந்த முத்தையா முரளிதரன் இன்று துரோகி ஆகி விட்டார் என்று தனது முகநூலில் கருத்துத் தெரிவித்தார். (5)


## ஜோ ரூட்டே சிறந்தவர் யூசொப் தெரிவிக்கிறார்

நிகழ்கால கிரிக்கெட் உலகின் ஆகச் சிறந்த வீரராக ஜோ ருட் விளங்குவதாக பாகிஸ்தானின் முன்னாள் வீரர் யூசொப் தெரிவித்தார்.

நிகழ்கால கிரிக்கெட் உலகில் துடுப்பாட்டத்தில் இந்தியாவின் விராட் கோக்லி, இங்கிலாந்தின் ஜோ ரூட், ஆஸ்தி ரேலியாவின் சிமித், தென்னாபிரிக்காவின் வில்லியர்ஸ், நியூசிலாந்தின் வில்லியம்சன் ஐவரும் பிரதானமானவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களில் ரூட் தான் அகச் சிறந்தவர் என்று யூசொப் தெரிவித்தார்.

நிகழ்கால கிரிக் கெட் உலகம் சில அதி திறமையான வீரர்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இதில் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை. ஆனால், அவர்கள் அனை வரிலும் ரூட்தான் சிறந்த வீரராக இருக்க முடியும் என்று நம்புகிறேன்.

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் அவர் பதிவுசெய்த இரட்டைச் சதம் இதற்கு மிகச் சிறந்த சான்று என யூசொப் மேலும் தெரிவித்தார். (ம)




# இரண்டாவது ஆட்டத்தில் பழிதீர்த்தது இங்கிலாந்து

இங்கிலாந்து – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் 330 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்று முதல் டெஸ்ட்டில் அடைந்த தோல்விக்கு தக்க பதிலடி கொடுத்தது இங்கிலாந்து.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 589-8 என்ற நிலையிலிருந்தபோது, ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அதிகபட்சமாக ரூட் 254 ஓட்டங்களையும், குக் 105 ஓட்டங்களையும், பரிஸ்ரௌவ் 58 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக ரியாஸ் 3 இலக்குகளையும், ஆமிர், ரகட் அலி இருவரும் தலா 2 இலக்குகளையும், யாசீர் ஓர் இலக்கையும் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தானின் முதல் இன்னிங்ஸ் 198 ஓட்டங்களில் முடிவு கண்டது. அதிகபட்சமாக மிஸ்பா 52 ஓட் டங்களையும், ரியாஸ் 39 ஓட்டங்களையும், மக்சூட் 39 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இங்கிலாந்து சார்பாக வோக்ஸ் 4 இலக்குகளையும், மொயின் அலி, ஸ்டோக்ஸ் இருவரும் தலா இரு இலக்கு களையும், அண்டர்சன், புரோட் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.



பாகிஸ்தானை இரண்டாவது இன்னிங் ஸுக்காகத் துடுப்பெடுத்தாடப் பணித்து இன்னிங்ஸ் வெற்றிபெறக்கூடிய வாய்ப்பு இங்கிலாந்துக்கு இருந்தது. இருப்பினும் 391 ஓட்டங்கள் முன்னிலையுடன் தாம் இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப் பெடுத்தாடுவதாக அறிவித்து, மூன்றாம் நாள் முடிவில் 98-1 என்றிருந்தது. குக் 49 ஓட்டங்களுடனும், ரூட் 23 ஓட்டங்களு டனும் நான்காம் நாளுக்காகக் களமிறங்கினர். மழையும் அவ்வப்பொழுது குறுக்கிட்டமையால், ஆட்டத்தை விரைவில் இடைநிறுத்தி பாகிஸ்தானுக்கு வாய்ப்பு வழங்க வியூகம் வகுக்கப்பட்டது. ரி-20 ஆட்டங்களின் பாணியில் அடித்தாடினார் ரூட். 38 பந்துகளில் ரூட்டின் அரைச்சதம் பதிவானது. ஒருநாள் ஆட்டங்களின் பாணியில் விளையாடினார் குக். ஓட்டங்கள் மிகையாக அதிகரித்தன. 173-1 என்ற நிலையில் இருந்த பொழுது இங்கிலாந்து இன்னிங்ஸை இடைநிறுத்தியது. பாகிஸ்தானுக்கு இலக்காக 565 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. மசூட், அசார் அலி இருவரையும் அடுத்தடுத்து வீழ்த்தினார் அண்டர்சன். 25 ஓட்டங் களில் இரு இலக்குகளை இழந்தது பாகிஸ் தான். ஹபீஸ், யுனிஸ்கான் இருவரும் இணைப்பாட்டமாக 50 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். பாகிஸ்தான் சார்பாக பதிவான ஆகச் சிறந்த இணைப்பாட்டமாகவும் இதுவே பதிவானது. 42 ஓட்டங்களுடன் ஹபிஸை வீழ்த்தினார் மொயின் அலி. யுனிஸ்கான், மிஸ்பா, சபிக் மூவரும் ஓரளவு தாக்குப் பிடித்த போதிலும், இலக்கை எட்டும் வகையில் அமையவில்லை. பின்வரிசை திடீர்ச் சரிவுகாண 234 ஓட்டங்களில் சுருண்டு 330 ஓட்டங்களால் படுதோல்வியடைந் தது பாகிஸ்தான்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக அண்டர்சன், மொயின் அலி, வோக்ஸ் மூவரும் தலா மூன்று இலக்கு களையும், ரூட் ஓர் இலக்கையும் வீழ்த்தினார். ஆட்டநாயகனாக ரூட் தெரிவானார். (ம)



## இந்தியாவுக்கு உதவிய பாக்.

இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளரான மொகமட் சமிக்கு பாகிஸ்தானின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான அக்தர் உதவியதாக தற்போது தெரியவந்தது.

பந்தை வீசுவதற்காக வேகமாக ஓடிவரும்பொழுது சமி அவ்வப்பொழுது தனது கட்டுப்பாட்டை இழந்து இலகுவான பவுண்டரிகளை வழங்குவதுண்டு.

இதனால் டோனி, கோக்லி இருவரும் மிக முக்கியமான பந் துப் பரிமாற்றங்களை அவருக்கு வழங்குவதில்லை. அது மட்டுமல்லாமல் காயங்களும் அவரை அச்சுறுத்தின. ஆனால், தீவுகளுக்கு எதிரான டெஸ்ட்டில் சமியின் பந்துவீச்சு மாறுபட்டிருந்தது. இது குறித்து கேட்டபொழுது, சமி, அக்தர் தனக்கு உதவியதாகத் தெரிவித்தார். கடந்த ஐ.பி.எல். பருவகாலத்தில் இந்தியா வந்திருந்த அக்தர், காயமடையாமல் பயிற்சி செய்யவும், கட்டுப்பாட்டை இழக்காமல் பந்துவீசவும் எனக்கு கற்றுத் தந் தார். பந்துவீச்சில் மாற் றத்தை உடனடியாக ஏற்படுத்துவது கடி னம். எனவே ஐ.பி.எல். தொடர் முடிந்த பிற்பாடு படிப்படியான மாற்றங்களை ஏற்படுத்தினேன் என சமி மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சினின் வாழ்த்து

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான அபார வெற்றிக்காக இந்திய அணிக்கு வாழ்த்துத் தெரிவித்தார், அந்த அணியின் முன்னாள் வீரரான சச்சின்.

நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்றுள்ளது. அன்டிகுவாவில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இந்தியா இன்னிங்ஸ் மற்றும் 92 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றிக்கு கோக்லியின் இரட்டைச் சதமும், அஸ்வினின் சகலதுறை அசத்தலும் பிரதான காரணங்களாக அமைந்தன. இந்திய அணிக்கு வாழ்த்துத் தெரிவித்த சச்சின், கோக்லிக்கும் அஸ்வினுக்கும் தனித்தனியாகவும் வாழ்த்துத் தெரிவித்தார். அந்நிய மண்ணில் கிடைத்த ஓர் அருமையான வெற்றி. விராட் கோக்லியின் இன்னிங்ஸ் அபாரமாக இருந்தது. அஸ்வினின் சகலதுறைத் திறமை வியக்க வைத்தது. இந்த வெற்றிகள் தொடரவேண்டும் என சச்சின் தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்தார். (ம)





# வளர்மதியின் கரப்பந்தாட்டம்: ஆவரங்கால் மத்தி. சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 27

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

வளர்மதியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதியது. ஐந்து செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தின் முதல் மூன்று செற்களையும் முறையே 25:21, 27:25, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி, அடுத்த இரு செற்களுக்கும் வேலை வைக்காமல் 3:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது.


மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் முதல் செற்றை 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் கலைமதி கைப்பற்றிய போதிலும், அடுத்த இரு செற்களையும் முறையே 26:24, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி, மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது இளவாலை மத்திய வி.கழக அணி. (ம-422-23)

# பிரம்படி சம்பியன்

கரணவாய், ஜூலை 27

வளர்மதியின் துடுப்பாட்டத் தொடரில், ஓர் ஓட்டத்தால் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது கொக்குவில் பிரம்படி அணி.

வளர்மதியின் மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் கொக்குவில் பிரம்படி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வடமராட்சி சிற்றி ஸ்போர்ட்ஸ் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பிரம்படி விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து, 38 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் சிற்றி ஸ்போட்ஸின் சார்பாக டெஸ்மன், சூரி, பிரணவன் மூவரும் தலா இரு இலக்குகளை வீழ்த்தினர். 39 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிற்றி ஸ்போர்ட்ஸ் அணி 7.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 37 ஓட்டங்களைப் பெற்று ஓர் ஓட்டத்தால் கிண்ணத்தைத் தவறவிட்டது. பந்து வீச்சில் பிரம்படியின் சார்பாக அயன் 4 இலக்குகளை வீழ்த்தினார். (ம-108)



பிரபல கால்பந்தாட்ட வீரரான ரொனால்டோ, அமெரிக்க குத்துச்சண்டை வீரரான மைக்கிரேகருடன் சண்டையிடத் தயாராவது போன்றதொரு படத்தை, தனது சமூக வலைத்தளத்தில் பகிர்ந்துள்ளார். யூரோக் கிண்ணத்தைக் கைப்பற்றிய பின்னர், பல நாடுகளுக்கும் சுற்றுலா சென்றுவரும் ரொனால்டோ அமெரிக்காவுக்குச் சென்ற போதே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. (ம)

# கொம்பாந்தறை இளைஞரின் துடுப்பாட்டத் தொடர்கள்

கரணவாய், ஜூலை 27

கொம்பாந்தறை இளைஞர் விளையாட்டு கழகம் வடமாகாண ரீதியாக துடுப்பாட்டத் தொடர்களை நடத்தத் திட்டமிட்டது.

6 வீரர்கள் பங்கு பற்றும் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட தொடர், 9 வீரர்கள் பங்குபற்றும் 8 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட தொடர், 11 வீரர்கள் பங்குபற்றும் 12 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட தொடர் என மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ள இந்தத் தொடர்களில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-108)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 27

*திருமகளின் கரப்பந்தாட்டம்*

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும், கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கச்சாய் வொலிகிங்ஸ் அணியை எதிர்த்து நீர்வேலி காமாட்சியம்பாள் அணி மோதவுள்ளது. இரவு 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில், மூளாய் விக்டோரி அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணி மோதவுள்ளது. இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் நண்பர்கள் அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி அணி மோதவுள்ளது.

*இருதயராஜா வி.க. தொடர்*

மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து புங்குடுதீவு பாரதி அணி மோதவுள்ளது. மாலை 5மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து அம்பிகைநகர் சிறி மகேஸ்வரி அணி மோதவுள்ளது. (ம-23)

# விக்கினேஸ்வரா வி.க. முடிவுகள்

புதுக்குடியிருப்பு, விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் கடந்த ஞாயிறு, திங்கட்கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு;

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் இரணைப்பாலை சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து வட்டுவாகல் உதயசூரியன் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் இரணைப்பாலை சென். அன்ரனிஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கிளிநொச்சி உழவர் ஒன்றிய அணியை எதிர்த்து முல்லைத்தீவு ஜங்கர்ஸ் அணி மோதியது. சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை சென்ற இந்த ஆட்டத்தில் கிளிநொச்சி உழவர் ஒன்றிய அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் அலையோசை அணியை எதிர்த்து ஆனந்தபுரம் அண்ணா அணி மோதியது. இந்த ஆட்டத்தில் அலையோசை அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. நான்காவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் லக்கி ஸ்ரார் அணியை எதிர்த்து மன்னார் சென். அன்ரனிஸ் மோதியது. இந்த ஆட்டத்தில் மன்னார் சென். அன்ரனிஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து உழவர் ஒன்றிய அணி மோதியது. இந்த ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவாஸ்கரின் சாதனை தொலைந்தது

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான கவாஸ்கர், 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த ஒளிநாடா தொலைந்து போனதாக அக்காலத்தில் தொடர்களை ஒளிப்பதிவு செய்துவந்த தூர்தர்சன் அறிவித்தது.
1987 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டத்தில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதின. இந்த ஆட்டம் இந்தியாவுக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க ஆட்டமாகப் பதிவாகியது. கவாஸ்கர் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து குறித்த மைல்கல்லை எட்டிய முதல் இந்திய வீரர் என்று முத்திரை பதித்திருந்தார். இதுவே இந்த ஆட்டம் பெரிதும் பேசப்படக் காரணமாகும். இந்த நிலையில் கவாஸ்கர் 10 ஆயிரமாவது ஓட்டத்தை எட்டிய ஒளிநாடாவை தவறவிட்டுள்ளதாக அக்காலத்தில் தொடர்களை ஒளிபரப்பி வந்த தூர்தர்சன் அறிவித்தது. (ம)



## முரளியின் ஆலோசனையின்படி இலங்கையைச் சுருட்டியது ஆஸி.

இலங்கை- ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாளில் 117 ஓட்டங்களில் இலங்கையின் முதல் இன்னிங்ஸ் முடிவு கண்டதுடன், பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிவரும் ஆஸ்திரேலியா நாள் முடிவில் 66-2 என்றுள்ளது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆஸியின் வேகப்பந்துவீச்சு இலங்கையின் ஆரம்பத்தை அடியோடு தகர்த்தது. கருணாரத்னவை வீழ்த்தினார் ஸ்ராக். சில்வாவை வீழ்த்தினார் ஹசில்வூட். எட்டு ஓட்டங்களுடன் நடையைக்கட்டினார் மென்டிஸ். 18 ஓட்டங்களுக்கு மூன்று இலக்குகளை இழந்தது இலங்கை. சந்திமல், மத்தியூஸ் இருவரும் இரட்டை எண்களை எட்டினர். இருப்பினும் ஒரு கச்சிதமான இணைப்பாட்டத்தை அரங்கேற்ற முடியவில்லை. இருவரும் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். சில்வா, குசல் பெரோரா, கே.பெரேரா மூவரையும் வீழ்த்தி மத்திய வரிசையைத் தகர்த்தார் லையன். 117 ஓட்டங்களில் சுருண்டது இலங்கை.
பந்துவீச்சில் ஆஸியின் சார்பாக கசில்வூட், லையன் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், ஸ்ராக், ஸ்ரீவ் கெபி இருவரும் தலா இரு இலக்குகளையும் வீழ்த்தினர்.
பதிலுக்கு களமிறங்கிய ஆஸ்திரேலியாவுக்கும் ஆரம்பம் மோசமாகவே அமைந்தது. பேர்ண்ஸை மூன்று ஓட்டங்களுடன் போல்ட் செய்தார் கேரத். வோர்ணரை ஓட்டமெதனையும் பெறவிடாது போல்ட் செய்தார் பிரதீப். கவாயா, சிமித் இருவரும் இணைந்து இணைப்பாட்டத்தைக் கட்டியெழுப்பினர். பிறிதொரு இலக்கை இழக்காமல் 66 ஓட்டங்களை ஆஸ்திரேலியா எட்டியிருந்த பொழுது மழை குறுக்கிட நாள் முடிவுக்கு வந்தது. சிமித் 28 ஓட்டங்களுடனும், கவாயா 25 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

## ஊக்கமருந்து விவகாரத்தில் சிக்கித் தவிக்கும் இந்தியா

ரியோ ஒலிம்பிக் தொடரில் இந்தியா சார்பாகக் களமிறங்கவிருந்த குண்டு எறிதல் வீரர் இந்தர்ஜித் சிங், ஊக்கமருந்து விவகாரத்தில் சிக்கியுள்ளார்.
பிரேஸிலின் ரியோடி ஜெனிரோ நகரில் இன்னும் சில தினங்களில் ஒலிம்பிக் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இந்த நிலையில் ஊக்கமருந்து விவகாரம் இந்தியாவையும் ஆட்டிப் படைக்க ஆரம்பித்துள்ளது. மல்யுத்த வீரர் நர்சிங் யாதவ் ஊக்க மருந்தில் சிக்கிய நிலையில் ஒலிம்பிக்குக்கு தகுதி பெற்ற மேலும் ஒரு வீரர் சிக்கலில் மாட்டியுள்ளார். குண்டு எறிதல் போட்டியில் களமிறங்கவிருந்த இந்தர்ஜித் சிங் என்ற வீரரே அவ்வாறு சிக்கியுள்ளார்.



எனினும் தான் ஊக்கமருந்தை உட்கொள்ளவில்லை எனத் தெரிவித்த இந்தர்ஜித் சிங், இந்த விவகாரத்தில் ஏதோ சதி இருப்பதாகவும் தெரிவித்தார்.
இதே கருத்தை நர்சிங் யாதவும் தனது விடயத்தில் வலியுறுத்தினார். (ம)

## கெர்பரால் அச்சமில்லை; தெரிவிக்கிறார் செரீனா

பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தலில் கெர்பரால் தன்னை வீழ்த்த முடியும் என்று கருதவில்லை எனத் தெரிவித்தார் செரீனா வில்லியம்ஸ்.
பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தலில் கடந்த பல மாதங்களாக முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்த செரீனா வில்லியம்ஸ் தற்போது தனது தரப்படுத்தலை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் செரீனாவுக்கும் இரண்டாம் இடத்திலிருந்த கெர்பருக்கும் இடையே 6 ஆயிரத்துக்கும் அதிகமான புள்ளிகள் வித்தியாசம் பேணப்பட்டது. இதன்படி செரீனா 12 ஆயிரத்து 500 புள்ளிகளைப் பெற்றிருந்தார். கெர்பர் 6 ஆயிரம் புள்ளிகளைப் பெற்றிருந்தார்.
ஜனவரியில் நடைபெற்ற ஆஸ்திரேலியத் தொடரின் இறுதியில் செரீனாவை வீழ்த்தி சம்பியனானார் கெர்பர். அன்றிலிருந்து செரீனா தொடர்ந்து பின்னடைவுகளையே சந்தித்து வந்தார். காயமும் அவருக்கு பெரிய பிரச்சினையாக வந்தமைந்தது. அதேநேரம் கெர்பர் சில கிண்ணங்களைக் கைப்பற்றினார். இதனால் தரப்படுத்தலில் செரீனா இறக்கமும் கெர்பர் ஏற்றமும் கண்டனர். ஆனால் அண்மையில் முடிவடைந்த விம்பிள்டனைக் கைப்பற்றி தனது தரப்படுத்தலைத் தக்கவைத்தார் செரீனா.
செரீனா தற்போது முதலிடத்தில் பெயரிடப்பட்டிருந்தாலும் அவருக்கும் கெர்பருக்கும் இடையே ஆயிரத்து எண்ணூறு புள்ளிகள் வித்தியாசமே பேணப்படுகிறது. புதிதாக வெளியான தரப்படுத்தலின்படி 8 ஆயிரத்து 300 புள்ளிகளுடன் செரீனா முதலிடத்தில் உள்ளார். 6 ஆயிரத்து 500 புள்ளிகளுடன் கெர்பர் இரண்டாம் இடத்தில் உள்ளார். இன்னும் ஒரு பெரிய கிண்ணத்தைக் கெர்பர் கைப்பற்றுவாராயின் நிச்சயம் செரீனாவைப் பிடித்து விடலாம். ஆனாலும் கெர்பரால், தான் அச்சத்தை உணரவில்லை எனத் தெரிவித்தார் செரீனா வில்லியம்ஸ்.
தரப்படுத்தலில் கெர்பர் என்னைப் பின்னுக்குத் தள்ளுவார் என்று கருதவில்லை. கெர்பர் என்னை நெருங்கிவர காயம் காரணமாக நான் தொடர்களிலிருந்து விலகியிருந்தமையே காரணம். ஆனால் தற்போது நான் முழு உடல் தகுதியுடன் உள்ளேன். எனவே நான் பின்தள்ளப்படுவேன் என்ற அச்சம் என்னிடத்தில் இல்லை என செரீனா மேலும் தெரிவித்தார். (ம)


## கால்பந்தாட்டக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ். மாவட்ட பாடசாலைகளின் கால்பந்தாட்ட சம்மேளத்தினால் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே கால்பந்தாட்டத் தொடரொன்றை முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல் நாளை நடைபெறவுள்ளது. கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்ற விரும்புபவர்கள் பிற்பகல் ஒரு மணிக்கு சமுகம் தருமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-422)

மாதவாடகைக்கு
10.5 அடி மிற்சுபிசி ஹண்டர் வாகனம்
(FULL ALUMINIUM BODY)
சாரதியுடன் மாதவாடகைக்கு உண்டு
தொடர்புக்கு.0775757411,0775757217

விற்பனைக்கு
டென்மார்க் BUKH ஜெனரேட்டர் 35 HP டைனமோ 28 KW 1500 RPM
தானியங்கி ரகம் (SELFSTART) பாவனையிலுள்ள ஒரிஜினல் ஜெனரேட்டர்
விற்பனைக்கு
தொடர்புக்கு.0775757411,0775757217

தேவை
யாழ். நகரில் உள்ள அச்சகத்துக்கு கணினி வடிவமைப்பாளர்கள் தேவை.
தகுதியுடையோர்
இன்று (27.07.2016) நேரில் சமுகம் தரவும்.



ES Printers
359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.